வைரவிழா ஆண்டு

கல்கி

KALKI
30.6.2002
ரூ.6.00



"ஜெயலலிதாவுக்கு நன்றி!"

-ஸ்டாலின் பேட்டி!


Heinz
Trust • Taste • Nutrition
என்னையே நம்பி
இருக்கும் என்
குழந்தையின்
ஊட்டசத்துக்கு நான்
யாரை நம்புவது?
என் குழந்தைதான் எனக்கு ஒப்பற்ற செல்வம். அவள் என்னையே நம்பியிருப்பதால், கொஞ்சம் கவலைப்படுவது இயற்கைதான். பெரும்பாலான தாய்மார்கள், 'அவளுக்கு சரியான ஊட்டசத்து கிடைக்கிறதா, சரியான முறையில் வளர்ச்சி இருக்கிறதா?' என்றெல்லாம் கவலைப்படுகிறார்கள். ஆனால் எனக்கு அந்த கவலை இல்லை. ஏனெனில், ஃபாரெக்ஸ் இருக்கிறதே!
ஃபாரெக்ஸை எளிதில் தயார் செய்ய முடியும். எனவே, குழந்தைக்கு பசி எடுத்தவுடனேயே ஊட்டலாம். அது மட்டுமா? ஃபாரெக்ஸ் ஒரு விசேஷ முறையில் தயாரிக்கப் படுவதால் எளிதில் செரிக்கக் கூடியது. மற்றும், பால், கோதுமை, அரிசி
பழங்கள் மற்றும் காய்கறிகளின் இயற்கையான நற்குணங்க
அதிசிறப்பாக அப்படியே இருக்கும். மேலும், ஃபாரெக்ஸ் எ
குழந்தைக்கு புரோட்டீன்ஸ், கார்போஹைட்ரேட்
விட்டமின்ஸ் மற்றும் மினரல்ஸின் சரியான கலவை அடங்கிய
சமச்சீர் ஊட்டசத்து அளிக்கிறது. எனவே, எ
குழந்தையின் சரியான வளர்ச்சிக்கு வீட்டி
தயார் செய்த ஆகாரங்களுடன், நான் நம்புவது
ஃபாரெக்ஸைதான்.
எனவே, 50 ஆண்டுகளுக்கும் மேலாக, ப
தலைமுறைகளாக தாய்மார்கள் ஃபாரெக்ஸை
நம்புவதில் ஆச்சரியம் இல்லை. ஒவ்வொரு
முறையும் என் குழந்தை சிரிக்கும் போது
'நன்றி, ஃபாரெக்ஸ் அம்மா!' என்று கூறுவது
போல் இருக்கும்.
ஃபாரெக்ஸ்®
வளர்ச்சிக்கு சிறந்த வழி
6 ருசிகரமான சுவைகளில்
ரைஸ், வீட், வீட் வெஜிடபிள், வீட் மிக்ஸ்டு ஃப்ரூட்ஸ், வீட் ஆப்பிள்
வீட் எக்
IMPORTANT NOTICE: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY, INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF A
महत्वपूर्ण सूचना: माँ का दूध आपके बच्चे के लिये सर्वोत्तम है. ४ महीने के बाद ही उसे शिशु आहार देना शुरू क







நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : துணிச்சல், தன்னம்பிக்கை, அறிவாற்றல், செல்வாக்கு, மதிப்பு இந்த வாரம் உயரப் போகுது. பதவி உயர்வு, ஊதிய உயர்வு, இடமாற்றம் போன்றவை மனசை சந்தோஷமாக்கும். எதிர்ப்புகள் இருக்காது. அரசியல்வாதிகளுக்குப் புகழ், பாராட்டு உண்டு. கொடுக்கல் வாங்கல் அளவாகத்தான் கைகொடுக்கும். பேச்சில் அவசரம், பதற்றம் வேண்டாம். குடும்பத்துல சுபகாரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஆதாயம் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம்.



ரிஷபம் : மன அமைதி, இனிமை, சந்தோஷம் எல்லாமே இந்த வாரம் உங்களுக்கு உண்டு. எல்லா கிரகங்களும் உங்களுக்குச் சாதகமா இருக்கறதால, உங்க திறமை, சாமர்த்தியம் பிரகாசமா இருக்கும். அலுவலகங்களில் இதுவரை இருந்து வந்த பிரச்னைகள் இப்ப மாயமாகிவிடும். புதிய முயற்சிகள் கைகூடும். கஷ்டமான காரியங்கள் கூட உங்க திறமையால வெற்றி பெறும். இதனால் புகழ், பாராட்டு உண்டு. சிலர் புதிய தொழில்ல ஈடுபட சந்தர்ப்பம் வரும். தொழில் சம்பந்தமான பயணம் சிலருக்கு உண்டு. பெண்கள் நகை நட்டு, உடைகள் வாங்க வாய்ப்பிருக்கு.



மிதுனம் : பிக்கல், பிடுங்கல், சிக்கல், டென்ஷன், கோபம் எல்லாம் இந்த வாரம் போயிந்தே. பண வசதிக்குப் பஞ்சமில்லை. உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். அலுவலகத்தில் சின்னச் சின்னப் பிரச்னைகள் வந்தாலும் உங்க புத்தி சாதுர்யத்தால வெற்றி பெறுவீங்க. புதிய பொறுப்புகள் சிலருக்கு வந்து சேரும். கொடுக்கல் வாங்கல் வியாபாரிகளுக்குச் சில சமயம் கைகொடுக்கும். பத்திரிகை, எழுத்து துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு எதிர்பாராத வளர்ச்சி உண்டு. அரசியல்வாதிகள் விழிப்போடு செயல்படறது நல்லது.



கடகம் : தடைகள், இடையூறுகள், குறுக்கீடுகள் எவ்வளவு ஸ்பீடாக வந்தாலும் அவை இந்த வாரம் உடைபடும். வியாபாரிகளுக்கு இதுவரை வசூலாகாத பணம் வந்து சேரும். புதிய முயற்சிகள்ல இறங்க வாய்ப்பிருக்கு. வெளிநாட்டுல இருந்து நல்ல தகவல் வந்து சேரும். குடும்பத்துல இனிமை நிலவும். மங்களகரமான விசேஷங்கள் நடக்க வாய்ப்பு கூடிவரும். புதியவர்களிடம் பழகும்போது எச்சரிக்கை வேணும். வெளியூர் பயணம் போனா பாதுகாப்பு அவசியம். கோர்ட், வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம்.




சிம்மம் : கோயில்கள் டூர், புண்ணியதரிசனம், தலயாத்திரை, மகான் வழிபாடு போன்றவற்றுக்கு இந்த வாரம் வாய்ப்பிருக்கு. மனத்தில் அமைதி கூடும். பொறுப்புகளுக்கு ஏற்றபடி பெருமை, மதிப்பு, செல்வாக்கு உயரும். அலுவலகத்தில் புகழ், பாராட்டு உண்டு. அரசு விவகாரங்களில் அனுகூலம் உண்டு. பணவசதி தாராளமா இருக்கும். சிலருக்குப் புதிய தொழில்ல ஈடுபட வாய்ப்பிருக்கு. சட்டம், காவல் இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்குப் புதிய பொறுப்புகள் கிடைக்கும்.




கன்னி : மகிழ்ச்சி, பணவசதி, இன்பம், இனிமை யாவும் இந்த வாரம் உங்களுக்கு உண்டு. பத்தாமிடத்தில் குரு சஞ்சாரம் என்பதால் எதைப் பற்றியும் கவலைப் பட வேண்டாம். அலுவலகங்களில் உயரதிகாரிகள் பாராட்டு கிடைக்கும். கஷ்டமான காரியங்களையும் உங்க திறமையால சுலபமா முடிச்சு வெற்றி காண்பீங்க. வியாபாரிகளுக்கு லாபம் கொட்டும். பொருளாதார நிலை அபிவிருத்தி அடையும், குடும்பத்துல சந்தோஷ மழை தூவும். பேசும்போது அவசரம், பதற்றம் வேண்டாம்.



கமலாகாமேஷின் குடும்பத்தில் குதூகலமும் ஒற்றுமையும் நிரம்பியிருக்குமாம்! துலாம் ராசிக்காரராச்சே!




துலாம் : எண்ணங்கள், திட்டங்கள், முயற்சிகள், ஆசைகள் இந்த வாரம் நடக்க வாய்ப்பிருக்கு. தெய்வ பலம் கூடும். சுபகாரியங்கள், திருமண முயற்சிகள் நடக்க சந்தர்ப்பம் வரும். இதுவரை வேலை இல்லாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்பு வந்து சேரும். எதிரிகள் விலகிப் போவாங்க. எதிர்ப்புகள் இருக்காது. அழகு சாதனங்கள் அலங்காரப் பொருட்கள், உலோகம் ஆகிய இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். குடும்பத்துல குதூகலம், ஒற்றுமை நிறைந்திருக்கும். பத்திரிகை துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு அனுகூலமான பலன் உண்டு.



விருச்சிகம் : எதிர்ப்புகள், எதிரிகள், பயம், துன்பம் எதுவும் இந்த வாரம் இருக்காது. மனத்தில் தெளிவு பிறக்கும். எடுத்தக் காரியத்தை எப்பாடுபட்டாவது நிறைவேற்றிடுவீங்க. அலுவலகத்தில் உயரதிகாரிகள் பாராட்டைப் பெறுவீங்க. தொழிலில் இதுவரை இருந்து வந்த மந்த நிலை இனி இருக்காது. இழுத்தடித்துக் கொண்டிருந்த பணம் இப்ப வந்து சேரும். குடும்பத்துல மகிழ்ச்சி கூடும். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வரும். அதன் மூலமா ஆதாயம் உண்டு. அரசியல்வாதிகள் எச்சரிக்கையா அறிக்கை விடுவது நல்லது.



தனுசு : மனசுல தெளிவு, உற்சாகம், குதூகலம், சந்தோஷம் ஆகியவை இந்த வாரம் அதிகமா ஏற்படும். எந்தக் காரியத்தை எடுத்தாலும் வெற்றி தான். எல்லா பணிகளிலும் உற்சாகமான மனநிலை ஏற்படும். புதிய வேலை முயற்சிகள் கைகூட வாய்ப்பிருக்கு. நல்ல தகவல் ஒன்று வந்து சேரப் போகுது. பயணத்தால அனுகூலம் உண்டு. கலைத் துறை, எலக்டிரிக்கல்ஸ், தோல் வகைகள் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு ஆதாயம் உண்டு. உறவினர்கள், நண்பர்கள் உதவ முன் வருவார்கள்.



மகரம் : பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு, புதிய முயற்சிகள் ஆகியவை இந்த வாரம் கைகூடும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. சுமூகமான சூழ்நிலை உருவாகும். மதிப்பு, கௌரவம், செல்வாக்கு உயரும். பணவசதி தாராளமா கிடைக்கும். சிலர் வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. கடன் தொல்லையிலிருந்து விடுபட்டு மனசுல தெளிவு பிறக்கும். பெண்களுக்கு இது உற்சாகமான வாரம். மாணவர்கள் உழைப்பு, திறமை வீண் போகாது. எதிலும் நிதானம் அவசியம். பதற்றம், அவசரம் வேண்டாம்.



கும்பம் : புகழ், பாராட்டு, செல்வாக்கு, கௌரவம் எல்லாம் இந்த வாரம் உங்களுக்குக் கிடைக்கப் போகுது, உற்சாகமான மனநிலை ஏற்படும். பொருளாதார நிலையில் அபிவிருத்தி உண்டு. உறவினர்கள், நண்பர்கள் உதவ முன் வருவாங்க. எதிர்ப்புகள் இருக்காது. உயரதிகாரிகள் பாராட்டைப் பெறுவீர்கள். சுயமாக தொழில் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. புதிய பொறுப்புகள் சிலருக்கு வந்து சேரும். மனசுல துணிச்சல் தன்னம்பிக்கை பிறக்கும். பத்திரிகை, புத்தகம், அச்சகம் நடத்துபவர்களுக்கு லாபம் உண்டு. அரசியல்வாதிகள் எந்தக் காரியத்திலும் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது.



மீனம் : பிரச்னை, கோபம், சண்டை, இழுபறி ஆகியவை இந்த வாரம் நீங்கும். அலுவலகத்தில் இருந்து வந்த பிரச்னைகள், ஒற்றுமையின்மை மறையும். எடுத்த காரியத்தைத் தலைகீழாக நின்றாவது முடிப்பீர்கள். பணவசதி சரளமா இருந்து வரும். பெயர், புகழ் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு முன்னேற்றம் உண்டு. வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையில் இதுவரை இருந்து வந்த மனக் கசப்பு இருக்காது. பெண்கள் தத்தம் எண்ணம் நிறைவேறப் பெறுவார்கள்.

ஜூன் 26 முதல்
ஜூலை 2 வரை

அக்னிசர்மா
பக்கம்

ஏழை மாணவ மணிகளுக்கு உதவி:

ரூ. 2,00,000

சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டதைக் காட்டிலும் இந்தக் கல்வி ஆண்டுக்கு (2002 - 2003) ரூ.25,000/- அதிகரித்து, மொத்தம் ரூ, 2,00,000/- உதவித் தொகை வழங்கப்படவிருக்கிறது படிப்பில் சிறந்து விளங்குகிற ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு மட்டுமே இந்த உதவி. உதவித் தொகைகள் பின்வருமாறு விநியோகமாகும்:

- ஒருவருக்கு ரூ. 2,500 வீதம் எட்டு பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ. 20,000/-
- ஒருவருக்கு ரூ. 2,000 வீதம் இசை அல்லது நாட்டியம் பயிலும் நான்கு மாணவர்களுக்கு ரூ. 8,000/-
- ஒருவருக்கு ரூ. 1,500 வீதம் 50 கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 75,000/-

அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை



- ஒருவருக்கு ரூ. 1000 வீதம் 70 மேல் நிலைப்பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ. 70,000/-
- ஒருவருக்கு ரூ. 750 வீதம் 36 உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கு ரூ. 27,000/-

இவற்றுள் அமரர் கல்கி

படம் : ஸ்ரீஹரி





படித்த மூன்று பள்ளிக்கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- ❖ விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட எழுத வேண்டும். தட்டச்சு, கம்ப்யூட்டர் கடிதங்கள் நிராகரிக்கப்படும். பார்வையற்ற மாணவர்களுக்கு மட்டும் இதில் விதிவிலக்கு உண்டு. பிறர் எழுதித் தர கைநாட்டு பதிக்கலாம்.
- ❖ தபால் மூலம் மட்டுமே மனுக்களை அனுப்பலாம். கூரியர் கூடாது.
- ❖ அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும். தாற்காலிக அனுமதி செல்லுபடியாகாது.
- ❖ படிப்பில் சிறந்தவர்களாக விளங்கி, பெற்றோர் உதவியுடன் மட்டுமே கல்வியைத் தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும்.
- ❖ மேற்கூறிய அனைத்தையும் உறுதிப்படுத்த கல்வி நிலையத்தின் முதல்வருடைய சான்றிதழை இணைக்கவும்.
- ❖ சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் நகலை முதல்வருடைய கையொப்பத்துடன் அனுப்பவும்.
- ❖ ஊனமுற்றவர்கள் மேற்படி சான்றிதழ்கள் தவிர, தங்கள் ஊனம் பற்றிய விவரத்தையும் முதல்வருடைய சான்றிதழாக மட்டுமே அனுப்புதல் வேண்டும். இத்தகையோருக்கு முன்னுரிமை உண்டு.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி: ஜூலை 31, 2002

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தேவைப்படாத சான்றிதழ்களை அனுப்புதல் அம்மாணவருக்குப் பின்னடைவாக விளங்கும்.

உதவித் தொகை பெறத் தகுதியுடைய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து கிடையாது. சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
புது எண் 14, பழைய எண் 35, நான்காவது பிரதான சாலை,
கஸ்தூர்பா நகர், அடையாறு, சென்னை - 600 020.



அப்போதே நேர்மையான விசாரணை. அரசியல்வாதிகளும், மேலதிகாரிகளும் இவர் கையாளும் விஷயங்களில் தலையிட விரும்புவதில்லை. தலையீடுகளுக்கு இவர் மதிப்பளிப்பதும் இல்லை.

ரௌடிகள் ராஜ்ஜியம், கட்டப் பஞ்சாயத்து, திருட்டுகள் காரைக்குடியில் இப்போது முற்றிலுமாக முடங்கி

ஆனஸ்ட் பாண்டியன்!

விட்டன. டி.எஸ்.பி. பாண்டியனிடம் மனு கொடுத்துள்ளார்கள் என்று கேள்விப்பட்டால் போதும், 'எதிர் தரப்பு' மனு கொடுத்தவரிடம் சமாதானத்திற்குப் போய் பிரச்னைகள் தாமாகவே முடிந்து விடுவதும் உண்டு.

அரசியல் கட்சிகள், ஜாதி அமைப்புகள் என்ற பாகுபாடு இல்லாமல் காரைக்குடி நகரைச் சுற்றி சுவரொட்டிகள், ஆர்ப்பாட்டங்கள் என்று கடந்த ஒரு வார காலமாக அமளிபட்டுக் கொண்டிருக்கிறது. "காரைக்குடி டி.எஸ்.பி. பாண்டியனை மாற்றாதே!" என்ற வாசகம்தான் அது. ஒட்டுமொத்த காரைக்குடி மக்களும் முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் விஷயமும் கூட....

டி.எஸ்.பி. பாண்டியன் காரைக்குடிக்கு மாறுதலாகி ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் மக்களின் ஹீரோவாகிவிட்டார். சட்டம் ஒழுங்கு படு கறார்.

இரவு எட்டு மணிக்கு மேல் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர்கள் மறுநாள் காலையில் நீதிமன்ற வாசலில் அபராதம் கட்ட நிற்பார்கள். தினமும் காலை எட்டு மணிக்கு டி.எஸ்.பி. அலுவலக வாசலில் மனு கொடுப்பதற்கென்றே ஒரு நீண்ட கியூ நின்று கொண்டிருக்கும். மனுவைப் படித்தவுடன் அங்கேயே

காரைக்குடியில் பல ஆண்டுகளாக மூடி வைக்கப்பட்டிருந்த மூன்று கொலை வழக்குகளில், குற்றவாளிகள் பாண்டியனின் முயற்சியால் கைது செய்யப்பட்டுள்ளனர். சி.பி.சி.ஐ.டி. போலீசால் கைது செய்ய முடியாத தேவகோட்டை பட்டுக் குருக்கள் கொலை வழக்கு குற்றவாளிகளைக் கைது செய்தவர் டி.எஸ்.பி. பாண்டியன்.

"நானாகவே விரும்பிக் கேட்ட மாறுதல். இதில் கருத்து சொல்ல எதுவுமில்லை" என்கிறார் பாண்டியன். மாறுதல் உத்தரவை நிறுத்தும் வகையில் சர்வ கட்சியினருடன் சேர்ந்து முயற்சி மேற்கொண்டுள்ளனர் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. உமாதேவனும், பி.ஜே.பி. எம்.எல்.ஏ. ராஜாவும்.

நேர்மையான இந்த அதிகாரியின் பணி காரைக்குடிக்கா இல்லை சென்னை திருவொற்றியூருக்கா என்பது அந்தப் பகுதி மக்களின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

கட்டுரை, படங்கள்
கி. சிங்காரவடிவேல்


உ



ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரி ஸமேத
ஸ்ரீஸற்குணேச்வரர் ஆலயம்

ஸற்குணேஸ்வரபுரம் : கருவேலி - 609 501.

*****



அஷ்டதின ஸ்ரீருத்ரத்ரிசதீ, ஸ்ரீலலிதாத்ரிசதீ அர்ச்சனைகள்

மற்றும்

பன்னிரு திருமுறை பாராயணம்

சித்ரபானு வருஷம் ஆடி மாதம் 19ம் தேதி (4.8.02) ஞாயிறு முதல் 26ம் தேதி (11.8.02) ஞாயிறு முடிய எட்டு தினங்கள்

காலை மணி 9 முதல் பகல் 12.30 மணி முடிய
மாலை மணி 4 முதல் இரவு மணி 8.30 முடிய

அன்புடையீர்!

குருவருள் திருவருள் துணை கொண்டு தங்களைப் போன்ற மெய்யன்பர்களின் ஒத்துழைப்புடன் கருவேலி என்று அழைக்கப்படும் ஸற்குணேச்வரபுரத்தில் மகிழ்வுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும், **ஸ்ரீ ஸர்வாங்கஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வரப் பெருமானின்** திருவடிவாரத்தில் பல சிறப்பு வழிபாடுகளும், ஹோமங்களும் பாராயணங் களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு இத்தலத்தில் அம்பிகையின் அருளாணையின் வண்ணம் தஞ்சாவூர், ஸ்ரீ வாஞ்சாகல்பலதா ஸ்ரீவித்யாகணபதி உபாஸனா யோக பீடாதிபதி ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீவித்யாகணேச ஸ்வாமிகள் தலைமையில் 400 ஆவ்ருத்தி ஸ்ரீருத்ர, ஸ்ரீலலிதா த்ரிசதீ மந்த்ரார்ச்சனைகள் நடைபெற இருக்கின்றன. "முற்றோதல்" எனப்படும் பன்னிரு திருமுறை பாராயணமும் நடைபெற இருக்கிறது.

ஸ்ரீ ருத்ர த்ரிசதியையும், ஸ்ரீலலிதா த்ரிசதியையும் சேர்ந்து செய்வது தான் முறை என்பதாலும், அதுவே விசேஷ பலன்களை அளிக்கும் என்பதாலும் இரு த்ரிசதீ அர்ச்சனை களுக்குமாகச் சேர்த்து ரூ. 200/- காணிக்கையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் பங்கு பெறும் எல்லா பக்தர்களுக்கும், இரு புறங்களிலும் பீஜாக்ஷரங்கள் பொறிக்கப்பட்ட வெள்ளிக்காசு ரக்ஷையாக கொடுக்கப்படும்.

அர்ச்சனைகளில் பங்கு பெற விரும்பும் பக்தர்கள் கீழ்க்கண்ட முகவரிகளில் ஏதேனும் ஒன்றில் காணிக்கையை நேரிலோ / மணி ஆர்டர் மூலமோ செலுத்தி, தத்தம் பெயர், நக்ஷத்திரம், ராசி, கோத்ரம் இவற்றை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம். நிர்வாக ஸௌகர்யம் கருதி பக்தர்கள் 25.7.02க்குள் தங்கள் காணிக்கைகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
என்றும் இறைப்பணியில்
ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா
கும்பகோணம் — கருவேலி.

Dr. V. Krishnamurthy
Hereditary Trustee

காணிக்கை அனுப்பப்பட வேண்டிய முகவரிகள்:

G. குஞ்சிதபாதம் FCA, ஆடிட்டர், G. நடேசன் & கோ., டபீர் மேல வீதி, கும்பகோணம் - 612 001. போன்: 0435-420047. G. கண்ணன், D-127/A, ராஜமன்னார் சாலை, கே.கே.நகர். சென்னை - 600 078. போன்: 044 - 4836495. K. வைத்யநாதசாமி H.M.,(Retd) 24, பச்சையப்பா தெரு. (உடையார் காலனி) கும்பகோணம் - 612 001. போன்: 0435-435772. M.S. ராமசாமி, 77. செம்பருத்தி தெரு. திருநகர், தஞ்சாவூர் - 9. போன்: 04362 - 323350. A.K. சுப்ரமணியன், 1. முதலாவது குறுக்குத் தெரு, பிளாட் எண். 72, 1, கனகதாரா நகர், வளசரவாக்கம், சென்னை - 600 087. போன்: 044-4865335. A. சந்த்ரமௌலி, 9A, வெள்ளைபிள்ளையார் கோவில் தெரு. S.S. காலனி, மதுரை -10. போன்: 0452 - 601464

உற்சாகமாக விளையாடும் ஒரு குழந்தை கையிலிருந்து பலூனைப் பறித்தால் அதன் மனநிலை எப்படி இருக்கும்? ஏனோ நமக்கு ஸ்டாலினைப் பார்த்தபோது அப்படித்தான் தோன்றியது. ஆனால் மனிதர் மனக் கொந்தளிப்பைக் கட்டுப்படுத்திக் கொள்வதில் வல்லவர் என்பது அவர் 'பளிச்' பதில்களிலிருந்து புரிந்தது.



'ஒருவருக்கு ஒரு பதவி' சட்டத்தை எதிர்த்து நீங்கள் ஏன் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவில்லை?

மேயர் தேர்தலின்போதே பல்வேறு முறைகேடுகளை நடத்தி என்னைத் தோற்கடிக்க வேண்டுமென்று பார்த்தார்கள். ஆளுங்கட்சியால் முடியவில்லை. நான் மேயர் பொறுப்பு வகிப்பது அவர்கள் கண்ணை உறுத்திக்கொண்டே இருந்தது. அதன் வெளிப்பாடாகத்தான் சட்டமன்றத்தில் முதல்வர் ''இன்னமும் சிறிது நாட்களில் ஸ்டாலின் மேயர் பொறுப்பா அல்லது எம்.எல்.ஏ. பொறுப்பா, எதை வைத்துக்கொள்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்'' என்றார். நான் வழக்கு போடாவிட்டால் கூட பொதுநல வழக்கு போடப் பட்டதே! ஆனால் நீதிமன்றம் தமிழக அரசின் சட்டத்துக்குத் தடை விதிக்கவில்லை. இது அரசுக்குச் சாதகமான தீர்ப்புதான். இருந்தாலும் வழக்கு இன்



''ஜெயலலிதாவுக்கு நன்றி!''

னமும் விசாரணையில் இருக்கிறது. இந்த ஒரு வருட காலத்தில் மேயர் அதிகாரங்களை முடக்க பல நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது. அரசு சட்டத்துக்கு, உயர் நீதிமன்றம் தடை விதித்திருந்தால் கூட ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி மாநகராட்சியை அரசு கலைக்கக்கூடும். ஏனென்றால் இந்த ஆட்சியில் ஜனநாயகத்தின் சாயலைக் கூட எதிர்பார்க்க முடியாது. மாநகராட்சி தேர்தல், சைதை இடைத்தேர்தல் ஆகியவற்றில் சர்வாதிகாரத்தின் உச்ச கட்டத்தை நாம் பார்த்தோமே! இந்தச் சூழலில் மக்களைச் சந்திப்பதுதான் ஒரே வழி என்று கழகம் முடிவு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் இருபது நாட்கள் நகர் முழுக்கச் சென்று மக்களைச் சந்திக்கவிருக்கிறேன். கொள்கை அளவில் ஒருவருக்கு ஒரு பதவி உடன்பாடானதே என்றாலும் என்னைப் பழிவாங்கும் விதமாக முன் தேதியிட்டு சட்டத்தை அமல் படுத்தியதுதான் யதேச்சதிகாரம்.

மக்கள் மன்றத்திடம் நீதி கேட்பது சரியானது என்று கருதுகிறீர்களா?

ஒரு வருடம் நடந்ததை மக்களுக்கு விளக்க வேண்டும். அது எனது கடமை. அவர்களது தீர்ப்பையல்லவா தமிழக அரசு அவமதித்திருக்கிறது. பதவியில் இல்லாவிட்டாலும் "உங்களுக்காகப் போராடக் கூடிய வாய்ப்பு உண்டு" என்பதையும் சொல்லுவேன்.

நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஜெயலலிதா மக்கள் மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த நிலையில், உங்களுக்குரிய பரிகாரத்தை மக்களிடம் எதிர் பார்க்க முடியுமா?

''என்னுடைய வேட்பு மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்'' என்று நாடகம் போட்டு, பாட்டுப்பாடி மக்களை நம்ப வைத்து வெற்றி பெற்றார் ஜெயலலிதா. ஆனால் மக்கள் இப்போது 'தவறு செய்து விட்டோமே' என்று உணர்கிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் பதவியைப் பறித்துக்கொண்டது அக்கிரமத்தின் உச்சம் என்றாலும் இது ஒரு வகையில் எனக்கு நன்மை செய்திருக்கிறது. மேயர் பொறுப்பு வகித்தபோது கழகப் பணி ஆற்றுவதில் காலப் பிரச்னை காரணமாக தொய்வு இருந்தது. இனி எனக்கு நிறைய அவகாசம் கிடைக்கும். தமிழகமெங்கும் சுற்றி, தி.மு.க. இளைஞர் அணியை இன்னமும் பலப்படுத்தி, கட்சிக்காக எந்தத் தியாகமும் செய்யும் வகையில் அவர்களை உருவாக்குவேன். இப்படிப்பட்ட பணிகளை ஆற்ற வாய்ப்பு கொடுத்ததற்காக ஜெயலலிதாவுக்கு நன்றி.

மேயர் பொறுப்பில் உங்களுக்கு மன நிறைவு தந்த ஏதேனும் உண்டா?

எங்கள் கழக ஆட்சியில் அரசின் ஒத்துழைப்போடு ஐந்தாண்டு காலத்தில் நகரில் பற்பல நலப் பணிகளைச் செய்ய முடிந்தது. குறிப்பாக கல்வித் துறையில் கணினி, சாலை வசதி, மழைநீர் வடிகால், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மேம்பாலங்கள் என்று மன நிறைவான பணிகள். இன்னமும் அழுத்திச் சொல்வதென்றால் இந்தியாவில் வேறெந்த மாநகராட்சியும் பாலம் கட்டியதாக வரலாறு இல்லை. குறிப்பிட்ட காலத்துக்கு முன்பு பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டதால் அரசுக்கு முப்பது கோடி ரூபாய்

காலம் கைகூடும்போது, கடித இலக்கியத்தை உரசிப் பார்க்கும் ஆசை உண்டு.



சேமிப்பு. இந்தப் பாலம் கட்டியதில்தான் ஊழல் என்று வழக்கு போட்டுள்ளார்கள். அதைச் சந்திக்க வேண்டிய முறையில் எதிர் கொள்வேன். ஆனால் கடந்த ஓராண்டு காலமாக ஏற்கெனவே மன்ற அனுமதி பெற்ற பணிகளைக் கூட நிறைவேற்ற முடியவில்லை. அந்த அளவுக்கு மாநகராட்சி நிர்வாகம் ஆளுங்கட்சியால் முடக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியில், மெட்ரோ வாட்டர், சி.எம்.டி.ஏ. குடிசை மாற்று வாரியம் ஆகிய அமைப்புகளோடு மாநகராட்சி மேயர் தலைமையில் ஓர் இணைப்புக் குழு போட்டு, நகரை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபட்டோம். ஒரு வருடமாக அந்தக் குழு கூடவேயில்லை. மொழிப்போர் தியாகிகள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஆகியோரின் வாரிசுகளுக்கு மாநகராட்சியில் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தோம். ஆனால் அ.தி.மு.க. அரசு அதை ரத்து செய்துவிட்டது. அதே போல் ஏழு

மேம்பாலங்கள் கட்ட தீர்மானம் போட்டோம். அதை மறுபரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறது ஜெயலலிதா அரசு. இது மட்டுமா? மேயருக்கான நிதி அதிகாரங்களைப் பிடுங்கியாகிவிட்டது. ஆணையரே நேரடியாக அரசுடன் கடிதப் போக்குவரத்து நடத்தலாம் என்ற ஆணை போட்டார்கள். இனி அவர்களுடைய ஆட்கள் மேயராக வரும்போது எல்லா அதிகாரங்களையும் திருப்பித் தருவார்கள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்; ஆட்சியாளர்கள் இந்த அக்கிரமங்களுக்குப் பதில் சொல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை.

எம்.எல்.ஏ.பொறுப்பை விட்டுவிட்டு ஒட்டுமொத்த நகருக்கு மேயராகத் தொடர்வீர்கள் என்று கூட இடையில் பேச்சு அடிபட்டதே!

ஏதாவது ஒரு பொறுப்பை விட்டு விடுவது என்று முடிவெடுத்தால் கூட, அந்தச் சட்டத்தை இப்போதைய சூழலில் ஏற்றுக்கொண்டதாகப் போய்விடுமே! எனவே தான் "உங்களிஷ்டப்படி செய்து கொள்ளுங்கள்" என்று விட்டு விட்டது கழகம்.

ஏற்கெனவே நீங்கள் மேயராக இருந்தபடியால் எந்தப் பதவியிலும் இல்லாத ஒருவருக்கு கழக சார்பாக மேயர் பதவிக்குப் போட்டியிட வாய்ப்பு கொடுத்திருந்தால் இந்தச் சூழ்நிலையைத் தவிர்த்திருக்கலாம் அல்லவா!

வெளிப்படையாகச் சொன்னால் நான் போட்டியிடமாட்டேன் என்றுதான் சொன்னேன். ஐந்து வருடம் பணியாற்றி விட்டக் காரணத்தால் வேறு ஒருவருக்கு வாய்ப்பு கொடுக்கலாமே என்பதாலும், கட்சிப் பணிகள் செய்ய நேரம் கிடைக்குமே என்பதாலும் அப்படிச் சொன்னேன். தலைமையும் கிட்டத்தட்ட அதை ஏற்றுக் கொண்டுவிட்டது. ஆனால் தோழமைக் கட்சித் தலைவர்கள் _ குறிப்பாக டாக்டர் ராமதாஸ் போன்றவர்கள், "அவரது நல்ல பணிகளுக்காக மறுபடியும் தேர்தலில் நிற்க வையுங்கள்; வெற்றி கலபமாகக் கை கூடும்" என்று வற்புறுத்தியதால் கட்சி என்னையே மீண்டும் போட்டியிடுமாறு பணித்தது.

மாநகராட்சி மன்றத்தில் இனி உங்கள் கவுன்ஸிலர்களின் பணி எவ்வாறு அமையும்?

எங்கள் கவுன்ஸிலர்கள் தொடர்ந்து மாநகராட்சி மன்றத்துக்குச் சென்று மக்கள் குறைகளைச் எடுத்துச் சொல்லி வட்ட வளர்ச்சிக்குப் பாடுபடுவார்கள். இனி மக்கள் நன்மைக்காக, போராட்டம், மறியல் என்று நடத்தத் தயங்க மாட்டோம். கடந்த ஒரு வருடமாக பெரம்பூர் பாலப் பணிகள் நடைபெறவில்லை. இதனால் புரசை, பெரம்பூர், செம்பியம் பகுதி மக்கள் மிகுந்த தொல்லைக்குள்ளாகியிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களை ஒன்று திரட்டி, உடனடியாக பால வேலையை முடிக்கும்படி போராட்டம் நடத்த இருக்கிறோம்.

சைதை இடைத்தேர்தலில் உங்கள் கட்சி பூத் ஏஜெண்டுகளின் பணி திருப்தியாக இருந்ததா? அவர்களது செயல்பாடு குறித்து விமர்சனங்கள் எழுந்ததே...!

அங்கொன்றும் இங்கொன்றுமாக, சிலர் தவறு செய்திருக்கலாம். ஆனால் எங்கள் தொண்டர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டல்லவா பணியாற்றினார்கள். ரவுடிகள், அ.இ.அ.தி.மு.க. பிரமுகர்கள், போலீஸ் அதிகாரிகள் என்று எல்லோரும் கூட்டணி அமைத்துக் கொண்டல்லவா கழகத்தவரைப் பயமுறுத்தினர். பணம் வாங்கிக் கொள்ளாத அதிகாரிகள் கத்தி முனையில் மிரட்டப்பட்டனர். ஆனால் ஒன்று? கழகம் என்பது வாழையடி வாழையாக செயல்படுகிற அமைப்பு. தேர்தலில் போட்டியிடுவதோ, பதவியைப் பிடிப்பதோ மட்டும் அதன் குறிக்கோள் கிடையாது. எங்களுக்கென்று சமுதாய நோக்கங்கள் இருக்கின்றன. புதவி

கல்கி - VBC Jewellery
இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி - 17 முடிவு

காால்பந்து திருவிழாவை முன்னிட்டு, 'உதை' என்று முடியும் கவிதைகள் கேட்டிருந்தோம். தலா நான்கு கிராம் தங்கம் பெறும் பரிசு கவி(உ)தைகள் இதோ!

"காமரூன் அன்று அர்ஜென்டைனாவுக்குக்
கொடுத்தது அதிர்ச்சி உதை!
செனகல் பின்னர் பிரான்ஸுக்குக்
கொடுத்தது அதனினும் பெரிய உதை!
ரொனால்டோ நடிப்புக்கு ஃபிஃபா
கொடுத்தது பெனல்டி உதை...!
உலகக் கோப்பை முடியுமுன் காண்போம்
இதுபோல் இன்னும் ஏராள உதை...!

ஜி. வினோத்,
கிருஷ்ணாபுரம் - 627001.

யிலிருந்தால் அவற்றைச் சுலபமாகச் செய்ய முடியும். அவ்வளவுதான். அரசியல் ரீதியாக யாருடன் வேண்டுமானாலும் மோத, கழகம் தயார். தலைவர் அவர்களே சொன்னது போல் சிங்கத்தோடு மோதலாம்; அசிங்கத்தோடு மோத முடியுமா?"

கழகத்தின் அடுத்த தலைவராக உருவாகிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களைக் காயப்படுத்துவது, கட்டிப்போடுவது ஆகியவை இனி ஆளுங்கட்சியின் அஜண்டாவாக இருக்கக்கூடும்! எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?

அரசின் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறேன். மடியில் கனமில்லை; எனவே பயமில்லை. தி.மு.கவின் அடுத்த தலைவர் என்று என்னைச் சொல்வது உங்கள் கருத்தாக இருக்கலாம். அதில் எனக்கு உடன்பாடு கிடையாது. இந்தியாவிலேயே தி.மு.க. ஒன்றுதான் அடிமட்டத்திலிருந்து தலைவர்வரை தேர்தல் நடத்தி நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கிறது. இது ஒரு ஜனநாயக இயக்கம். இங்கே, 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று யாரும் செயல்பட முடியாது. கூடிய விரைவில் கட்சித் தேர்தல்கள் நடக்க இருக்கின்றன. கிளைக் கழக உறுப்பினர் கார்டுகள் தலைமைக் கழக நிர்வாகிகளால் நேரடியாக விநியோகப்படுகின்றன. தி.மு.க. நிர்வாகத்தில் இளைஞர்களுக்கு என்றுமே கணிசமான பங்குண்டு.


கட்சித் தேர்தலில் கூட, ஜனநாயக முறையில் போட்டி நடப்பது தவிர்க்கப்பட்டு, நீங்களோ அல்லது தலைமையோ சுட்டிக் காட்டுகிற நபரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப் போகிறீர்களாமே...!

பேருக்கு விளையாண்டா 'பேக்'
பண்ணிடச் சொல்வாக
போருக்குப் போறாமாதிரி போயிருக்கோம
கோல் போட,
யாருக்குக் கோப்பையின்னு தெரியலையே
- வாங்காம
ஊருக்குப் போனாக்க விழுமே உதை!

கி. அண்ணாகாந்தி,
ஸ்ரீ லட்சுமி காம்ப்ளக்ஸ்,
24.சி-1, திருச்சி ரோடு,
நாமக்கல் - 637 013.

ஒரு குறிப்பிட்ட மாவட்டச் செயலாளராக 'இவர்தான் வர வேண்டும்; அவர்தான் வர வேண்டும்' என்று நானோ, தலைமையோ யாரையும் சுட்டிக் காட்டுவது கிடையாது. யாருக்கு செல்வாக்கு இருக்கிறதோ அவர்கள் போட்டியிட்டு தேர்தலில் வெற்றி பெறலாம். இந்த விவகாரத்தில் என்னைத் தொடர்புப்படுத்திப் பேசுவதெல்லாம் விஷமப் பிரசாரம்.

ஆளுங்கட்சியாக இருக்கும்போது காட்டப்படும் உற்சாகம் எதிர்க்கட்சியாக இருக்கும்போது வராது. இந்த நிலையில் தொண்டர்களை விழிப்புடன் வைத்துக் கொள்ள என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?



இனி முழுநேர கட்சிப் பணிதான். குறிப்பாக இளைஞர் அணி பலப்படுத்தப்படும். மாவட்டந்தோறும் பயிற்சிப் பாசறை நடத்துவோம். தெரு முனை கூட்டங்கள் நடத்தி ஆட்சியின் அவலங்களை மக்கள் முன் வைப்போம். தலைமையோடு கலந்து பேசி, கருத்தரங்கம், மாநாடுகள் என்று போட இருக்கிறோம். அதேபோல் கழகத்தில் இருக்கும் மற்ற அணிகளும், தத்தம் பணிகளைத் தொடரும்.

முன்னெப்போதையும் விட கட்சி மிகவும் ஒற்றுமையாக இருக்க வேண்டிய கட்டம் இது. ஆனால் ஆங்காங்கே கோஷ்டிப்பூசல்கள் தெரிகின்றனவே!

கட்சி விரோத நடவடிக்கைகளில் யார் ஈடுபட்டாலும் தலைமை பார்த்துக் கொண்டிருக்காது. கழக விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். 'செயல்பட முடியாதவர்கள் இடத்தைக் காலி செய்யலாம்' என்று தலைவர் அறிக்கை விட்டதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். ஆனால் சில சிறிய பிரச்னைகளைக் கூட, பத்திரிகைகள் வியாபார நோக்கில் பெரிது படுத்துகின்றன.

திராவிட இயக்கத் தலைவர்களின் ஆயுதமே பேச்சும், எழுத்தும்தான். அந்த வகையில் உங்களை மேம்படுத்திக் கொள்ள என்ன செய்கிறீர்கள்?

எனக்கு இன்ஸ்பிரேஷன் என்பது தலைவர் பேச்சும், அவர் எழுதும் கடிதங்களும் தான். காலம் கைகூடும்போது, கடித இலக்கியத்தை உரசிப் பார்க்கும் ஆசை உண்டு.

சந்திப்பு : ப்ரியன்
அட்டை, படங்கள் : வெங்கடேஷ்

காதில் விழுந்தவை:



"நாங்கள் இளிச்சவாயர்களா?"

♦ த.மா.காவும், காங்கிரஸும் இணைந்த பிறகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பு காங்கிரஸ் கைக்கு வரும் என்பது பொதுவான எதிர்பார்ப்பு. ஆனால் இந்த ஆசையில் மண் விழும் என்கிறார்கள். காங்கிரஸுடன் இணைப்பை விரும்பாத ஆறு த.மா.கா. எம்.எல்.ஏக்கள் சட்டசபையில் தனித்துச் செயல்படப்போவதாக (அதாவது அம்மாவுக்கு ஆதரவாக) அறிவிக்க விருக்கிறார்களாம். இந்தத் தலைவலி ஒரு பக்கம் இருக்க, ஒன்றுபட்ட சட்டமன்றத் தலைவர் பொறுப்பு, தமிழக காங்கிரஸ் பொறுப்பு இரண்டையும் த.மா.கா.பிரமுகர்களுக்குத் தாரைவார்க்கவிருக்கும் மேலிடத்தின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறார்கள் தமிழக காங்கிரஸ் தலைவர்கள். "உண்மையில் சொல்லப் போனால் த.மா.கா. என்பது எலும்புக்கூடுதான். அ.இ.அ.தி.மு.கவுடன் சேர்ந்து போட்டியிட்டதால் தான் சென்ற சட்டமன்றத் தேர்தலில் அத்தனை எம்.எல்.ஏக்கள் வெற்றிபெற முடிந்தது. மாவட்டங்களில் பிரமுகர்கள் இருக்கிறார்களே தவிர தொண்டர்கள் கிடையாது. சட்டமன்ற பொறுப்பு, கட்சிப் பொறுப்பு என்று எல்லாவற்றையும் 'ஓடிப்போய்' வரும் த.மா.காவுக்குக் கொடுத்தால் தொடர்ந்து தலைமைக்கு விசுவாசமாக இருக்கும் நாங்கள் என்ன இளிச்சவாயர்களா?'' என்று கேட்கிறார் இளங்கோவனின் ஆதரவாளர் ஒருவர். எது எப்படியோ, அன்பழகனின் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்புக்கு ஆபத்து வராது என்கிறார்கள்.


♦ ஜெயா தொலைக்காட்சியில் மூன்று நபர்கள் கொண்ட குழு ஒன்று, சன் தொலைக்காட்சியை முடக்குவதற்கான யுக்திகளையும் திட்டங்களையும் வகுத்துக் கொண்டிருக்கிறதாம். அதன் ஒரு பகுதியாகத் தான், புதிய படங்களின் பாடல்களையும், காட்சிகளையும், ஜெயா தொலைக்காட்சிக்கு மட்டும் பிரத்யேகமாகக் கொடுப்பது என்ற தமிழ்த் திரைப்பட அதிபர்கள் கழகத்தின் தீர்மானமாம். இது தவிர சன் தொலைக்காட்சிக்கு விளம்பரம் தரும் தமிழகத்தைச் சேர்ந்த சில தொழிலதிபர்கள் 'அன்பாக' எச்சரிக்கப்பட்டிருக்கிறார்களாம். இது ஒரு பக்கம் இருக்க, தன் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தும் நோக்கில் மலையாளத்திலும் 24 மணி நேர நியூஸ் சேனல் துவக்க இருக்கிறதாம் சன். தமிழகத்தில் சிக்கல் வந்தாலும் திராவிடத்தின் மற்ற பகுதிகள் 'சன்'னுக்கு கைகொடுக்குமாம்.



♦ தமிழகத்துக்குத் தொழில் துவங்க வரும்படி வெளிநாட்டு தொழில் முனைவோர்களை வளைத்துப் போட, ஆந்திர முதல்வர் நாயுடு, கர்நாடக முதல்வர் கிருஷ்ணா ஆகியோர் போன்று தமிழக முதல்வரும், சிங்கப்பூர் மற்றும் சில தென் கிழக்கு நாடுகளுக்கு விஸிட் செய்ய வேண்டும் என்று முதல்வருக்கு, தொழில் துறை அதிகாரிகள் நோட் அனுப்பியிருக்கிறார்களாம். முதல்வரும் அதற்கு ஓ.கே. சொல்வார் என்கிறது கோட்டை வட்டாரம்.

♦ சங்கிலித் தொடர் ஓட்டல் அதிபர் சிக்கலில் மாட்டியிருக்கிறார் அல்லவா? சைதாப்பேட்டை இடைத்தேர்தல் நிதியாக ஆளுங்கட்சி பிரமுகர்கள் அவரிடம் 'கணிசமாக' கறந்து விட்டார்களாம்.

— சஞ்சயன்



2002 ஜூன் 30
சித்ரபானு ஆனி 16
மலர் : 60
இதழ் : 48

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




புதிய மேயர்: அதிகாரம் உண்டு; அந்தஸ்து இல்லை!

ஸ்டாலினை மேயர் பதவியிலிருந்து இறக்கியதன் மூலம் தமது சபதத்தை நிறைவேற்றியிருக்கிறார் ஜெயலலிதா.

அவரிடத்தில் துணை மேயர் கராத்தே தியாகராஜன் தற்காலிக மேயராகப் பொறுப்பேற்பது சட்ட ரீதியாக முறையான ஏற்பாடாக இருக்கலாம்; ஆனால் மக்களின் விருப்பம் ஸ்டாலின் மேயராக இருக்க வேண்டும் என்பதே. அவரிடத்தில் இன்று கராத்தே தியாகராஜனை அமரச் செய்வது மக்களின் விருப்பத்தைப் புறக்கணிக்கும் ஜனநாயக விரோத செயலே.

ஒருவருக்கு ஒரு பதவி என்ற கோட்பாடு சிறந்ததாயிருக்கலாம். ஆனால், அதனை அறிமுகப்படுத்துவதில் நன்னோக்கமும் நியாயமான அணுகுமுறையும் இருக்க வேண்டும். சட்டத்தை முன் தேதியிட்டு அமலுக்குக் கொண்டு வந்திருப்பதன் உள்நோக்கம் மிகத் தெளிவு.

அரசியல் விரோதத்தை வெளிப்படுத்தவும் தனிப்பட்ட வன்மங்களைத் தீர்த்துக் கொள்ளவும் சட்டத் திருத்தங்களைச் செய்வது கேவலம் மட்டுமல்ல; மிக அபாயகரமான போக்கும் கூட.



சட்டம் இயற்ற வேண்டிய பொறுப்பில் உள்ளவர்கள் சமுதாய நலனையும் ஜனநாயக நலனையும் விடுத்து தனிப்பட்ட காரணங்களுக்காக இயங்க ஆரம்பித்தால், அது ஜனநாயக விரோதமான, ஆரோக்கியமற்ற, அநாகரிக, அரசியல் போக்காக எதிர்காலத்தில் தொடரும். அதற்கு இன்று வழி காட்டியதாகும்.

தான்ஸி வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த கட்டத்தில் ஜெயலலிதா தேர்தலில் நிற்க முடியாமல் போனதும், தேர்தலில் நிற்காமலே சிறிது காலம் முதல்வராக இருந்ததும் சமீபத்திய சரித்திரங்கள்தான்.

அக் கால கட்டத்தில் சட்ட ரீதியாகவும் தார்மிக அடிப்படையிலும் கேள்விகள் எழுப்பப் பட்டபோது, ஜெயலலிதாவும் அவர் கட்சியினரும் முன் வைத்த வாதங்கள் என்ன...?


'அ.தி.மு.க ஆட்சி புரிய வேண்டும் என்பது மக்கள் விருப்பம். அதன் தலைவியான ஜெயலலிதா முதல்வராக விளங்க வேண்டும் என்பது மக்கள் பிரதிநிதிகளின் விருப் பம்.'

அப்போது சட்டத்தைக் காட்டிலும், ஏன் தார்மிக நெறிகளைக் காட்டிலும்கூட, மக்களின் விருப்பத்தைப் போற்றினர் ஜெயலலிதாவும் அவர் கட்சி எம்.எல்.ஏக்களும்.

இப்போது அதே எம்.எல்.ஏக்கள் சட்டசபையில், மக்களின் விருப்பத்தைச் செயலிழக்கச் செய்ய ஒரு சட்டத்தை இயற்றியுள்ளனர்!

மக்கள் விருப்பத்துக்கு விரோதமான இச்சட்டத்தை எதிர்த்துப் பொதுநல வழக்கு தொடுக்கப்பட்டது. இவ் வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், சட்டம் அமலாவதற்கு இடைக்கால தடை விதிக்கும் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துவிட்டது.

ஆனால், அதேநேரத்தில், அரசியல் சாசன ரீதியான முக்கியமான பிரச்னைகள் எழுந்திருப்பதை நீதிமன்றம் ஒப்புக்கொண்டிருக்கிறது. எனவே சட்டம் அமலுக்கு வரலாம். ஆனால் விசாரணை முடியும்வரை மேயர் பதவிக்கு மறுதேர்தல் கூடாது என்பது நீதிமன்ற



உத்தரவு.

சட்டம் அமலாவதன் மூலம் வேறு பலரும்கூட இரண்டாவது பதவியை இழக்க நேரலாம். பதவி உயர்வு பெறுபவர் கராத்தே தியாகராஜன் மட்டுமே! துணை மேயராக இருந்தவர் இனி தற்காலிக மேயராக விளங்குவார்.

அவருடைய இப்பதவிக்கு அதிகாரங்கள் இருக்கக்கூடிய அளவுக்கு அந்தஸ்து கிடையாது; அலங்காரமிருக்கக்கூடிய அளவுக்கு கௌரவம் இருக்காது.

தி.மு.க மேயரை வெளியேற்றிவிட்டதால், இதுநாள் வரை வேண்டுமென்றே முட்டுக்கட்டை போடப்பட்டு தடைபட்டு நின்ற மாநகராட்சிப் பணிகள் இனி துரிதமாக நடைபெறலாம். அதற்காக கணிசமான தொகைகளும் ஒதுக்கப்படலாம். ஒதுக்கப்படும் தொகை முறையாகப் பயன் அளிக்கிறதா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு தி.மு.க, த.மா.கா போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இருக்கிறது.

ஸ்டாலினின் வெளியேற்றத்தை எதிர்த்து அவரது கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்வதாக முடிவெடுத்துள்ளனர். ஆளுங்கட்சி அந்த ஆர்ப்பாட்டங்களை அபாயகரமான நிகழ்வுகளாகச் சித்திரித்து அரசியல் ஆதாயம் தேடிக்கொள்ளும். தி.மு.க வுக்கு இதன்மூலம் மக்கள் அனுதாபமும் கிட்டாது; சட்டரீதியான பலமும் பெருகாது.

எதிர்ப்புக் கச்சம் கட்டிக் கொள்வதற்குப் பதிலாக மாநகராட்சி திட்டமிடுகிற பணிகளுக்கு ஆதரவும் அவை முறையாக நடந்து நிறைவேற கண்காணிப்பும் வழங்குவதே நல்லது.

ஸ்டாலினின் பதவிப் பறிப்பு தொடர்பான வழக்கின் இறுதித் தீர்ப்பு எவ்வாறு அமைந்தாலும் இன்று தி.மு.க தலைவர்கள் நடந்து கொள்ளும் விதம் மக்களின் அனுதாபத்தைப் பெறுவதாக இருக்க வேண்டுமே தவிர எரிச்சலை சம்பாதித்துக் கொண்டுவிடக் கூடாது. ○

புக்பேங்க்

வெற்றிடமும் சில முகமூடிகளும் - படுதலம் சுகுமாரன்.

சிறுகதைகள். பல்வேறு பத்திரிகைகளில் வெளியான ஆசிரியரின் பத்தொன்பது கதைகளைக் கொண்ட தொகுதி. பல சிறு கதைகள் நன்றாக அமைந்துள்ளன.

(அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 11. விலை ரூ. 40)

அன்னை தெரசா என்றொரு தேவதை - ஆர்.எஸ்.ராவ்

அமைதியின் உருவான அன்னை தெரசாவின் வாழ்க்கை வரலாறு இந்நூல். பல புதிய தகவல்கள் இனிமையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

(ஸ்ரீ அன்னை மீனாக்ஷி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை - 17. விலை ரூ. 40)

சமுத்திரத்தில் ஒரு மைத்துளி

நாவல். பிரஞ்ச் நாவலாசிரியரான மிஷெல் சோக்கேவ் எழுதிய நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நாவல் பற்றி, "இது ஒரு குறியீட்டு அடிப்படையில் எனக்கு முக்கியமான நூலாகப்படுகிறது. இரண்டு அடிப்படையான கேள்விகளை நான் இந்த நாவல் மூலம் எதிர்கொண்டேன். ஒன்று தந்தை - மகன் உறவு. இரண்டு மேலை நாட்டுக் குடும்ப உறவு முறை அமைப்புகள். இலக்கியத்தின் தோற்றுவாய் குறித்து உண்மைகளைத் தெரிவிப்பவை இவை" என்கிறார் மிஷெல். மல்லிகா கிருஷ்ணசாமியின் மொழிபெயர்ப்பு சிறப்பாக இருக்கிறது.

(காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 24. விலை ரூ. 50)

அண்ணன்மார் சுவாமி கதை - பாகம் - II - எஸ். லீலா

கொங்கு நாட்டில் பெரிய காண்டி அம்மனைக் குலதெய்வமாகக் கொண்டு வாழ்ந்த குன்றுடையான் என்பவருக்கும் அவர் மக்களுக்கும் ஏற்பட்ட இன்னல்களை விடுவிக்க, மாயவரும் குலதெய்வமும் செய்த அருள் நிகழ்ச்சிகளை வரலாறாகக் கொண்டது அண்ணன்மார் சுவாமி கதை. இதை எளிய பாடல் வழி தந்துள்ளார் ஆசிரியர் எஸ். லீலா.

(மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17. விலை ரூ. 57)

தராசு - சு. சமுத்திரம்

ஆசிரியரின் பதினைந்து கதைகள் கொண்ட தொகுதி. ஒவ்வொரு சிறுகதையும் இனிய அனுபவத்தைத் தருகின்றன. ஆசிரியருக்கே உரிய எள்ளல் நடை சிறப்பாக இருக்கிறது.

(கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ. 35)

— அழகி



"பாதுகாப்புக்காகத் தாக்கலாம்!"

அண்மையில் ஒரு டி.வி சேனல் நடத்திய கருத்துக் கணிப்பில், தொண்ணூறு சதவிகிதம் பேர், பாகிஸ்தானின், இந்தியாவுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க நேரிடையாக போரில் இறங்கி, பாகிஸ்தானுக்குப் பாடம் புகட்ட வேண்டியது கட்டாயம்' என்று கருத்து தெரிவித்திருந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில்,





• கோபால்ஜி

கடந்த ஒரு மாதத்துக்கும் அதிகமாக, காலியாக இருந்த இந்திய விமானப் படையின் மேற்குப் பிராந்தியத்துக்கு புதிய தளபதியாக ஏர் மார்ஷல் ஏ.ஆர். காந்தி பொறுப்பேற்றிருக்கிறார். இந்த நடவடிக்கைக்கு காரணம் என்ன?


''இந்தியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, மேற்கு பிராந்தியத்துக்கு தனி முக்கியத்துவம் உண்டு. காரணம், ஜம்மு - காஷ்மீர் பகுதி, மலைகளும், பள்ளத்தாக்குகளும் மிகுந்தது. இங்கே நம்

துருப்புகளைப் பராமரிப்பது அதிக செலவாகும் என்பதோடு போர் என்று வந்துவிட்டால் நம் துருப்புகள் முன்னேறுவது அத்தனைச் சுலபமில்லை. ஆனால் ராஜஸ்தான் பகுதி அப்படியில்லை. இந்தியாவுக்கு மிகவும் அனுகூலமான பகுதி. ஜம்மு காஷ்மீர் தொடங்கி ராஜஸ்தான் வரை, உள்ள எல்லைப் பகுதி இந்த மேற்கு பிராந்தியத்தின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. ராஜஸ்தான் பகுதி, பாலைவனப் பகுதி என்பதால், நம் துருப்புகள் பாகிஸ்தான் ராணுவத்தை முறியடித்து, முன்னேறுவது சுலபம்!'' என்கிறார் கோபால்ஜி மாளவியா. இவர் சென்னை பல்கலைக் கழகத்தின் பாதுகாப்பு மற்றும் வியூகக் கல்வித் துறை பேராசிரியர்.

மேற்குப் பிராந்தியத்தின் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஏர் மார்ஷல் காந்தி, 65ம் வருடத்தில் நடந்த பாகிஸ்தானுடனான போரில், பாகிஸ்தானிய விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியவர். இந்திய அரசால் வீர சக்கர விருது அளிக்கப்பட்டவர்.

''பாகிஸ்தான், அத்துமீறி நடக்கிறபோது இந்தியா பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது. அதேசமயம், பாகிஸ்தானுடன் நேரடியாகப் போரில் இறங்கினால், பாகிஸ்தானே இல்லாமல் போய்விடும் என்பது உண்மைதான் என்றாலும், கோபாவேசத்தின் உச்சகட்டமாக, பாகிஸ்தான் தனது வசமுள்ள அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் வாய்ப்பை மறுக்க முடியாது. அப்போது, பதிலுக்கு இந்தியாவும் அணு ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். உலக நாடுகளின் கடும் கண்டனம் எழும்.

''அது மட்டுமில்லை. அதனால் இந்தியப் பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்படும்.



''எதிரில் உள்ள தியேட்டரில் மேட்னி பார்த்துட்டு அப்புறம் டாக்டரைப் பார்க்கலாம்!''

''ஏங்க?''

''டாக்டர் அறைக்குள் சற்று முன்தான் ஒரு மெடிக்கல் ரெப் நுழைஞ்சாரு!''

- உ. ராஜாஜி

''எனவே, நாமாக, பாகிஸ்தானுடன் நேரடி யுத்தத்தில் இறங்குவதுகூடாது. அதேசமயம் பாகிஸ்தானின் சதிகளுக்கு, தக்க பதிலடி தந்தே ஆக வேண்டும்!''

''அதற்கு என்ன செய்யலாம்?''

''லிமிடட் ஸ்டிரைக்' என்ற வரையறுக்கப்பட்ட தாக்குதல் என்ற வியூகத்தைச் செயல் படுத்த வேண்டும். நமது துருப்புக்கள் நம் எல்லையைத் தாண்டி, பாகிஸ்தானுக்குள் போகக்கூடாது. நம் எல்லைக்குள் இருந்துகொண்டே, பாகிஸ்தானின் கராச்சி துறைமுகம், ராணுவ மையங்கள், தொலைத்தொடர்பு மையங்கள் முக்கியமாக அங்கே இருக்கும் தீவிரவாதப் பயிற்சி முகாம்கள் ஆகியவற்றைக் குறி வைத்துத் தாக்கி, நிர்மூலமாக்கிவிட வேண்டும்! நமது பாதுகாப்புக்காக, சுய கௌரவத்தை நிலை நாட்டுவதற்காக, இந்த வரையறுக்கப்பட்ட தாக்குதல் நடத்தப்படுவதாக அறிவிக்க வேண்டும்.

''அது போன்று ஒரு தாக்குதல் திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது, மேற்கு பிராந்தியத்துக்கும், அதன் தலைமைப் பொறுப்பில் இருக்கும் தளபதிக்கும் முக்கியத்துவம் இருக்கிறது' என்கிறார் டாக்டர் கோபால்ஜி மாளவியா.

சந்திப்பு:
எஸ். சந்திரமௌலி



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel & Fax: 237 6129.
City Office: No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 600 033. போன்: 371 4942.

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.


• காலை சிற்றுண்டி (180 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்




12

வாஸந்தி

அடர்ந்த காடு அது. ஆகாசத்துக்கும் பூமிக்கும் நடுவே இடைவெளியற்ற பந்தல் விரித்தாற்போன்ற அடர்த்தியில் சூழ்ந்த மையிருட்டு. தடுமாறிக் கொண்டே அவன் முன்னேறினான். பரிவாரமெல்லாம் அவனைத் தொடர்கிற தெம்பில், அவர்களது தலைவர் நான் என்கிற மிதப்பில். மனித காலடி கேட்டு பூமியுடன் அதிர்ந்த விலங்கினம் சிதறி ஓட சரமாரியாக திசைக்கொன்றாக பாய்ந்த அம்புகளின் வீச்சில் பொத்து பொத்தென்று ஒவ்வொன்றாக வீழ்ந்தன. மான்கள், ஓநாய்கள், புலிகள், சிங்கங்கள், கிறீச்சிட்டன, ஓலமிட்டன. பிரலாபித்தன. அவன் அசராமல் முன்னேறினான், உயிரற்ற சடலங்களைத் தாண்டியபடி. என்னை எதுவும் வீழ்த்தமுடியாது என்கிற கர்வத்துடன். உயிருடன் இருந்த ஜீவராசிகள் எல்லாம் பேயைக் கண்டதுபோல அரண்டு ஓட்டமெடுத்தன. அவனுக்குச் சிரிப்பு வந்தது. அசதியிலும் ஒரே வார்த்தையிலே சொல்லணும்னா திருப்தி, திருப்தி. ரொம்ப திருப்தி.

ராஜமோகன் கண்ணைத் திறந்தான். உடம்பு மிதப்பது போல இருந்தது. கானகம் இல்லை. இருளில்லை. கண்ணைக் கூசும் வெளிச்சம். வெள்ளைக் கூரை, வெள்ளைத் திரைச் சீலைகள். எங்கே இருக்கிறோம் என்று ஒரு விநாடி குழப்பம் ஏற்பட்டது. பின்னங்கழுத்தில் நமநமவென்று வலித்தது. தோள் பட்டைமேல் இரண்டு பாராங்கல் அமர்ந்திருந்தன. கண்களை இலேசாகத் திருப்பியபோது, பச்சைத் தடுப்புத் திரை தெரிந்தது. அவன் கண்களை மூடிக் கொண்டான்.

ஓ... இது ஆஸ்பத்திரி. அவனுக்கு இன்னும் நினைவு வராத ஒரு விபத்தில் சிக்கியதால்



இங்கு படுத்திருப்பதாக நர்ஸ் சொல்கிறாள். அம்மாவும் சொன்னாள். அவன் பிழைத்ததற்குக் காரணமும் சொன்னாள்.

''வெங்கடாசலபதியை வேண்டிக்கிட்டேன் - நான் பண்ண பிரார்த்தனை வீணாகலை. ஆண்டவன் என்னை ஏமாத்தல்லே.''

அவனுக்கு நெஞ்சுக் குழியில் ஏதோ பந்தாகச் சுருண்டு விழியோரங் களில் முள்ளாகக் குத்திற்று. வெங்கடாசலபதி இல்லை காப்பாற்றியது. அம்மாவின் அன்பே காப்பாற்றியிருக்க வேண்டும். அப்பா அவனிடம் என்றுமே நெருங்கத் தயங்கியதில் அம்மாவின் வெறிபிடித்த பாசமே அவனைச் சுற்றிய ஒளிவட்டமாக கவசமாக அவன் உணர்ந்திருக் கிறான். இப்போதும் அதுதான் கவசமாக இருந்திருக்க வேண்டும். எப்படிப்பட்ட விபத்து, எப்படி நடந்தது என்று சுத்தமாக நினை வில்லை. ஏதோ தேவதை வந்து காப்பற்றிச் சேர்த்ததுபோல ஆஸ்பத்திரி யில் கிடப்பது குழப்புகிறது. நினைக்க நினைக்க சோர்வு ஆட் கொள்கிறது. 'ராஜா, ராஜா... என்னைத் தெரியல்லே?' என்கிற தீனக் குரல் இடையிடையில் கேட்டு பீதியை அளிக்கிறது. அதில் தொனிக் கும் பரிதவிப்பு அச்சத்தை ஏற்படுத்துகிறது. அவன் விரட்ட விரட்ட ஆவிகள் துரத்துவது போல. அது அவனது பிரமையா, கனவா என்று பிறகு புரிவதில்லை. அந்தக் குரலில் பரிதவிப்பு மட்டும் இல்லை. மெல்லிய சீற்றம் தெரிகிறது. அவனைக் குற்றம் சாட்டுவதுபோல.

''நான் உன் குழந்தையின் அம்மா டாமிட்!''

அவனுக்குக் கதிகலங்கிப் போயிற்று. இது கனவாக இருக்க வேண்டும். அல்லது ஏதோ பழிவாங்கும் பிசாசாக இருக்க வேண்டும், பிசாசுகளில் அவனுக்கு நம்பிக்கையில்லாவிட்டா லும் அல்லது ஹாலுஸினேஷன், பலவீனமாக அவனது நிலையில் தோன்றும் மனச்சிதறல்கள். பிரமைகள்.

அம்மாவைக் கேட்டால், ''எனக்கொண்ணும் தெரியல்லே ராஜா'' என்கிறாள். ''அதைப் பத்தி சும்மா யோசனை

பொய்யில் பூத்த நிஜம்

பண்ணாதே. உடம்பு நல்லபடியாகி வீட்டுக்குப் போகணும். அதுதான் இப்ப முக்கியம்.''

நல்ல வேளையாக நிறைய தூக்கம் வருகிறது. ஆனால் கண்ணைத் திறக்கும் போதெல் லாம் பிரமைகள் நிஜம்போல மனித உருவில் எதிரில் நிற்பது அசத்துகிறது. தெரியாத உலகத்தில் முன்னறிவிப்பில்லாமல் நுழைந்துவிட்டது போல. இரவு நேரத்தில், ஆஸ்பத்திரி ஓசைகள் அடங்கியபிறகு வெள்ளைப்புறாக்கள் இறகுகளைக் கவிழ்த்து அலகுகளை

உட்புகுத்தி உறங்கும் சுகத்துடன் நர்ஸ்கள் மேஜையில் முகம் கவிழ்ந்துவிட்ட நேரத்தில் சின்ன நீல விளக்கின் இதமான ஒளியில் அந்த இளைஞன் பிரகாசமாக நிற்கிறன்.

"ஹாய் ராஜ்!"

"யார் நீ?" என்ற கேள்விக்கு,

"நிஜமாக என்னைத் தெரியவில்லை? உன்னோடு வேலை செய்யும் கதிர்?" என்று சிரிக்கிறான். கனிவான சிரிப்பு. ஸிக்த் ஸென்ஸில் ப்ரூஸ் வில்லிஸ் சிரிக்கிற மாதிரி.

கதிர் என்று யாரும் அவனுடன் வேலை செய்யவில்லை. 'உன்னைத் தெரியாது' என்று சொல்வது நாகரிகமில்லை. ராம கிருஷ்ணனைக் காணோம். பிரகாஷ் ராவைக் காணோம். அவனுக்கு நெருக்க மானவர்கள்.

"அவர்கள் வரவில்லை?"

மறுபடி ப்ரூஸ் வில்லிஸ் சிரிப்பு.

"அப்படி யாரையும் எனக்குத் தெரியாது" அவன் கண்களை மூடிக் கொண்டான், ஏதும் புரியாமல்.

"தட் இஸ் ஃபன்னி" என்று முணுமுணுப் பதைத் தவிர ஏதும் சொல்லத் தெரிய வில்லை. உடம்பின் ஒவ்வொரு தசையும் வலித்தது. ப்ரூஸ் வில்லிஸ் அவனுடைய தோளை இலேசாகத் தட்டினான்.

"ரிலாக்ஸ், நாளைக்குப் பேசலாம்." செத் துப் போனவனின் ஆவி ப்ரூஸ் வில்லிஸ் என்று நினைவு வந்தது. அவன் கண்ணைத் திறந்து கேட்டான்.

"நான் செத்துவிட்டேனா, உயிரோடு இருக்கிறேனா?"

"வெரி மச் அலைவ் அட் லாஸ்ட்" அமெ ரிக்க உச்சரிப்பு. ஆவிதான் சந்தேகமில்லை.

"நீ அமெரிக்கனைப் போல் பேசுகிறாய்."

"நான் அமெரிக்காவில் பத்து வருஷம் இருந்தேன் ராஜ், அதனுடைய தாக்கம் அது. நீ கேலி செய்வாயே?"

அவன் தோற்றுப் போனவனாய் கண்ணை மூடிக் கொண்டான்.

"எனக்கு உன்னைத் தெரியாது" என்று தூங்கிப் போனான்.

இரவு நேரத்திலெல்லாம் நீலநிற விளக் கொளியில் அந்த இளைஞன் அறையின் மூலையில் வந்து அமர்கிறான். சிறுவனின் அறை ஓரத்தில் ப்ரூஸ் வில்லிஸ் அமர்ந்தது போல. காலை வெளிச்சத்தில் எல்லா பிரமைகளும் பிசாசுகளும் மறைந்தன.


சன் டி.வி.யில் சாலமன் பாப்பையா தலைமையில் பட்டி மன்றம். 'கோடை குடும்பத்துக்குத் தருவது நிம்மதி அல்ல. நெருக்கடிதான்' என்று வாதாட வந்தார் ராஜா. சொன்னார் :

என் வீட்டிலே குழந்தைகளிடம் "விலையுயர்ந்த குளிர்பானங்களை தினம் தினம் கேட்காதீர்கள்; அதிகச் செலவு என்பதோடு ரசாயனப் பொருள் கலந் திருப்பதால் உடம்புக்கும் கெடுதல்" என் றேன். உடனே என் ஐந்து வயதுப்பையன், "வெறும் மோர் வேண்டாம்பா; தில்மாங்கே மோர் சாப்பிடறேன்" என்றான்! இது நெருக்கடி இல்லாமல் வேறென்ன!

- கிருஷ்ணமூர்த்தி

நர்ஸ்களும் டாக்டர்களும் நம்பிக்கை அலை களைப் பரப்பினார்கள். அவன் வெகு துரித மாக முன்னேறுவதாகப் பாராட்டினார்கள். அவன் ஏதோ பரீட்சையில் உயர்ந்த மதிப் பெண்களைப் பெற்றதுபோல. அவனைப் பிணைத்திருந்த ட்யூப்களையெல்லாம் அகற்றினார்கள். அப்பாவும் அம்மாவும் வந்தமர்ந்து அவன் பள்ளிக்குச் சென்ற நாட்களையெல்லாம் பேசி சிரித்தார்கள். அம்மா சாத்துக்குடி ஜூஸ் பிழிந்து கொடுத்தாள். எதுவுமே மாறவில்லை என்று தெம்பு வந்தது. அம்மாவின் பேச்சுக்கெல் லாம் அப்பா தனது வழக்கமான குதர்க்கப் பேச்சு பேசாமல் ஆதரவாகப் புன்சிரிப் புடன் அமர்ந்திருந்தது நம்பமுடியாத அதிசயமாக இருந்தது. அவனுடைய விபத்து அத்தகைய மாற்றத்தை அவருள் ஏற்படுத்தியிருந்தால் அதற்கு நன்றி சொல்ல வேண்டும் போல் இருந்தது. அவர்கள் கிளம்ப எத்தனித்தபோது 'போகாதீர்கள்' என்று தடுக்கத் தோன்றிற்று. எது பிரமை, எது நிஜம் என்று விளங்காத குழப்பம் சிலந்தி வலையாக விரிந்தது.

"தொந்திரவு செய்யக்கூடாது" என்று வெள்ளைப் புறா வந்து படபடத்தது. "சாயந்திரம் வர்றோம்" என்றார் அப்பா அவன் கையை வருடியபடி. அப்பா அவனை ஸ்பர்சித்த நினைவு அவனுக்கு இல்லை. இலேசான சிலிர்ப்பு நாடி நரம்பிலெல்லாம் பரவிற்று. அவனை பலவீனப்படுத்திற்று. அவர்கள் அகன்றதுமே தன்னைப் பிசாசுகள் துரத்த வரும் என்று அவன் பயந்தான். தூங்கிக் கொண்டே இருக்கலாம் போலிருந் தது. ஆனால் கண்கள் தன்னிச்சையாகத் திறந்தன. கலவரத்துடன் பிசாசுகளைத்



தேடின. அலுவலகத்திலிருந்து ராம கிருஷ்ணனும் பிரகாஷும் வந்திருக்கலாம் என்று கணக்குப் போட்டு, இப்பவும் திறந்தன. அவன் தயக்கத்துடன் பார்வையை ஓட விட்டான். தத்தித் தத்தி. பச்சை நிற அறைத் தடுப்பைத் தாண்டிச் செல்கையில் - அவள் நின்றிருந்தாள். அந்தப் பெண் - 'உன் குழந்தையின் அம்மா நான் டாமிட்!' என்றவள்.

அவன் கலவரத்துடன் கண்ணை மூடிக் கொண்டான். விழிகளுக்குள் முகம் மிதந்தது. வடக்கத்திக்காரியைப் போல இருந்தாலும் தமிழ் பேசும் பெண். அழகான பெண். மறுக்க முடியாது. ஆனால் அவன் சொல்லும் விஷயம் அபாண்டமானது. எந்தக் கோவிலிலும் கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்ய முடியும்.

எனக்குக் கல்யாணமே ஆகவில்லை. டாமிட்!

அவன் ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டபடி கண்ணைத் திறந்தான். அவளைக் காணோம். இது பிரமை. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அந்தப் பெண்ணைத் தெரியவில்லை என்பதே அதற்கு சாட்சி. டாக்டர் வந்தால் கேட்க வேண்டும். இந்த ஹாலுஸினேஷன் ஏன் வருகிறது? ப்ளீஸ், அதற்கு சிகிச்சை அளியுங்கள். நேற்று மதியம் அந்த நர்ஸைக் கெஞ்சி அலுவலகத்துக்கு டெலிபோன் செய்யச் சொன்னான். நம்பர் தெளிவாக நினைவிருந்தது. 6935612. "எனக்கு விபத்து ஆகிவிட்டது என்று சொல்லுங்கள். பிரகாஷ் ராவை அல்லது ராம கிருஷ்ணனை பார்க்க விரும்புகிறேன் என்று சொல்லுங்கள்." சற்று பொறுத்து அவள் அவனிடம் வந்து தயக்கத்துடன் சிரித்தாள்.

"நம்பர் சரியாகத்தானே சொன்னீர்கள்?"

"ஆமாம். ஏன்? 6935612."

"ஒன்றுமில்லை" - அவள் தன் உள்ளங் கையில் எழுதியிருந்த எண்ணைப் பார்த்தாள். ராஜமோகன் என்று அங்கு யாருமில்லை என்கிறார்கள். ஒரு வேளைத் தப்பான நம்பராகயிருக்கும். நான் மறுபடி செய்து பார்க்கிறேன்."

அரைமணி நேரம் அவளது பொறுமையை சோதித்து ட்யூட்டி டாக்டருடன் ஏதோ பேசியபடியே வந்து,

"உங்கள் நண்பர்கள் அவசர வேலையாய் வெளியூர் போயிருக்கிறார்களாம்" என்றாள்.

ட்யூட்டி டாக்டர் இளைஞனாகத் தெரிந்தான். வரிசையான பல்லை விளம்பரத்துக்குக் காட்டுவதுபோல சிரித்தான்.

" நீங்கள் ரிலாக்ஸ் செய்ய வேண்டும். உங்கள் அலுவலகத்துக்குத் தெரியும் உங்கள் விபத்தைப் பற்றி. தினமும் விசாரித்துவிட்டுப் போகிறார்கள். நீங்கள் ஓய்வெடுக்க வேண்டும்."

அவனைச் சிந்திக்கவே விடாமல் அவர்கள் தூங்க வைப்பதுபோல அவனுக்குத் தோன்றிற்று. இரண்டு ராஸ்கல்களுக்கும் வெளியூர் போகும்படி என்ன வேலையிருக்கும் என்று வியந்தபடி அவன் தூங்கிப் போனான். மீண்டும் கண் விழித்தபோது சற்று எட்டி ஸ்டூலில் யாரோ உட்கார்ந்திருந்தார்கள். இன்னொரு ப்ரூஸ் வில்லிஸ். இன்னொரு செத்துப் போனவன். ஸிக்ஸ்த் சென்ஸ் சிறுவனைப் போல எனக்கேற்பட்டிருக்கும் அமானுஷ்ய பார்வையாக இருக்க வேண்டும் இது. இறந்து போனவர்களெல்லாம் என் கண்ணுக்குத் தெரிகிறார்கள். பயப்படாதே என்று தட்டிக் கொடுக்கிறார்கள். ஆவிகளுக்கும் உணர்ச்சிகள் உண்டு. உன்னைத் துன்புறுத்தும் எண்ணம் அவர்களுக்கு இல்லை. ஆனால் உரிமை கோருவார்கள் என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். அவன் விழித்துக் கொண்டதை உணர்ந்தவனாய் அந்த இளைஞன் எழுந்து அருகில் வந்தான்.

"ஹலோ!" என்று சிநேகிதமாகச் சிரித்தான்.

"ஹலோ!" என்றான் ராஜமோகன்.

"நான் விவேக் குப்தா, உன் தோழன். உன்னுடன் வேலை செய்பவன்."

சற்று நேரம் அவனை உற்றுப் பார்த்தும் எந்த அடையாளமும் தெரியாமல்,

''உங்களை எனக்குத் தெரியாது''

என்றான் ராஜா சோர்வுடன்.

"இரவு வேறு ஒரு ஆள் வருகிறார். இடையில் ஒரு பெண் வருகிறாள். நீங்கள் எல்லாரும் திட்டமிட்டுச் செயல்படுவது போல் இருக்கிறது. தயவுசெய்து என்னைத் தொந்திரவு செய்யாதீர்கள்."

அந்த இளைஞன் வெட்கம் கெட்டவன் அல்லது சுரணையற்றவன். மெலிதாகச் சிரித்தான்.

"நண்பர்கள் தொந்திரவு செய்ய நினைக்க மாட்டார்கள்."

"நீங்கள் யாரென்று எனக்குத் தெரியாது."

"ஆனால் எனக்கு உன்னைத் தெரியும்." என்றான் விவேக் ஹிந்தியில். "நாம ரெண்டு பேரும் ஒரே கம்பெனியிலேதான் வேலை செய்யறோம்."

"ஜெனித் கம்ப்யூட்டர்ஸ்லேயா?"

"இல்லை. எஸெர் கம்பெனி."

ராஜா சிரித்தான்.

"நான் அதன் வாசலை மிதித்ததில்லை."

விவேக் சற்று நேரம் மௌனமாக இருந்தான். பிறகு அவனை மெல்லக் கேட்டான்.

"உடம்பு இப்பத் தேறி வருவதாக உணர்கிறாயா?"

"ஆமாம். நிறைய வித்தியாசம் இருக்கு. இன்னிக்குக் காலையில் கொஞ்சம் நடந்தேன்."

"குட்! இன்னும் கொஞ்சம் தேறட்டும். இரண்டு நாள் கழிச்சு உன்னை சந்திக்கிறேன், டாக்டருடைய அனுமதியோட."

அவன் ஏதோ பூடகமாகப் பேசுவது போல இருந்தது. ஆனால் அவன் கிளம்பிப் போனால்தான் தனக்கு நிம்மதி என்று தோன்றிற்று.

விவேக் கிளம்பும் முன் அவன் தோளைத் தொட்டான்.

"ராஜா, நீ என்னை நம்பணும், நா உன்னுடைய ஃப்ரெண்ட்."

ராஜா இலேசாகச் சிரித்தான். "ஓ.கே. தாங்க்ஸ்."

விவேக் குப்தா வார்டை விட்டு வெளியே வந்தபோது மெல்லிய பாரம் மனத்தை அழுத்திற்று. சகுந்தலாவின் ஆற்றாமையின் ஒரு துளியைத் தானும் அனுபவிப்பது போல இருந்தது. டாக்டர் சொன்னதுபோல ராஜா அரண்டிருந்ததுபோலத்தான் தெரிந்தான்.

டாக்டர் இன்று காலை அவனை அவசரப்படுத்தக் கூடாது என்று எச்சரிக்காமல் இருந்திருந்தால், "டேய் விழித்துக்கொள்" என்று அவனது தோளை உலுக்கியிருக்கலாம். பொறுமையிழந்து கம்பெனியின் பெயரைச் சொன்னதுகூட ராஜாவைக் குழப்பி உடல் நிலையை பாதிக்குமோ என்னவோ. ஆனால் எத்தனை நாட்களுக்கு இந்த ஊமை நாடகத்தை நடத்த முடியும்? ராஜா மடையனல்ல. சாதாரணமாக உணர்ச்சிவசப்படக் கூடியவனல்ல. வேலையில் அசாத்திய திறமைக் காண்பிப்பவன். 'உனக்கு விபத்தின் காரணமாக ஐந்து ஆண்டு நினைவுகள் அழிந்துவிட்டன' என்று சொன்னால் புரிந்து கொள்ள மாட்டானா? டாக்டர் அநியாயத்துக்கு எச்சரிக்கையாக இருப்பதாகத் தோன்றிற்று. நினைவு திரும்பாவிட்டாலும் அவனுடைய குடும்பத்திற்குத் திரும்ப வேண்டியது அவனுடைய பொறுப்பு என்று அவன் உணர வேண்டாமா? அவனை எதிர்பார்த்து சகுந்தலாவும் பரத்தும் இருக்கிறார்கள் என்பதை உணர்த்த வேண்டாமா? ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆனபிறகு அவன் வீட்டிற்குத் தானே திரும்ப வேண்டும்?

விவேக் தீவிர யோசனையுடன் பார்க்கிங் லாட்டை நோக்கிச் சென்றான். சகுந்தலாவை நினைத்து வருத்தமேற்பட்டது. விதி மிகக் குரூரமாக விளையாடுவதாகத் தோன்றிற்று. ஆனால் டாக்டர் சொல்வதுபோல இப்பவும் ஒன்றும் மோசமில்லை. அவனுடைய பெற்றோர்கள் மெல்லச் சொல்ல வேண்டும். அப்போதுதான் ராஜாவுக்கு நம்பிக்கை ஏற்படும். சரவணன் தம்பதியை நினைக்கையில் வினோதமாக இருந்தது. வெளியில் சென்றோ வெளி மாநிலத்தவருடன் பழக்கமோ அதிகம் இல்லை

மரகத 'வில்லி'

'படையப்பாவில்' நீலாம்பரியாகக் கலக்கிய ரம்யா கிருஷ்ணனுக்கு அடுத்து வந்த சீஸன் கொஞ்சம் டல்தான். கையில் சூலமும் வேப்பிலையும் எடுத்து பச்சைக் கலரில் அம்மன் வேஷம் போட்டதோடு சரி.

இப்போது அவர் இமயமலையாக நம்பியிருப்பது 'பஞ்சதந்திரம்' படத்தைத் தானாம்.

'மரகதவல்லி' என்ற வில்லி பாத்திரத்தில் பஞ்ச ஹீரோக்களுக்கும் பிரச்னை செய்யும் வேடத்தில் நடிக்கிறார்.

என்று புரிந்தது. ஆனாலும் சுபாவத்தில் சரளமானவர்கள் இல்லை என்று பட்டது.

'என்னை அவர்களுக்குப் பிடிக்க வில்லை' என்றாள் சகுந்தலா. எல்லா இந்திய மத்ய வர்க்கப் பெற்றோரும், தாங்கள் தேர்ந்தெடுக்காத மருமகளுக்குக் காட்டும் விரோதம் அது என்று அவன் நினைத்துக் கொண்டான். ஆனால் சரவணன் உலக விவகாரம் தெரிந்தவர். ஆஸ்பத்திரியலிருந்து டிஸ்சார்ஜ் ஆனதும் சகுந்தலாவிடம் ராஜா திரும்ப வேண்டிய அவசியத்தை அவர்தான் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

மகாராணி பாக் கெஸ்ட் ஹவுக்குச் விவேக் வண்டியைச் செலுத்தினான்.

சரவணன் தில்லி பதிப்பின் இந்து பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். ராஜாவின் அம்மா சன் டீ.வி. நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் எதிர்பார்த்ததைவிட சரவணன் அதிக உற்சாகத்துடன் அவனை வரவேற் றார். அம்மாள் டீ.வி.யின் ஒலியைக் குறைத்தாள்.

"உட்காருங்கள். உங்கள் சிநேகிதரைப் பார்த்தீர்களா?" என்றார் சரவணன்.

"உம், பார்த்தேன்." என்றான் விவேக். "டாக்டர் உங்களிடம் சொல்லியிருப்பாரே? ஐந்து ஆண்டு கால நினைவு ராஜாவுக்கு இப்ப இல்லை. என்னை அதனால் அவ னுக்குத் தெரியவில்லை."

சரவணன் அவனை எடைபோடுவது போல பார்ப்பது அவனுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது.

" நினைவு மெல்லத் திரும்பும் என்கிறாரே டாக்டர்?"

"ஆமாம். ஆனால் அதற்கான காலக்கெடு என்று ஒன்றும் இல்லை. நீங்கள் இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கே இருக்கப் போகிறீர்கள்?"

"இன்னும் ஒரு வாரம் இருக்கலாம் என்று எண்ணம். எதற்குக் கேட்கிறீர்கள்?"

அவன் சற்று மௌனமானான். இப்போது ஒலி சுத்தமாக இல்லாமல் சன் டீ.வி. ஒரு பாடல் காட்சியைக் காண்பித்தது.

"சகுந்தலாவின் நிலைதான் ரொம்பப் பாவமாக இருக்கிறது" என்றான் அவன்.

சரவணன் எதுவும் பேசவில்லை. டீ.வி.யை காமாட்சி அணைத்தாள்.

"ராஜா அவளைக் கிட்டவே வரவிடுவதில்லை."

சரவணன் சற்று நிமிர்ந்தார், இலேசாகப் படபடத்தார்.

"பின்னே அவன் வேறு எப்படி நடந்து கொள்வான்? அவன் இப்போது அவனுக்கு முன்பின் தெரியாத ஒரு பெண். நான் உன் மனைவி, என் குழந்தையின் தகப்பன் நீ என்று சொன்னால், எந்த யோக்கியனும் அரண்டு போகமாட்டானா?"

அவருடைய பேச்சை காமாட்சி ஆமோதிப்பதுபோல மண்டையாட்டினாள். அவர்களுடைய மனசில் என்ன இருக்கிறது என்று புரியாமல் அவன் தடுமாறினான்.

"அவனுடைய மறதியினால் அவன் அரண்டு போயிருக்கிறான்" என்றான் அவன் நிதானமாக.

"ஆனால் அவனுக்கு மனைவி இருக் கிறாள். குழந்தை இருக்கிறது. அவர்களை அவனுக்கு இப்போது நினைவு இல்லா விட்டாலும் நீங்கள் அதை அவனிடம் எடுத்துச் சொல்ல வேண்டும், அவன் ஏற்றுக் கொள்ளும்படியாக."

"எப்படி?" என்றார் சரவணன் சவால் விடுவதுபோல.

"எங்களுக்கே தெரியாது அவனுக்குக் கல்யாணமானது பத்தி. அவனை நாங்கள் எப்படி நம்ப வைப்பது? சினிமாவில் வருகிற மாதிரி கோவில்லே மாலை மாற்றிக் கொண்டானா, ரெஜிஸ்டர் கல்யாண மான்னு தெரியாது. அந்தப் பெண்ணையே போய்க் காண்பிக்கச் சொல்லுங்கள் கல்யாண போட்டோவையோ, ரெஜிஸ்ட் ரேஷன் சர்டிஃபிகேட்டையோ."

விவேக் எழுந்தான், சகுந்தலா என்ற பெயரில் தான் கோளாறு என்று நினைத்தபடி.

(தொடரும்)



கைதி கண்ணாயிரம்

"கைதி கண்ணாயிரம் தப்பி ஓடிட்டான் சார்!"

"தடயம் ஏதாவது கிடைச்சுதா?"

"இன்னும் ஒரு வாரத்துக்குள்ள மாமூல் அனுப்பி வைக்கிறேன்னு கடிதம் போட்டிருக்கான் சார்"

- காழி ஆர்.சீதாராமன்



தம்புராசாமி



"அந்தாளுக்கு கச்சேரிலே தம்புரா போட வாய்ப்பு கிடைச்சுட்டுதாம். அளவுக்கு மீறி சந்தோஷப்படறாரே!"

"அப்படி என்ன செய்துட்டாரு?"

"தம்புசாமின்கிற பேரையே தம்புரா சாமின்னு மாத்தி வைச்சுக்கிட்டாருன்னா, பாரேன்!"

- பார்வதவர்த்தினி

சிரிக்க வைச்சவங்களோட லிஸ்ட்!

சித்ரா

"சித்ரவதைன்னு சொல்லு, கேள்விப்பட்டிருக்கேன்; நீ என்ன சித்ராவதைன்னு சொல்றே?"

"என்னோட மருமகள் பேரு சித்ரான்னு தெரியாதா உனக்கு?"

- சீர்காழி வி.ரேவதி



மகாராஜா

''நமது மன்னர் கஜானா காலின்னு சொன்னப்ப நம்புறது கஷ்டமா இருந்துச்சு...''

''இப்ப மட்டும் எப்படி நம்புறியாம்?''

''புலவர் வேடம் போட்டுக்கிட்டுப் போய், பக்கத்து நாட்டு மன்னரைப் புகழ்ந்து பாடி பொற்காசுகள் வாங்கிட்டு வந்திருக்காரே!''

- வெள்ளாளப்பட்டி சந்தோஷ்



மாலா

''என் பொண்டாட்டி மாலா தொடர் பைத்தியம் ஆயிட்டா.''

''அப்படியா?''

''தொடருன்னு வர்றதால பாராளுமன்ற கூட்டத் தொடர், சட்டசபை கூட்டத் தொட ரெல்லாம் எந்த டி.வி.யில காட்டுறாங்கன்னு கேட்குற அளவுக்குப் போயிட்டா!''

- வி.சகிதாமுருகன்



பக்கிரிசாமி

''டாண் டாண்ணு மாமூல் வெட்டுற நம்ம பக்கிரிசாமி இப்ப வித்யாசமா கேட்கிறான், ஸார்...''


''அப்படி என்ன கேட்டான்?''


''புது தெருவுல எட்டாம் நம்பர் வீட்டுலே இன்னிக்குத் திருடப் போறேன். எனக்குக் கறுப்புப் பூனைப் பாதுகாப்பு வேணும்னு கேட்கிறான்!''

- காழி. ஆர்.சீதாராமன்















துட்டாலேயே விரிக்கப்பட்ட பாய். இதன் சுருக்கம்தான் து'பாய்' என்றானதோ என்ற சந்தேகம் சமீபத்தில் உல்லாசப் பயணிகளுக்கு ஏற்பட்டது. அதற்குக் காரணம் உலக அரங்கில் சுற்றுலாத் துறையில் நிரந்தர இடத்தைப் பிடிக்கும் நோக்கில் நடத்தப்பட்ட துபாய் ஷாப்பிங் திருவிழா!

அதிசயம், ஆச்சரியம், வேடிக்கை, விளையாட்டு, வினோதங்கள், ஷாப்பிங், உணவு, மெகா பரிசுகள் என்று முப்பது நாளும் கொண்டாட்டம் கோலாகலம்தான்!

துபாய் போலீஸ் அகடெமி அரங்கில் அமைக்கப்பட்டிருந்த மிகப் பிரமாண்டமான அரங்கில் 'துபாய் ஷாப்பிங் திருவிழா'வைத் தொடங்கி வைத்தார், ஐக்கிய அரபு அமீரகத்தின் இராணுவ மந்திரியும், துபாயின் பட்டத்து இளவரசருமான ஜெனரல் ஷேக் முகம்மது பின் ராஷீது அல் மக்தூம்.

தொடக்க விழாவே பிரமிப்புகளின் தொகுப்புதான். ஐந்து கண்டங்களைச் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்களின் நடனமும் இசையும் கூடவே லேசர் லைட்டும் இணைந்து பார்வையாளர்களைப் பிரமிக்க வைத்தன. இவற்றுடன் வாண வேடிக்கையும் சேர்ந்தால் நிகழ்ச்சியின் பிரமாண்டம் ஹம்மா... ஹம்மா... துவக்க விழாவிற்கு மட்டுமே 10 மில்லியன் திர்ஹம் (சுமார் 24 கோடி ரூபாய்) செலவு!

'ஷாப்பிங் திருவிழா'வில் மிக அதிகமான மக்களைக் கவர்ந்தது, குளோபல் வில்லேஜ்தான்.

ஒவ்வொரு வருடமும் குளோபல் வில்லேஜுக்குப் பார்வையாளர்கள் அதிகமாக வருவதால்... இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு இந்த ஆண்டு 1200 ஏக்கரில் அமைந்துள்ள துபாய் ஃபெஸ்டிவல் சிட்டியில் 'குளோபல் வில்லேஜை' அமைத்திருந்தார்கள்.

'குளோபல் வில்லேஜி'ல் நுழைந்ததும் முதலில் நமக்கு அதிசயம், பிறகு ஆச்சரியம்! உலகத்தில் துபாய் உள்ளதா.. அல்லது துபாயில் உலகம் உள்ளதா. அந்த அளவிற்கு சுமார் 28 நாடுகளின் அரங்குகளைக் கண்களைக் கவரும் வண்ணம் அமைத்திருந்தார்கள். ஒவ்வொரு அரங்கினுள்ளும் அந்தந்த நாட்டு கைவினைப் பொருட்களின் ஸ்டால்கள். அந்தந்த நாடுகளின் கலை, கலாசாரம், பண்பாட்டை விளக்கும் வண்ணம் தினசரி கலை நிகழ்ச்சிகளும் உண்டு.

இந்தியா, இலங்கை,

அந்த









ஈரான், சௌதி, யெமன், வியட்நாம், லெபனான், பிலிப்பைன்ஸ், குவைத், தாய்லாந்து, சீனா, எகிப்து, பாகிஸ்தான் இந்த அரங்குகளில் மக்கள் வெள்ளம்.

இவற்றில் நமது இந்திய அரங்கம்தான் மிகப் பெரியது. உச்சியில் மூவண்ணக் கொடி, பட்டொளி வீசிப் பறக்க.. 95 மீட்டர் நீளத்திற்கு கோல்கொண்டா கோட்டையை அப்படியே அச்சாக அமைத்திருக்கிறார்கள்.

இந்திய அரங்கினுள் நுழைந்தால், இன்னும் ஆச்சரியம்... சுமார் 50 அடி உயரத்தில் 'சார்மினார்' அசத்துகிறது.

இந்திய அரங்கில் காஷ்மீர் சால்வை முதல் கன்னியாகுமரி சங்குவரை அனைத்தும் கிடைக்கின்றன.

துபாய் இந்தியன் அசோசியேஷன் உதவியுடனும், ஆந்திரா அரசின் முழு ஒத்துழைப்புடனும் இந்திய அரங்கை அமைத்துள்ளனர்.

இந்த 'குளோபல் வில்லேஜில்' சுமார் 44 உணவு விடுதிகளும் உள்ளன. 'ஃபாஸ்ட் புட்' முதல் எல்லா நாட்டு உணவுகளும் கிடைக்கின்றன. சிறுவர் சிறுமிகளுக்குப் பொழுது போக்க.. ஏராளமான விளையாட்டு அரங்குகளும் உள்ளன.

ஒவ்வோர் ஆண்டும் 'துபாய் ஷாப்பிங் திருவிழா'வை ஒரு தலைப்பில் நடத்துகிறார்கள். இந்தாண்டு தீம், 'ஒரு உலகம், ஒரு குடும்பம், ஒரு ஃபெஸ்டிவல்' என்பதாகும். இந்தத் தலைப்பை 'குளோபல் வில்லேஜ்' - நிரூபித்துக் காட்டியது.

அடுத்து, 'ஹெரிட்டேஜ் வில்லேஜ், துபாய் என்னதான் ஒரு ஹைடெக் நகரமாக மாறி... முன்னேறிக் கொண்டிருந்தாலும், இன்னும் பழமையை மறக்கவில்லை என்பதற்கு, ஹெரிடேஜ் வில்லேஜ் ஓர் உதாரணம்.

எண்ணெய் வளம் கிடைப்பதற்கு முன்பிருந்த, அரபு நாடு, அரபு மக்கள், அரபுக் கலைகள் கலாசாரம், உணவு, உடைகள், ஆபரணங்கள், கைத் தொழில்கள் எல்லாவற்றையும் அப்படியே நம் கண்

அரபிக்கடையோரம்!

முன்னால் கொண்டு வந்து காட்டுகிறார்கள். அரபிகள் விரும்பிக் குடிக்கும் 'காவா' எனப்படும் 'காஃபி' எப்படி தயாரிப்பது என்பதை, செய்முறையில் விளக்குகிறார்கள். நமக்கு குடிக்கவும் தருகிறார்கள்.

துபாய்க்கு வந்துவிட்டு, 'தங்கச் சந்தைக்கு 'விசிட்' செய்யாவிட்டால்... துபாய் ஷாப்பிங் திருவிழாவின் புண்ணியம் முழுமையாகக் கிடைக்காது!

துபாய் 'கோல்டு'க்கு எப்பொழுதும் தனி கவர்ச்சி உண்டு. தங்கச் சந்தையின் இரு பக்கமும் சிறியதும் பெரியதுமாக நானூறுக்கும் மேற்பட்ட நகைக் கடைகள். கடைகளின் முன்புள்ள 'ஷோ கேஸில்' அடுக்கி வைக்கப்பட்டுள்ள நகைகளை மக்கள் கண் கொட்டாமல் நின்று... பார்த்துச் செல்கின்றனர்.

'ஷாப்பிங் திருவிழா' சமயத்தில் தங்கக் குவியல் பரிசுகளும் உள்ளன. ஏதாவது நகைக் கடையில் ஐந்நூறு திர்ஹம் பெறுமான தங்க நகை வாங்கும்போது, ஒரு கூப்பன் தருகிறார்கள். அதிலிருந்து தினசரி இரவில் ஒரு சீட்டு எடுத்து... அதிர்ஷ்டசாலிக்கு ஒரு கிலோ தங்கம் பரிசளிக்கிறார்கள்!

அது மட்டுமல்ல. இருநூறு திர்ஹம் கொடுத்து, ஒரு பரிசுக் கூப்பன் வாங்கினால், தினசரி அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு. இரண்டு 'லிக்ஸஸ்' கார்களோடு.. இரண்டு இலட்சம் திர்ஹம் ரொக்கமும் கொடுக்கிறார்கள். பரிசுத் தொகை மொத்தம் எவ்வளவு தெரியுமா? சுமார் 60 லட்ச ரூபாய்! அம்மாடியோ!

இன்னும், தினசரி ஒரு நிஸான் பெட்ரோல் காரும் பரிசாகக் கிடைக்கிறது. போதாதற்கு, பெரிய ஷாப்பிங் சென்டர்களில் தனித்தனியாக ஏராளமான பரிசுகள்.

சர்க்கஸ், மேஜிக், சிற்பம் செய்தல், உலகப் பிரசித்திப் பெற்ற விளையாட்டுகள், சைபர் உலகம், நெட் ஸோன், ஹெல்த் மார்க்கெட், மோட்டார் பைக் விளையாட்டு இப்படி ஏராளமான அம்சங்கள் உள்ளன.

அல் மெரக்காபாத் ஏரியாவில், ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த, ஜென்னி ரோஸன் என்ற பெண்மணி அமைத்துள்ள மண் கோட்டை எல்லோரையும் கவர்ந்து இழுக்கின்றது. சுமார் இருபதடி உயரத்தில், சாதாரண மண்ணைக் கொண்டு, கலை நயத்துடனும் கற்பனை வளத்துடனும், மிக நேர்த்தியாகச் செய்யப்பட்டுள்ள இம் மண் கோட்டை இவ்வாண்டு ஷாப்பிங் திருவிழாவின் முக்கிய அம்சமாக இருந்தது.

கை நிறைய சம்பளத்தோடு, ஏசி வைத்த படகு போன்ற ஃபாரின் காரில் வலம் வரும் பணக்காரர்கள் முதல், குறைந்த சம்பளத்துக்கு நாள் முழுக்க சுடும் வெயிலும் மணல் காற்றிலும் கஷ்டப்படும் தொழிலாளி வரை... இந்த ஷாப்பிங் திருவிழாவை சொர்க்க லோகம் போல ரசிக்கிறார்கள்...

கட்டுரை, வண்ணப்படங்கள் :

துபாய் இப்ராஹீம்

மினி குத்துவிளக்கு!

ஆறு கிராம் எடையில் ஐந்து செ.மீ. உயரமுள்ள மினி ஐந்து முக குத்து விளக்கொன்றை வர்கலாவில் உள்ள கடக்காவூரைச் சேர்ந்த செல்வன் ஆச்சாரி என்பவர் உருவாக்கியிருக்கிறார். பன்னிரண்டு வயது முதல் இந்தத் தொழிலில் ஈடுபாடு காட்டி வரும் இவர், குறைந்த எடையில் சிறிய ஆபரணங்களைச் செய்வதில் கெட்டிக்காரர். 800 மி. கிராம் எடை தங்கத்தில் 23 அங்குலத்தில் மினி நெக்லஸ் ஒன்றைத் தயாரித்தது இவரது மற்றொரு சாதனை.



- அ. குமார், பெங்களூர்

நீங்களும் சிந்தி போல் ஆகலாம்



கலக்கல் டிரஸ்ஸில் இருக்கும் சிம்ரனையோ, விக்ரமையோ பார்த்ததும் மனசு சந்தோஷத்தில் குதிக்கிறதா? பார்ப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் அடுத்த ஸ்டெப்புக்கு செல்ல ஆசை வருகிறதா? Don't worry.....

வேலை இல்லாத் திண்டாட்டம் இந்தியாவில் தலைவிரித்து ஆடுகிறது அல்லவா? படித்துக் முடித்த கையோடு வேலையென்றால் "மனசு சந்தோஷத்தில் குதிக்கிறதா? இந்த சந்தோஷத்தில் திளைக்க வேண்டுமென்றால்.. அதற்கு நீங்கள் ரெடிமேட் ஆடை தயாரிப்பு மற்றும் Design Course படித்திருக்க வேண்டும்.

மொத்தமாகப் பத்து மீட்டருக்கு சீட்டித் துணியெடுத்து தலையணைக்கு உறை முதல் குட்டிப் பிள்ளைக்கு கவுன் வரைக்கும் தைக்கும் காலம் மலையேறி விட்டது. நாம கால்வயித்துக் கஞ்சி குடிச்சாலும் பிள்ளைகளுக்கு நல்ல உடுப்பு வாங்கித் தாரும் என்ற மனோபாவம் வந்து விட்டது.

இப்போதெல்லாம் டெய்லரிடம் கொடுத்து தைத்து போடும் கலாசாரம் கட்டெறும்பு போலத் தேய்ந்து போய்விட்டது. ரெடிமேட் ஆடைகள் தான் நிலையான ஆட்சி நடத்துகின்றன. உள்நாட்டுத் தேவை ஒருபுறம் என்றால், தாராளமய பொருளாதாரக் கொள்கையை நாம் ஏற்றுக் கொண்ட பிறகு ஜவுளி ஏற்றுமதி மூலம் பதினான்கு சதவீத அந்நியச் செலாவணி இந்தியாவுக்குக் கிடைக்கிறது. இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால், கடந்த ஆண்டு இந்தியா ஏற்றுமதி செய்த ஜவுளிகளின் மதிப்பு நாற்பத்தையாயிரம் கோடி ரூபாய் இதில் ரெடி மேட் ஆடைகள் மட்டும் இருபதாயிரத்து எண்ணூற்று முப்பத்து நாலு கோடி ரூபாய் ஜவுளி ஏற்றுமதியில் பாதியிடத்தை ஆடைகள் பிடித்துக் கொண்டு விட்டன என்பது ஒரு காஸ்ட்லியான தகவல்.

"தெருவுக்குத் தெரு டெய்லர்கள் இருக்கிறாங்க. அனுபவத்தில் டெய்லரா ஆனவங்களுக்கும் முறையா பயிற்சி எடுத்துட்டவங்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. முறையாய் பயிற்சி பெற்றவங்க துணியை வெட்டி, இணைக்கிறதுல நேர்த்தியோடவும் வேகமாவும் தைப்பாங்க. துணியை எப்படிப் போட்டுத் தைச்சா விரயமாகாது. அதே சமயம் ஃபாஷனாகவும் இருக்கும்னு தெரிஞ்சு வெச்சிருப்பாங்க!

மொத்தத்தில் ஆயத்த ஆடைகளுக்கான (ரெடிமேட் டிரஸ்ஸஸ்) தேவை ஏகத்துக்குப் பெருகி இருக்கிறது. ஆனால், இத்தொழிலில் உள்ள வாய்ப்புகள், தேவைகள் பற்றிய விவரங்கள் நிறைய பேருக்குத் தெரியவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு தான் சென்னை கிண்டியிலுள்ள ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடி-வமைப்பு மையம் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் மத்திய அரசின் ஜவுளித் துறையைச் சார்ந்த ஆயத்த ஆடை ஏற்றுமதி வளர்ச்சி கழகத்தின் கீழ் செயல்படுகிறது. முறைப்படி இத்தொழிலைக் கற்றுத் தரும் இம் மையத்தால் பலர் வெற்றியடைந்து உள்ளனர். அதன் துணி வகைகள், தன்மைகள், சாயங்கள், பிரிண்டிங், டிசைனிங்; தையல் மெஷின் இயக்குதல், தையல் மெஷின் பழுதுபார்த்தல், புதிதான பேட்டர்ன்கள் அமைப்பது, நவநாகரீக ஆடை வடிவமைப்பது. உற்பத்தியைப் பெருக்குவது. தரக்கட்டுப்பாட்டை நிர்ணயிப்பது போன்ற பல ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கான தொழிற் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. அரசின் சலுகை காரணமாக கட்டணம் ரொம்பவும் குறைச்சல். பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகள் தேர்ச்சியடைந்திருந்தால் போதும். வயது வரம்பு இல்லேங்கறதால திருமணமான பெண்களும் கூடக் கத்துக்கறாங்க. படிச்சிட்டு வேலையில்லைன்னு அலையற இந்தக் காலத்துல, இந்த துறையில் ஏராளமான ஆட்களுக்கு வேலை தயாரா இருக்கு. வெளியே போய் வேலை பார்க்கப் பிடிக்காதவங்க சுயதொழில் கூடப் பண்ணலாம்.

உணவுக்கும், உடைக்கும் முக்கியத்துவம் தரும் மக்கள் இன்றைய காலத்தில் உடைக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள். எப்போதும் ஒரே மாதிரி இல்லாமல் நாளுக்கு நாள் Fashion Trend மாறுவதால் நாமும் நமது உடைகளின் Style ஐ மாற்றிக் கொள்ள தவறவில்லை என்பது உண்மையே தரமான நிறுவனத்தின் மூலம் சிறந்த முறையில் பயிற்சிபெறுவது இப்போது மட்டுமல்லாமல் எதிர்காலத்திலும் நல்ல வருமானத்திற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

மேற்கண்ட பயிற்சிகள் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மற்றும் ஜீலை மாதங்களில் தொடங்கப்படுகிறது. ஜீலை 2002 வருடத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் விபரங்கள் அறிய COURSE GUIDE – ஐ ரூபாய் 50/– நேரில் செலுத்தியோ அல்லது Apparel Training & Design Centre, Chennai என்ற பெயருக்கு Bank Demand Draft யை தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பி கீழ்கண்ட விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்

APPAREL TRAINING & DESING CENTRE

Sidco Readymade Garment Company
Industrial Estate, Guindy, Chennai - 600 032.
Phone : 044 - 231 2121.

வட்டமேஜை

மேலே முள்ளிருக்கும் பலாப் பழத்திற்குள்ளும் சுவையான சுளை இருப்பது போல, அடாவடி செய்த மனிதன் நெஞ்சிலும் பிறர்க்கு உதவி செய்யும் பெருங்குணம் இருக்கும் என்பதை எடுத்துக் காட்டிய அழகான சிறுகதை 'ராங் பண்ணின ராஜா!'
திருப்பரங்குன்றம், டி.கே.சுப்பிரமணியன்



கேரளச் சாரல் மீரா ஜாஸ்மின், என்னை அட்டையை விட்டு அடுத்த பக்கத்துக்குப் போகாமல் தடுத்துவிட்டார்.
கோவை, டி.ஜெய்சிங்

இடைத் தேர்தல் என்றால் இனி ஆளுங்கட்சியே வென்றதாக அறிவித்து விடலாம். அப்படி ஒரு நிலையை உருவாக்கிவிட்டது தமிழகம்!
பொன்மலை, ஆர்.பிரகாஷ்

'கணிக்கொன்னா' மரம் பற்றியும்... மழை வரும் வருடமாக்க தென்மேற்குப் பருவமழை தயாராகியுள்ளது என்பது பற்றியும் சொன்ன கல்கியை, பரந்த மனம் கொண்ட வானமாய்ப் பார்க்கிறோம்.
பொன்னேரி, பொன்.கவி. பிரம்மன்

'மாற்றான் தோட்டத்திலிருந்து பறித்து வழங்கும் மடல்கள் பல தகவல்களைப் பரிமாறி, நன்கு மணம் வீசுகின்றன.
நெய்வேலி, ப.உ.த்தண்டராமன்

பிரபல நாளிதழ்கள் பலவும் கிரிக்கெட் வீரர் க்ரோன்யே மரணத்தை, சாதாரண செய்தியாக்கி அதிகம் கண்டு கொள்ளாத போது, அவரது கிரிக்கெட் சாதனை, 'சாத்தானால் வந்த சூதாட்ட சோதனை, பாதிரியாரிடம் வெளிப்படுத்திய வேதனை ஆகிய வற்றை அழகாக வெளியிட்ட உங்கள் பாணி அருமை!
சேத்துப்பட்டு, வி.பிரசன்னகிருஷ்ணன்

எங்க பாடு கொண்டாட்டம்!

'அட்மிஷன் டைம்!'ங்கிறதுக்கு பதிலா 'வயிற்று வலி டைம்'னு வெச்சிருக்கலாம். அம்புட்டு நேரம் குலுங்க வைத்தன.
தோட்டப்பாளையம், திருமலைநாயகன்

ஒரு புறம் வாசகர்கள் 'தேன்கூடு' பகுதி மூலம் தகவல் சுரங்கம் தோண்ட, மறுபுறம் நீங்கள் தத்துவச் சிந்தனைகளை மழையெனப் பொழிய எங்கள் பாடு கொண்டாட்டம்தான்.
குட்டலாடம்பட்டி, கொ.மூர்த்தி

பரமஹம்சர், கபீர், பட்டினத்தார், புத்தர், மகாவீரர் ஆகியோரின் தத்துவக் கதைகள் இதழுக்குத் தனி சோபையை நல்கின!
நெய்வேலி, சு.ஸ்ரீகாந்த்

ஜெர்மனியில் அதிபர் தேர்தலில் முடி பிரச்னை பற்றிய கட்டுரை வெகு சுவாரசியம். இந்த அயல் நாட்டுப் பிரச்னையை அம்மா பற்றிய மேட்டரோடு இணைத்து கட்டுரையை 'முடி'த்த விதம் சூப்பர்.
அயன்புரம், த.சத்தியநாராயணன்

சில மேடை நினைவுகள்...

மேடைகளில் சிறப்பாகப் பேசும் எழுத்தாளர்கள் சிலர் உண்டு. கண்ணதாசன், ஜெயகாந்தன், நா.பா., சோ போல. சு.நா.சு. மேடையில் பேசுவதைக் கண்ணை மூடிக் கொண்டு கேட்டால் அவர் தம் கட்டுரை ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கிறாரோ என்ற பிரமை தோன்றும். பார்வையாளர்களை உயர்ந்த தளத்திற்குக் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் வகையில் விஸ்தாரமாகவும் கம்பீரமாகவும் பேசும் ஆற்றல் மிக்கவர் சுந்தரராமசாமி. திருநெல்வேலியில் ஜி. நாகராஜன் புத்தக வெளியீட்டு விழாவில் அவர் இடைவேளை விட்டு இரண்டு பகுதிகளாகப் பேசி சுமார் இரண்டு மணி நேரப் பேச்சு, மேடைப் பேச்சு வரலாற்றில் இடம் பெறத் தக்கது. மேடையில் பேசவே வராத எழுத்தாளர்களும் உண்டு. 'எழுத்தாளர்கள் பேச வேண்டியவர்கள் அல்ல. பேசப்பட வேண்டியவர்கள்' என்பவர்களும் உண்டு.

ராஜாஜி, காமராஜ் காலத்தில் மேடை ஒரு கோயில் போல் கருதப் பட்டது. சத்தியத்தைத் தவிர வேறு எதையும் மேடையில் பேச அஞ்சியவர்களின் காலம் அது. இப்போது மேடைகளில் 'மெய்' மறந்து பேசுபவர்களே அதிகம். துளிக்கூடக் கூச்சமே இல்லாமல் தங்களைத் தாங்களே முன்னிலைப்படுத்திக் கொள்ள மேடையைப் பயன்படுத்தும் தந்திரக்காரர்களும் பெருகிவிட்டார்கள்.



• சுஜாதா



• ராஜ்



• நாசர்



அண்மையில் ஒரு கவிஞர் மேடையில் தன்னைப் பற்றிய ஒரு விஷயத்தைச் சொல்லி ஆச்சரியப்பட்டுக் கொண்டார். "என்னடா இது! ஆயிரக் கணக்கில் செய்யுள்கள் எழுதிவிட்டேன். இன்னும் எனக்கு நோபல் பரிசு தரப்படவில்லையே!" (கேட்டுக் கொண்டிருந்த என் நண்பர் ஒருவர் கையில் வைத்திருந்த அந்தக் கவிஞரின் புத்தகத்தாலேயே தன் தலையில் இரண்டு போடு போட்டுக் கொண்டு, 'சே!' என்ற ஒற்றைச் சொல்லை உதிர்த்து விட்டு அவையைவிட்டு வெளியேறினார்.) வேறொரு கவிஞர் இருக்கிறார். அவரைப் பற்றி யாராவது மேடையில் பாராட்டிப் பேசினால், ஒரு நன்றிக் கடிதம் எழுதி, கூடவே ஓர் இனிப்புப் பெட்டியையும் வைத்து பாராட்டியவர் வீட்டுக்கு அனுப்பிவிடுவார்!

நாடகக் கலைஞர்கள் மேடைக்கு வரும் போது, மேடையைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்வார்கள். மேடைக்கு அவர்கள் கொடுக்கும் மரியாதை அது. மந்திரிகள் வீற்றிருக்கும் மேடைகளில் செய்யப்படும் முகஸ்துதிகள் நம் செவிப் பறையைக் கிழிக்கின்றன. தொண்டைக் குழியில் இருக்கும் டேப் ரிகார்டரின் ஸ்விட்சை ஆன் செய்து எல்லா

திருப்பூர் கிருஷ்ணன்

மேடைகளிலும் ஒரே பேச்சை விநியோகிக்கும் பிரமுகர்கள் எண்ணிக்கையும் இப்போது பெருகிவிட்டது.

சாவி 'கதிர்' ஆசிரியராக இருந்த காலம். சுஜாதா எழுத வந்த புதிது. எழுத்தாளர் சந்திப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார் சாவி. சுஜாதாவின் பேச்சு முடிந்ததும் கலந்துரையாடலுக்கும் வழி செய்யப்பட்டிருந்தது. அர்த்தமற்ற பல கேள்விகள் வந்தன. சுஜாதா அலுப்படைந்தார். திடீரென்று ஒரு வாசகர் 'உங்களுக்குப் பாடத் தெரியுமா?' என்று கேட்டார். "ஒரே ஒரு பாட்டுத் தெரியும், பாடுகிறேன்" என்ற சுஜாதா, அந்தப் புகழ் பெற்ற வங்காளிக் கீர்த்தனையைப் பாடலானார்! (ஜனகணமன தான்!). வாசகர்கள் திகைப்போடு எழுந்து நிற்க, கூட்டத்தை முடித்துக் கொண்டு போயே போய்விட்டார்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் பிலானியில் ஒரு கூட்டம். பிலானி தமிழ்ச் சங்கத்தில் நா.பா., ஜெயரதன், கல்கி குண்டு மணி, நான் ஆகியோர் பேசினோம். நா.பா.வுக்கு முன்னதாக நான் பேசினேன். அடுத்து நா.பா. பேசி கூட்டம் நிறைவடைய வேண்டும். ஆனால் அவருக்கு திடீரென்று உடல் நலம் குன்றி மூச்சிழுப்பு வந்துவிட்டது. வெளியே எதுவும் தெரிவிக்காத அவர், 'நான் சொல்லும் வரை தொடர்ந்து பேசுங்கள்' என்று சீட்டெழுதி என் பேச்சினிடையே கொடுத்தார். நான் இயன்றவரை பேச்சை வளர்த்தினேன். பிறகு ஒலிபெருக்கி முன் வந்த நா.பா: 'நான் சொல்ல விரும்பியதையெல்லாம் இதோ இங்கே இவர்கள் சொல்லிவிட்டார்கள். இனி நான் சொல்ல ஒன்றுமில்லை.' என்று அமர்ந்துவிட்டார். கூடியிருந்த பொதுமக்கள் ஏதும் அறியாதவாறு கூட்டத்தை நிறைவு செய்து நா.பா.வை உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் சென்றோம்.

ஒருமுறை, சென்னை ஏவி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் சொற்பொழிவு செய்து கொண்டிருந்த சத்தியசீலன், பேச்சைத் தொடர இயலாமல் அமர்ந்துவிட்டார். அவசரமாக மருத்துவப் பரிசோதனையை அவர் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது என் அருகே அமர்ந்திருந்த பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், என் கையைப் பிடித்துக் கொண்டு பட்ட கவலை கொஞ்ச நஞ்சமல்ல. திடீரென்று தாம் ஒருமுறை பேசும் சக்தியை இழந்துவிட்டதையும் இலங்கை சித்தயோக சுவாமிகளின் அருளால் தாம் மீண்டும் பேசும் ஆற்றல் பெற்றதையும் அப்போதுதான் நெஞ்சம் நெகிழ என்னோடு பகிர்ந்து கொண்டார் அவர்.

சென்னை ஃபிலிம் சேம்பரில் எழுத்தாளர் ராஜ் எழுதிய 'சாயங்கால வெளிச்சம்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா. இயக்குநர் எஸ்பி. முத்துராமன், நீதிபதி கற்பக விநாயகம், நடிகர் நாசர், சுப்பு ஆறுமுகம், மூவேந்தர் முத்து, எழுத்தாளரும் மருத்துவருமான ராஜலட்சுமி உட்பட பல பேச்சாளர்கள், நானும் பேசினேன். திடீரென்று என் அருகே ஏதோ சப்தம். நடிகர் நாசர் தடாலென்று கீழே மயங்கி விழுந்திருந்தார். ராஜலட்சுமி நாடி பிடித்துப் பார்க்க, அவசரமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நான் நூலாசிரியர் ராஜிடம் கேட்டேன், 'கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தலாமா?' என்று. 'கூட்டமா முக்கியம்? நமக்கு நாசரல்லவா முக்கியம்!' என்றார் ராஜ். கூட்டத்தை ரத்து செய்துவிட்டு, மருத்துவமனைக்குப் பறந்தோம். அதற்கு முந்திய நாள் திருமதி நாசருக்குக் குழந்தை பிறந்ததென்றும் மனைவிக்குத் துணையாக மருத்துவமனையில் இருந்த அவர் சரியாகச் சாப்பிடாததாலும் சரியாகத் தூங்காததாலும் மயங்கி விட்டார் என்றும் பிறகு தெரிந்தது.

மறுநாள் நாசரை நலம் விசாரிக்கச் சென்றேன். "நானா முக்கியம்? கூட்டமல்லவா முக்கியம்! கூட்டத்தை நீங்கள் தொடர்ந்து நடத்தியிருக்க வேண்டாமா?" என்று கேட்டார் அவர். "கூட்டத்தைவிட இலக்கிய ரசனையுள்ள நாசர் என்ற நடிகர் முக்கியம் என்று கருதினோம்" என்றேன் நான். அப்போது நடிகர் நாசர் மகிழ்ச்சியோடு சிரித்தாரே, அது நடிப்பல்ல, நிஜம்.


"தொலைந்து போன கணவனைத் தேடிக் கண்டுபிடித்து கூட்டிக்கிட்டு வந்தியே. இப்போ விரட்டி விட்டுட்டியே!"

"அரிசி கூப்பன் யார் வேணாலும் போய் வாங்கிக்கலாமாமே."

- எஸ். மோகன்









“நான் விற்பது கற்பூரம்; கள்ளச்சாராயம் அல்ல!”

“குடும்பத்தோடு தைரியமாகத் திரையரங்கு போய்வர நினைக்கிறவர்களுக்கு, கண்ணியம் காப்பாற்றப்படும் இவரது படங்கள்தான் பெஸ்ட் சாய்ஸ்” என்று சான்றிதழ் தருகிறார்கள் ரசிகர்கள். அப்படிப்பட்ட படம் ஒன்றை ஃபாக்ஸ் ஆபீஸ் வெற்றியாகக் கொடுத்து விட்டு பந்தா எதுவுமின்றி அமைதியாக இருக்கும் இயக்குனர் விக்கிரமனை அவரது இல்லத்தில் பிடித்தோம்.

நீங்கள் தேர்ந்து கொள்ளும் கதைகள், கதாபாத்திரங்களின் குணாதிசயங்கள், காட்சி அமைப்புகள் எல்லாம் ஒரே சாயலோடு இருக்கின்றன என்று ரசிகர்கள் சொல்கிறார்களே?

படத்திற்குப் படம் மாறுபட்ட கதைகளைத்தான் இதுவரை கையாண்டு வந்திருக்கிறேன். எனது கதை சொல்லும் பாணியில் சில ஒற்றுமைகள் இருக்கலாம். அது இப்படியொரு மேலோட்டமான உணர்வைக் கொடுக்கலாம் – அவ்வளவுதான்.

உங்களது ஒவ்வொரு படத்திலும் பின்தங்கிய நிலையில் இருக்கும், நாயகனோ, நாயகியோ ஒரே பாடலில் முன்னுக்கு வந்து விடுவது போல காட்டுவது தொடர்கிறதே?

இப்படிக் காட்டுவது ரசிகர்களுக்குப் பிடிக்கவே செய்கிறது. உழைத்தால் முன்னுக்கு வரமுடியும் என்பதைத் தன்னம்பிக்கை தெறிக்கிற மாதிரி சொல்லுகிறேன். தெருவோரங்களில் காகிதங்கள் பொறுக்கிக்







விக்ரமன் பேட்டி

கொண்டிருந்தவர் சிறுகச் சிறுக சேமித்து, ஒரு பழைய பேப்பர் கடை வைத்து, பிறகு பேப்பர் மில் தொடங்குகிற அளவுக்குத் தொழில்



அதிபராய் உயர்ந்தது போல எத்தனை சுயசரிதைகளை கீழே வைக்காமல் நாம் உற்சாகமாகப் படித்திருக்கிறோம்.

படிக்கிறபோது கிடைக்கிற திரில்லான உணர்வைத்தான், நான் எனக்கான சினிமா மொழியில், ஒரே பாடலில் முன்னேறுவது போல காட்டுகிறேன்.

முற்றிலும் புதிய முயற்சி என்று பேச வைத்த உங்களது 'புது வசந்தம்' மாதிரி மீண்டும் படமெடுக்க வேண்டும் என்ற எண்ணமில்லையா?

நான் வியாபார ரீதியாகப் படமெடுப்பவன். விக்ரமன் படத்தை நல்ல விலை கொடுத்து வாங்கலாம் என்று தியேட்டர்காரர்களும், விநியோகஸ்தர்களும் நம்பிக்கை வைத்து வாங்குகிறார்கள். இவர்களை நான் ஏமாற்றலாமா? கற்பூரத்தை விற்பதற்கும் கள்ளச் சாராயத்தை விற்பதற்கும் வித்தியாசமிருக்கிறது. நான் விற்பது கற்பூரம் என்ற அளவில் திருப்திபட்டுக் கொள்கிறேன். மற்றபடி சம்பாதிக்க வேண்டும், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகவெல்லாம், தவறான முன் உதாரணப் படங்களை நான் எடுப்பதில்லை.



பக்கத்திலிருக்கும் கேரளாவில் வியாபாரப் படமெடுக்கிற பல இயக்குனர்கள் வருடத்திற்கு ஒரு புதிய முயற்சியில் ஈடுபடுகிறார்கள்... அது போன்ற படங்களையும் ரசிகர்கள் ஆதரிக்கவே செய்கிறார்கள்...?

உண்மைதான். அதற்குக் காரணம் அங்கிருக்கும் பிரபல நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் தரும் முழுமையான

ஒத்துழைப்புதான். அங்கே பிரபலமாக இருக்கும், சூப்பர் டூப்பர் ஹிட் தரும் மம்முட்டியோ, மோகன்லாலோ, ஜெயராமோ, கலாபவன் மணியோ, கலைப்படம் என்றதும் பயந்து ஒதுங்குவதில்லை. மாறாக தங்கள் சம்பளத்தை, படத்தின் பட்ஜெட்டிற்குத் தகுந்த மாதிரி குறைத்து வாங்கிக் கொண்டு நடித்துக் கொடுக்கிறார்கள். தொழில் நுட்பக் கலைஞர்களும் கூட தத்தம் ஊதியங்களைக் குறைத்துக் கொள்கிறார்கள். இலக்கியமும் சினிமாவும் அங்கே கைகோத்துக் கொள்கின்றன. கமர்ஷியல் படங்களைத் தாண்டி அங்கே கலை முயற்சிகள் வாழ்வதன் பின்னணி இதுதான்.

ஏன் தமிழில் இப்படியொரு நிலை இல்லை?

இதற்கு மற்றவர்களைக் குறைசொல்லவோ, மற்றவர்களுக்குப் பொறுப்பில்லை என்று குற்றம் சாட்டவோ நான் விரும்பவில்லை... என்னளவில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் பத்து படங்கள்தான் எடுத்திருக்கிறேன். அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொண்ட பிறகு, எனது சொந்த பணத்தில், குறைந்த பட்ஜெட்டில் புதிய முயற்சிகளில் நிச்சயமாய் இறங்குவேன். இதற்குக் கால அவகாசம் தேவை.

வெற்றிப்பட இயக்குனர் என்று பெயரெடுத்த பின்பும், இமேஜ் உள்ள நடிகர்களைத்தான் நம்புகிறீர்கள்?

இதற்கு நான் மட்டுமே பொறுப்பாளி அல்ல. என்னை வைத்துப் படம் பண்ணுகிற தயாரிப்பாளர்கள், "படத்திற்கு நீங்கள் ஒரு ப்ளஸ் என்றால், கமர்ஷியல் வேல்யூ உள்ள நடிகர், நடிகைகள் ஒரு ப்ளஸ்' என்கிறார்கள். கமர்ஷியல் நடிகர் என்றாலும் கதைக்குப் பொருந்தாத முகங்களை நான் தேர்வு செய்வதில்லை. சமுதாயத்துக்கு ஒரு நல்ல செய்தியைக் கொண்டு சேர்க்கிற கதை என்றால், வெகுஜன வசீகரம் உள்ள ஒரு நடிகரை வைத்துக் கதை சொல்வதில் தவறில்லை.

ஒரு பழைய தங்கும் விடுதியில் முகாமடிக்கிற யதார்த்தமான பாத்திரங்களை 'உன்னை நினைத்து' படத்தில் அப்படியே பயன்படுத்தியிருக்கிறீர்கள். ஆனால் இந்த முறை இது போன்ற பாத்திரங்களுக்கு, கதையோடு அதிக தொடர்பு இல்லாமல் போனது ஏன்?

படத்தின் நீளம்தான் காரணம். கோடம்பாக்கம் 'லிபர்ட்டி' திரையரங்கின் எதிரில், நான் தங்கியிருந்த லாட்ஜைத்தான் 'அப்சரா' என்ற அதே பெயரில் பயன்படுத்தியுள்ளேன். அந்த லாட்ஜில் நான் சந்தித்த பாத்திரங்களைதான் பயன்படுத்தவும் செய்தேன்... ஒவ்வொரு பாத்திரத்துக்கும் கதையோடு நேரடித் தொடர்பும், ஒரு மென்மையான ஃபினிஷிங்கும் இருந்தது. படம் முடிந்த பிறகு படத்தின் நீளம் பயமுறுத்த, வேறு வழியில்லாமல் கத்தரி வைக்க வேண்டியதாயிற்று. இதனால் டிராக் காமெடி உணர்வு ஏற்பட்டு விட்டதை ஏற்றுக் கொள்கிறேன்.

உங்கள் எல்லா படங்களிலுமே பாத்திரங்களின் உரையாடல்களுக்கு இடையில் அதிக மௌனமும், பாத்திரங்களின் பரஸ்பர ரியாக்ஷன்களைக் காட்ட அதிக இடை

புது மாப்பிள்ளைக்கு நல்ல யோகமடா!

கிரிக்கெட் நட்சத்திரங்களும், முன்னணி சினிமா நட்சத்திரங்களும் குளிர் பான விளம்பரங்களில்



கூலாக நடித்து லட்சங்களில் சம்பாதித்துக் கலக்கிக் கொண்டிருக்க, சடகோபன் ரமேஷுக்கு இன்னும் ஒரு படி மேலே போய், சினிமா சான்ஸே கிடைத்து விட்டது.

ஒளிப்பதிவாளர் ஜீவா இயக்கும் படத்தில் லைலாவுடன் ஜோடியாக நடிக்கிறார் சடகோபன் ரமேஷ்

படத்தின் பெயரைக் கேட்டால் இன்னும் குளிர்ந்து போய்விடுவீர்கள். படத்தின் பெயர் 'பெப்ஸி'.

— அஜய்

வெளியும் இருக்கிறதே!

நிஜம்! உலகத்தரமான எந்த படத்திலும் இசைக்கென்றே அதிக இடைவெளி விட்டிருப்பார்கள். இரண்டு ஒலிகளுக்கு இடையே உள்ள மௌனம் தான் இசை என்கிறார்கள். பாத்திரங்கள் தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தால், உள்ளம் என்கிற மௌனக் குளத்தில் எப்படி கல்லெறிய முடியும்... பாத்திரங்களைப் புரிந்து கொள்ள உரையாடல்களைக் காட்டிலும், இசையைக் காட்டிலும் மௌனமே சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

நீங்கள் செய்கிற வேலைகளில் எதைச் சரியாகச் செய்கிறோம் என்று உணர்கிறீர்கள்?

நடைமுறையில் உள்ள வார்த்தைகள், சொலவடைகளைக் கொண்டு எல்லோருக்கும் புரியும்படி எளிமையாக உரையாடல் எழுதுகிறேன் என்று சொல்கிறார்கள். நானும் அவ்வாறே உணர்கிறேன்... காரணம் உரையாடலை நான் 'வசனம்' என்று சொல்வதில்லை.


ஒரு காய்கறிக்காரனும், ஒரு கல்லூரிப் பேராசிரியரும் அவரவர் மொழியில் பேச வேண்டும் என்று நான் விரும்புகிறேன். 'உன்னை நினைத்து' படத்தின் முடிவில் சூர்யா, லைலாவிடம் பேசும் வசனங்களுக்குத் தியேட்டரில் அபார அமைதி வெகுமதியாகக் கிடைக்கிறது. காரணம் அந்த உரையில் இருக்கும் நிஜத்தின் கனம்.

"மாத்தி மாத்தி ரெக்கார்டு பண்றதுக்கு காதல் ஒண்ணும் டேப்ரிக்கார்டர்லே போடுற கேசட் இல்லீங்க... அது மனசு. ரோட்லே போறோம்.. முன்னாடி போற கார்லே கதவு திறந்திருந்தா, ஓவர்டேக் பண்ணியாவது போய் 'டோர் சரியா சாத்தலே'னு எச்சரிக்கை பண்ணுவோம்_ எக்கேடு கெட்டாலும் பரவாயில்லைன்னு விட்டுட்டுப் போக மாட்டோம். முன்னே பின்னே தெரியாதவன் மேலேயே நமக்கு அக்கறை இருக்கும்போது நான் உங்களை லவ் பண்ணி இருக்கேங்க. உங்களை எக்கேடு கெட்டாலும் பரவாயில்லைனு விட்டுட்டுப் போக முடியுமா?"

சூர்யாவுக்குச் சொல்லிக் கொடுத்த அதே தொனியில் கடகடவென்று விக்ரமன் உரையாடலைச் சொல்லிமுடிக்க, நாம் கைகுலுக்கி விட்டு வந்தோம்.

சந்திப்பு: **விஷ்வல்தாசன்**

படங்கள்: **ராஜன்**



''உங்க பையனுக்கு டொனேஷனே குடுக்காம ஸ்கூல்ல அட்மிஷன் வாங்கிட்டீங்களாமே... எப்படி?''

"பையன் ஆளும் கட்சில சிறுவர் அணித் தளபதின்னு சொல்லி வைச்சேன்!''

— அம்பை தேவா



''ஏண்டா, உன்னோட தேர்ச்சி அட்டையில எல்லா பாடத்திலேயும் மார்க் போட்டிருக்காங்க. கணக்கு பாடத்திலே மட்டும் ஏதும் போடல?''

''அரசாங்கத்திலே முட்டை போட கூடாதுன்னு சொல்லிட்டாங்களாம் அப்பா!''

— தஞ்சை ராஜு



''சில நாட்களில் ஓட்டல் டிபன் வரவழைக்கிறீங்க; மனைவி அனுப்பற சாப்பாட்டை அப்படியே வீட்டுக்குக் கொண்டு போயிடறீங்க, ஏன் அப்படி?''

''சாப்பிடக்கூட நேரமில்லாத அளவுக்கு புருஷனுக்கு பாவம் வேலைக்கு மேல் வேலைன்னு அவ நினைக்கக்கத்தான்!''

- உ. ராஜாஜி

சிவகாமியின் சபதம்



நாற்பதாம் அத்தியாயம்

வாக்குவாதம்

நள்ளிரவைப் பட்டப் பகலாகச் செய்த பால் நிலவில், படகுகள் வராக நதியைத் தாண்டி அக்கரையை அடைந்தன.

கரை சேரும் வரையில் மாமல்லர் பேசவில்லை. பூர்த்தியடைந்த காதலினால் கனிந்திருந்த அவருடைய உள்ளம் கனவு லோகத்திலேயே சஞ்சரித்துக்கொண்டிருந்தது.

யுத்தம் முடிந்த பிறகு, வாதாபியின் அரக்கர் படையை ஹதம் செய்து அழித்து வெற்றிமாலை சூடிய பிறகு, காஞ்சியில் தாமும் சிவகாமியும் ஆனந்தமாகக் கழிக்கப் போகும் நாட்களைக் குறித்த மனோராஜ்யத்தில் அவர் ஆழ்ந்திருந்தார். பாலாற்றில் இது மாதிரியே வெண்மதி தண்ணிலவைப் பொழியும் இரவுகளில் தாமும் சிவகாமியுமாகப் படகிலே ஆனந்தமாய் மிதந்து செல்லப் போகும் நாட்களைப் பற்றி அவர் எண்ணமிட்டார்.

அவர் மனம் அப்போது சிறிதளவும் குறையில்லாமல் நிறைந்திருந்தது. விடை பெற்றுக்கொண்டு புறப்படும்போது, சிவகாமி உற்சாகமில்லாமல் ஒரு மாதிரி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு நின்றதையும், அதைக் கண்டு தனக்குக் கோபம் வந்ததையும் எண்ணினார். போர்க்களத்துக்குக் கிளம்புகிற பரபரப்பினால் தான் உற்சாகமாயிருப்பது இயல்புதான்; · ஆனால்

அமரர் கல்கி



சற்று தூரத்தில் பறந்து கொண்டிருந்த ரிஷபக் கொடியையும், அதைச் சுற்றிலும் நின்று கொண்டிருந்த பல்லவர் படையையும் பார்த்தார். தம்முடன் வந்த வீரர்களில் மிகப் பெரும் பான்மையோர் அங்கிருப்பதைக் கண்டு அவருக்குக் குதூகலம் உண்டாயிற்று.

சட்டென்று மாமல்லருக்குக் கண்ணபிரான் ஞாபகம் வந்தது. படகிலிருந்து கீழே இறங்கும்போதே, "தளபதி! கண்ணபிரான், எங்கே? அவன் உங்களுடன் 'வருகிறேன்' என்று சொல்லவில்லையா?" என்று கேட்டுக் கொண்டே இறங்கினார்.

சிவகாமி அப்படியிருக்க முடியுமா; - தம்மைப் பிரிவதில் அவளுக்கு மனச்சோர்வு உண்டாகாமல் இருக்குமா; அதற்காகத் தமக்குக் கோபம் வந்தது என்ன பைத்தியக்காரத்தனம் என்றெல்லாம் அவர் சிந்தித்தார்.

படகு 'தடார்' என்று கரையில் மோதி நின்றதும், மாமல்லரும் கனவு லோகத்திலிருந்து பூவுலகத்துக்கு வந்தார். கரையில்

"சொல்லாமலிருப்பானா? தானும் வருவதாகத்தான் பிடிவாதம் பிடித்தான். நான்தான் இங்கேயே இருந்து குதிரைகளுக்குத் தீனி போட்டுக் கவனிக்கும்படி கட்டளையிட்டேன். ஆறுகாத தூரம் ஒரே மூச்சில் நாம் போக வேண்டும் அல்லவா?" என்றார் தளபதி பரஞ்சோதி.

இருவரும் பல்லவர் படையருகே சென்றபோது, "பல்லவ குமாரர் வாழ்க!" "வீர மாமல்லர் வாழ்க!

வாழ்க!'' என்ற கோஷம் ஆயிரம் கண்டங்களிலிருந்து கிளம்பி எதிரொலி செய்தது.

அணிவகுத்த படையிலிருந்து ஒரு வீரன் முன்னால் வந்து நின்றான்.

''வரதுங்கா! என்ன சேதி?'' என்று பரஞ்சோதி கேட்டார்.

''தாங்கள் இங்கிருந்து சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் இரண்டு வீரர்கள் குதிரை மீது வந்தார்கள். அவர்கள் ரதத்துடன் கண்ணபிரானையும் பத்துப் போர் வீரர்களையும் அழைத்துச் சென்றார்கள்...''

''என்ன? கண்ணபிரானை அழைத்துச் சென்றார்களா?'' என்று பரஞ்சோதி பரபரப்புடன் கேட்டார்.

''ஆம், தளபதி! அவசர காரியமாகக் காஞ்சிக்குப் போக வேண்டும் என்று சொன்னார்கள்...''

''அந்த வீரர்கள் யார்? தெரியாதா...?''

வரதுங்கன் சற்று தயங்கிவிட்டு, ''தூதுவர்களில் ஒருவர், தமது பெயர் வஜ்ரபாகு என்று சொன்னார். இன்னொருவர் ஒற்றர் படைத் தலைவர் சத்ருக்னன். சிங்க இலச்சினை காட்டியபடியால் கண்ணபிரானையும், வீரர்களையும் அனுப்பினேன். இதோ தளபதிக்கு அவர்கள் கொடுத்த விடேல் விடுகு! *'' என்று கூறி ஓலையை நீட்டினான்.

வஜ்ரபாஹு'' என்று சொன்னவுடனேயே பரஞ்சோதியும் மாமல்லரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். வந்தவர் சக்கரவர்த்திதான் என்று இருவருக்கும் தெரிந்துபோய் விட்டது.

பரஞ்சோதி அவசரமாக ஓலையை வாங்கி நிலா வெளிச்சத்தில் பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

''தளபதி பரஞ்சோதிக்கு மகேந்திர போத்தரையர் எழுதுவது: நான் சௌக்கியம். துர்விநீதன் மழவராய கோட்டையில் சிறையில் இருக்கிறான். வாதாபிப் படை திருப்பதியைத் தாண்டி விட்டதாம். மாமல்லனை அழைத்துக்கொண்டு ஒருகணம் கூட வழியில் தாமதியாமல் காஞ்சி வந்து சேரவும். மாமல்லன் வருவதற்கு மறுத்தால் இந்தக் கட்டளையைக் காட்டி அவனைச் சிறைப்படுத்திக் கொண்டு வரவும்.''

இதற்குக் கீழே விடை வேல் முத்திரையிட்டிருந்தது. முத்திரைக்குக் கீழே மறுபடியும் எழுதியிருந்தது:

''ஒருவேளை நீங்கள் வருவதற்குள் கோட்டைக் கதவு சாத்தியாகி விட்டால், புத்த பகவானைத் தியானம் செய்யவும்.''

பரஞ்சோதி படித்துவிட்டு ஓலையை மாமல்லரிடம் கொடுத்தார். மாமல்லர் ஓலையை வாங்கிப் படித்தார். படித்துவிட்டுப் பரஞ்சோதியை நோக்கினார்.

''பல்லவ குமாரா! தொந்தரவு கொடுக்காமல் உடனே கிளம்புகிறீர்களா? உங்களைச் சிறைப்படுத்தக் கட்டளையிடட்டுமா?'' என்று தளபதி பரஞ்சோதி வேடிக்கை கலந்த குரலில் கேட்டார்.

''ஆம், தளபதி! என்னைச் சிறைப்படுத்தியே கொண்டு போங்கள். படையெடுத்து வரும் பகைவர்களுக்குப் பயந்து கோட்டைக்குள் ஒளிந்து கொள்ளும் நாட்டிலே சிறையாளியாயிருப்பதே மேல்'' என்று மாமல்லர் கூறி, மார்பில் அணிந்திருந்த ஆபரணங்களையும், இடுப்பில் செருகியிருந்த உடைவாளையும் கழற்றிக் கீழே எறிந்தார்.

அப்போது பரஞ்சோதியும் தமது உடைவாளையும் தலைப்பாகையை

*** விடை+ வேல் + விடுகு: அதாவது ரிஷபமும் வேலும் அடையாளமிட்ட பல்லவச் சக்கரவர்த்தியின் ஓலை.**

யும் எடுத்துத் தரையில் எறிந்துவிட்டுச் சொன்னார்: "எனக்கும் இந்தத் தளபதி உத்தியோகம் வேண்டியதில்லை. தம்மை நம்பி வந்த படை வீரர்களை நட்டாற்றிலே விட்டு விட்டு, ஒரு நாட்டியக்காரப் பெண்ணின் காதலைத் தேடி ஓடும் குமார சக்கரவர்த்தியின் கீழ்த் தளபதியாயிருப்பதைக் காட்டிலும் 'நமப் பார்வதி பதயே! ஹர ஹர மகாதேவா!" என்று பஜனை செய்துகொண்டு ஊர் ஊராய்ப் போகலாம். இதோ நான் கிளம்புகிறேன். நீங்களும் உங்கள் வீரர்களும் எப்படியாவது போங்கள்!"

மாமல்லர் சற்று நேரம் பூமியையும் சற்று நேரம் வானத்தையும் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "தளபதி! கிளம்புங்கள், போகலாம். நமக்குள் சண்டை போட்டுக்கொண்டிருப்பதற்கு இது தருணமல்ல. காஞ்சிமா நகரை நெருங்கிப் பகைவர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தாமற்போனால் நீங்களும் நானும் கையிலே வாள் பிடித்து என்ன பயன்? என் தந்தையிடம் கோட்டைக் கதவைச் சாத்தக் கூடாதென்றும், காஞ்சிக்கு வெளியே பகைவர்களுடன் போர் நடத்தியே தீர வேண்டும் என்றும் கோரப் போகிறேன். நீர் என்னை ஆமோதிப்பீர் அல்லவா?"

பரஞ்சோதி ஒருகணம் யோசித்துவிட்டு, "ஐயா! மகேந்திர பல்லவர் தங்களைப் பெற்றெடுத்த தந்தை; அவரிடம் உரிமையுடன் சண்டை பிடித்து எதையும் தாங்கள் கேட்கலாம். ஆனால் பல்லவேந்திரர் என்னுடைய தந்தையும், சக்கரவர்த்தியும், சேனாதிபதியும் மட்டும் அல்ல; அவரே என்னுடைய கடவுள். அவருடைய சித்தம் எதுவோ, அதுதான் என்னுடைய விருப்பம். அதற்கு மாறாக என்னால் ஒன்றும் சொல்லவும் முடியாது; செய்யவும் முடியாது. ஆனால், தங்களுடைய தந்தையின் கட்டளை பெற்றுத் தாங்கள் பகைவர்களுடன் போரிடச் செல்லும் பட்சத்தில் தங்களுக்கு ஒரு அடி முன்னாலே நான் இருப்பேன். என் உடம்பில் உயிர் உள்ளவரையில் இந்த வாக்கை மீற மாட்டேன்!" என்றார்.

நண்பர்கள் இருவரும் ஆயத்தமாக நின்ற குதிரைகள் மீதேறிக் 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகரை' நோக்கி விரைந்தார்கள்.

நாற்பத்து ஒன்றாம் அத்தியாயம்

பிழைத்த உயிர்

வராக நதியில் சென்று கொண்டிருந்த படகுகளையே சிவகாமி உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கையில், ஆயனர் பின்னால் மூச்சு வாங்க ஓடி வந்தது யார் என்று திரும்பிப் பார்த்தார். குண்டோதரன் பின்னால் நிற்பதைக் கண்டு, "அப்பனே! இத்தனை நேரம் எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டார்.

"அதை



ஏன் கேட்கிறீர்கள், ஐயா! அக்கரைக்கு நான் போய்த் தளபதியிடம் மாமல்லர் இங்கு பத்திரமாயிருப்பதைத் தெரிவித்துவிட்டுத் திரும்பினேன். தளபதியும் வீரர்களும் படகுகள் சம்பாதித்துக்கொண்டு வருவதற்குள்ளே நான் முன்னால் வந்துவிட வேண்டுமென்று தான் விரைந்து வந்தேன். வந்து பார்த்தால் ஆற்றங்கரையில் நான் கட்டி விட்டுப் போன பானைத் தெப்பத்தைக் காணோம். மாலை நேரத்து மங்கலான வெளிச்சத்தில் யாரோ ஒருவர் தெப்பத்தைச் செலுத்திக்கொண்டு இந்தக் கரையண்டை வந்துகொண்டிருந்தது தெரிந்தது. மொட்டைத் தலையையும் காவித் துணியையும் பார்த்தால், புத்த பிக்ஷு மாதிரி இருந்தது. நம்ம நாகநந்தியடிகள் தானாக்கும் என்று கூப்பிட்டுப் பார்த்தேன். பிக்ஷு திரும்பிப் பார்க்கவே இல்லை. எனக்கு அசாத்திய கோபம் வந்துவிட்டது. உலகத்திலேயுள்ள காவித் துணி அணிந்த புத்த பிக்ஷுக்களையெல்லாம் வாயில் வந்தபடி உரத்த குரலில் திட்டினேன். என்னுடைய குரலைக் கேட்டு விட்டு, நதிக்கரையோடு வந்த



‘‘குண்டோதரா! நல்ல காரியம் செய்தாய்! எங்களை இப்படிக் காக்க வைத்து விட்டுப் போயே போய் விட்டாயே? நீ உயிரோடிருக்கிறாயா, அல்லது யமலோகத்துக்கே போய் விட்டாயா என்றே எங்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது!’’





இரண்டு பேர் என்னிடம் வந்து, 'என்ன அப்பா சமாசாரம்?' என்று விசாரித்தார்கள். நான் விஷயத்தைச் சொன்னேன். நாகநந்தி பிக்ஷுவைத் தேடிக் கொண்டு தான் அவர்களும் வந்தார்கள் என்று தெரிந்தது. அப்புறம் நாங்கள் மூன்று பேருமாக மரக்கட்டைகளையும் கொடிகளையும் கொண்டு தெப்பம் கட்டிக் கொண்டு இக் கரைக்கு வந்து சேர்ந்தோம். உடனே, அவசர அவசரமாக நமது மடத்துக்கு ஓடினேன். அதற்குள் மாமல்லர் புறப்பட்டு விட்டார் என்றும், நீங்களும் வழியனுப்பப் போயிருக்கிறீர்கள் என்றும் தெரிந்தது. மறுபடியும் இவ்விடம் ஓடி வந்து பார்த்தால், அதற்குள் எல்லாரும் படகிலே ஏறிக்கொண்டு விட்டார்கள். பாருங்கள் ஐயா! இராஜ குலத்தினரை மட்டும் நம்பவே கூடாது. மாமல்லர் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே கிளம்பிவிட்டார். பார்த்தீர்களா? ஏதடா, மூன்று நாளாய் உயிருக்குயிரான சிநேகிதனைப் போலப் பழகினோமே என்ற ஞாபகம் கொஞ்சமாவது இருந்ததா?"

இவ்விதம் மூச்சு விடாமல் குண்டோதரன் பேசியதையெல்லாம் ஒரு காதினால் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமி, "ஆமாம் குண்டோதரா! இராஜ குலத்தவரை நம்பவே கூடாதுதான்!" என்றாள்.

ஆயனர், "அதெல்லாம் இருக்கட்டும். குண்டோதரா! நாகநந்தி இந்தக் கிராமத்துக்கு வந்தாரென்றா சொல்லுகிறாய்? நான் பார்க்கவில்லையே?"

"நாகப்பாம்பு அவ்வளவு சுலபமாக வெளியிலே தலைகாட்டி விடுமா? புற்றிலே ஒளிந்துகொண்டிருக்கும்" என்றான் குண்டோதரன்.

"பெரியவர்களைப் பற்றி அப்படியெல்லாம் சொல்லாதே, குண்டோதரா! நாகநந்தி பெரிய மகான். உண்மையில், அவரும் இந்தக் கிராமத்திலேயே தங்கி விட்டால் எனக்கு வெகு சந்தோஷமாயிருக்கும். பாறைக் கோயில்கள் அமைப்பது பற்றி அவர் நல்ல நல்ல யோசனைகள் கூறுவார்" என்றார் ஆயனர். பிறகு, "இன்னும் யாரோ இரண்டு பேர் நாகநந்தியைத் தேடிக் கொண்டு வந்தார்கள் என்றாயே! அவர்கள் யார்?" என்று கேட்டார்.

"குருநாதரே! அந்த மனிதர்கள் கூடச் சிற்பக் கலையிலே ரொம்பப் பிரியம் உள்ளவர்கள் போலிருக்கிறது. நம்முடைய பானைத் தெப்பம் பாறையில் மோதி உடைந்ததே, அதே இடத்தில் தான் நாங்களும் மரக்கட்டைத் தெப்பத்தில் வந்து இறங்கினோம். பாறைகளைப் பார்த்ததும் அந்த மனிதர்களில் ஒருவர் என்ன சொன்னார் தெரியுமா; உங்களைப் போலவே "இந்தப் பாறைகளைக் குடைந்து எவ்வளவு அழகான கோயில்கள் அமைக்கலாம்!" என்றார். எனக்கு அதிசயமாயிருந்தது. "என் குருவும் அப்படித்தான் சொன்னார்!" என்றேன். 'யார் உன் குரு?' என்று அந்த மனிதர் கேட்டார். உங்கள் பெயரைச் சொன்னதும் அவர் மிகவும் ஆச்சரியப் பட்டார். உங்களைக்கூட அவருக்குத் தெரியும் போலிருக்கிறது, குருவே!"

"அப்படி யார், என்னைத் தெரிந்தவர்? பாறைகளைப் பார்த்ததும் கோயில் ஞாபகம் வரக்கூடியவர் நான் அறிந்த வரையில் ஒரே ஒருவர்தான் உண்டு. அவர் இங்கே வருவதற்கு நியாயம் இல்லையே! வேறு யாராயிருக்கும்?" என்றார் ஆயனர்.

"அவர்கள் இந்த ஆற்றங்கரை ஓரத்திலேதான் எங்கேயோ படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். நான் தேடிப் பிடித்து அழைத்துக்கொண்டு வருகிறேன். நீங்கள் முன்னால் போங்கள், குருவே!" என்றான் குண்டோதரன்.

இதற்குள் படகுகள் வராக நதியில் பாதிக்கு மேல் கடந்து சென்றுவிட்டபடியால், மண்டபப்பட்டு வாசிகள் ஒருவருக்கொருவர், "திரும்பிப் போகலாமா?" என்று கேட்டுக் கொண்டு, கிராமத்தை நோக்கிக் கிளம்பத் தொடங்கினார்கள். அவர்களுடன் ஆயனரும் சிவகாமியும் புறப்பட்டுச் சென்றார்கள்.

போகும்போது அந்த கிராமவாசிகள்



அருள்வாக்கு

தியானத்தில் ஒருமுகப்படுவதற்கு பெரிய இடைஞ்சல் என்ன? இந்த மனசு ஓயாமல் ஆடிக்கொண்டிருப்பதுதான். மனத்தினால்தான் எல்லாவிதமான கஷ்டங்களும் உண்டாகின்றன. மனத்தில் ஏற்படும் ஆசையே அத்தனை கஷ்டங்களுக்கும் காரணம். 'ஆசைப்படாதே' என்று இந்த மனசை இழுத்துப் பிடித்து நிற்க வைக்க முடியவில்லை.

நாம் 'ஒரு வஸ்துவை நினை' என்று இந்த மனசிடம் சொன்னால், அது ஏதோ சொற்ப காலம் அதை நினைப்பது போல இருந்து, வேறு எங்கோ பாய்ந்து விடுகிறது. தியானம், சாந்தி என்றெல்லாம் நான் உபந்நியாசத்தில் சொல்கிறபோது ஒரு க்ஷணம் உங்கள் மனம் அடங்கினாற் போல் தோன்றும், ஆனந்தமாய் இருக்கும். ஆனால் அடுத்த க்ஷணமே மனம் எங்கோ ஓடி, சாந்தி குலைந்து போகிறது.



'பேசாமல் இரு' என்று கட்டளை போட்டு வாயை மூடிக்கொண்டு விட்டால் அது ஓரளவாவது பேசாதிருக்கிறது, பார்க்காதே என்று உத்தரவு போட்டுக் கண்ணை மூடிக் கொண்டு விட்டால், கண் ஓரளவாவது பார்க்காமல் இருக்கிறது. ஆனால் இந்த மனத்திடம் மட்டும் 'நினைக்காமல் இரு' என்று எவ்வளவுதான் முட்டிக் கொண்டாலும் அது கேட்பதில்லை. நாம் 'நினை' என்றால் மனம் நினைக்க வேண்டும். 'நினைக்காதே' என்றால் நினைக்காமலிருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு மனஸ் ஸ்வாதீனமாயிற்று, நமக்கு சித்த ஸ்வாதீனம் இருக்கிறது என்று அர்த்தம்.

இப்படி மனசை அடக்குவதுதான் 'யோகம்' என்பது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

மாமல்லரின் அரிய குணங்களைப் பற்றியும், பரஞ்சோதிக்கும் அவருக்கும் உள்ள சிநேகத்தைப் பற்றியும் பாராட்டிப் பேசிக்கொண்டு போனது சிவகாமியின் காதில் விழுந்து கொண்டிருந்தது. மாமல்லரின் பிரிவினால் வறண்டு உலர்ந்து போன அவள் உள்ளத்தில் அந்த வார்த்தைகள் இன்ப மழைத் துளிகளைப் போல் விழுந்தன.

ஆயனர் முதலியவர்களைப் பிரிந்து நதிக் கரையோடு சென்ற குண்டோதரன் நிலா வெளிச்சத்தில் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே சென்றான். பாறைகள் நிறைந்த இடத்தை அணுகியபோது இன்னும் சர்வஜாக்கிரதையாக முன்னும் பின்னும் பார்த்துக்கொண்டு சென்றான். சட்டென்று பாறை மறைவிலிருந்து இருவர் வெளிப்பட்டதும் ஒருகணம் திகைத்துவிட்டு, அவர்கள் இன்னார் என்று தெரிந்துகொண்டதும், எதிரில் வணக்கத்துடன் நின்றான்.

"குண்டோதரா! நல்ல காரியம் செய்தாய்! எங்களை இப்படிக் காக்க வைத்து விட்டுப் போயே போய் விட்டாயே? நீ உயிரோடிருக்கிறாயா, அல்லது யமலோகத்துக்கே போய் விட்டாயா என்றே எங்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது!" என்றார் ஒற்றர் தலைவர் சத்ருக்னன்.

"எஜமானனே! உங்கள் புண்ணியத்தினால் உயிர் பிழைத்தேன். கொஞ்சம் அஜாக்கிரதையாயிருந்திருந்தால் நிஜமாகவே யமலோகத்துக்குப் போயிருப்பேன். இந்தக் கூரிய கத்தி என் நெஞ்சிலே பதிந்திருக்கும்!" என்று குண்டோதரன் கூறி, நாக வடிவமாகப் பிடி அமைத்திருந்த ஒரு அபூர்வமான சிறு கத்தியை எடுத்து நீட்டினான்.

(தொடரும்)

THE
MAYAVARAM FINANCIAL
CHIT CORPORATION LTD.

REGD. & ADMINISTRATIVE OFFICE
13-A1, CUTCHERY ROAD
MAYILADUTURAI – 609 001. TAMIL NADU.

HIGHER DENOMINATION
AUCTION CHIT PROMOTERS
SINCE 1947

NOT A DEPOSIT RECEIVING COMPANY

MEMBERS OF BOARD

Mayiladuturai
19.06.2002

K. Jeyachundhren
Managing Director



தேன்கூடு

என்னுடைய மாமனார் ஜி.ரங்கநாதன் (வயது 85), 1940ஆம் வருடம் அவரது 23ஆவது வயதில், பிரகதி ஸ்டுடியோவில் (பின்பு ஏவி.எம். ஸ்டுடியோ ஆனது) வேலைக்குச் சேர்ந்தார். இன்றும் அவர் வேலைக்குச் சென்றுகொண்டிருக்கிறார். தொடர்ச்சியாக 62 வருடங்களாக ஒரே நிறுவனத்திற்காக வேலை செய்து வருகிறார். டைப்பிஸ்ட் பதவியிலிருந்து படிப்படியாக உயர்ந்து, ஜெனரல் மானேஜர் பதவியை நிர்வகித்து, ஏ.வி.மெய்யப்பச் செட்டியாரின் வலது கரமாக செயலாற்றி, தற்பொழுது ஏவி.எம். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தின் செயலாளராகப் பணி புரிகிறார். ஏவி.எம். வளாகத்தில் இவர் 'ஜி.ஆர்.' என்று அழைக்கப்படுபவர். இவரது மூத்த மாப்பிள்ளை, 60 வயதில், பல உயர்ந்த பதவிகளை வகித்த பிறகு 'டெல்கோ',விலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறார்.

- வத்ஸலா நாராயணன்

'கிண்டர் கார்டன்' என்ற ஜெர்மன் மொழிச் சொல்லுக்கு 'குழந்தைகளின் தோட்டம்' என்று அர்த்தம். முதன் முதலில் கிண்டர் கார்டன் ஜெர்மனியில் 160 வருடங்களுக்கு முன்னர், ஆரம்பிக்கப்பட்டது.

- ராதிகா அழகப்பன்,
விக்கிரமசிங்கபுரம்

'மோர்' என்றால் மயில், 'சிஞ்சோலி' என்றால் புளி. புனே அருகில் 52 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் கிராமம் 'மோராச்சி சிஞ்சோலி'.



இங்கே தெருவில் சர்வசாதாரணமாக நடமாடும் ஆயிரக்கணக்கான மயில்களைப் பார்க்கலாம். இந்த கிராமத்துக் கடவுள் 'கண்டோபா'வின் வாகனம் என்பதால் மயில்கள் விசேஷ கவனத்துடன் பாதுகாக்கப்படுகின்றன. இங்கிருந்து மயில் இறகுகூட வெளியே எடுத்துச் செல்ல அனுமதிப்பதில்லை. ஆண்டுதோறும் கிராமவாசிகளுக்கு இணையாக மயில்களின் எண்ணிக்கையும் வளர்ந்துகொண்டே போகிறதாம்.

- லக்ஷ்மி ஸ்ரீனிவாசன், சென்னை - 89.

தும்கூர் பெப்ஸி!

பெங்களூரில் இரவு நேரங்களில் 'தும்கூர் பெப்ஸி' என கூவி விற்கிறார்கள். அதென்னடா புதுசா என்று பார்த்தால் பெரிய சைஸ் இளநீர்!

- ஆர். லலிதா, சென்னை

நெப்போலியனின் படைத் தலைவர் ஒரு யுத்த அறிக்கையைத் தயார் செய்து கொண்டு



• பூனை மியூசியம்



படம்: ஸ்ரீஹரி

வந்தார்.

'நெப்போலியன் மிகவும் சிறிய படையுடன் எதிரியின் பிரம்மாண்டமான படையை யுத்தத்தில் முறியடித்தார்' என்று அதில் எழுதியிருந்தது.

நெப்போலியன் சொன்னார் : "என்னுடைய இராணுவ சாமர்த்தியம் நமக்குள் இருக்க வேண்டும். நம்மிடம் சிறிய படைகள்தாம் இருக்கின்றன என்பதை எதிரிகள் தெரிந்து கொள்ளக் கூடாது. ஆகையால் பின்வருமாறு அறிக்கையை எழுது. "நெப்போலியன் எதிரியைக் காட்டிலும் பன்மடங்கு பலமுள்ள படையுடன் சென்று எதிரியை முறியடித்தார்!"

- அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

அதிகமாகப் புகைப்படம் எடுக்கப்படும் உலக அதிசயம் தாஜ்மகால்.

தபால் தலையில் தனது பெயரைப் போட்டுக் கொள்ளாத நாடு இங்கிலாந்து. - விருதை ராஜா

மலேசியாவின் சாராவாக் பகுதியின் தலைநகரமான குசிங்கில், பூனைக்கென்று ஓர் அருங்காட்சியகம் உள்ளது. உலகின் ஒரே பூனை அருங்காட்சியகம் இதுதான். இதனால் இந்த நகரையே பூனை நகரம் என அழைக்கின்றனர்.

- ராஜிராதா, திருச்சி

ஸ்ரீரங்கத்தில் அரங்கன் வீதி உலா வரும் வீதியில் எவராவது இறக்க நேரிட்டால் பெருமாளுடைய வீதி உலா நின்றுவிடும். வடக்கு வீதியில் 'மட்டை' என்றால் ஒருவர் இறந்துவிட்டார் என்று பொருள். இறைவன் திருவுலா வரும்போது "இறந்துவிட்டார்" என்று சொல்வது அச்சானியம் என்பதால் 'மட்டை' என்று சொல்கிறார்கள்.

- என்.பங்கஜம், மும்பை

டார்லிங் உபன்யாசம்!

ஆடி அடங்கிவிட்டார்கள். ஹப்பா... பத்து வோட்டு வித்தியாசத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்றதையே பெரிய சாதனையாக நினைத்திருக்கிறது ஜனநாயக முன்னணி! அன்று விதான் சபாவில் குவிந்திருந்த காவல் படையைக் கண்டு மிரண்டு விட்டனர் பத்திரிகையாளர்கள். ஆனால் உள்ளே இருபதே நிமிடத்தில் காரியம் முடிந்துவிட்டது. ஒரு மைக் உடைப்பு, ஒரு ஜிப்பா கிழியல், ஒரு நாற்காலி எரியல் இல்லாமல் சவசவத்து விட்டது. ஆனால் பத்திரிகையாளர்கள், போலீஸ்... இவர்களை ஏமாற்றுவது மஹாபாவம் என்ற நல்லெண்ணத்தில் என்.சி.பி.காரர்களும் சிவசேனைத் தொண்டர்களும் வெளியே மோதிக் கொண்டார்கள். கட்சி மாறிய ஏழு எம்.எல்.ஏ.க்களை 'டிஸ்குவாலிஃபை' செய்த ஸ்பீக்கர் குஜராத்தியின் துரோகத்தால்தான் ஜனநாயக முன்னணி பிழைத்தது என்று, நடைபிணமாகிவிட்ட சிவசேனைக்காரர்கள் குமைய, 'இருந்தாலும் மூன்று ஓட்டுகளிலாவது வென்றிருப்போமே' என்று அல்பத்தனமாக, கார் உடைத்து, வசைமாரி பொழிய, 'காரைத்தான் உடைக்கலாம், பதவியிலிருந்து அசைக்க முடியாது' என்று அவர்கள் கூக்குரலிட, ஒரு மூன்று மணி நேரத்துக்கு ஒரே அல்லோல கல்லோலம்! இத்தனை அமளியிலும், 'வடக்கே எண்ணெய் மழை' என்கிற அலட்சியத்தில் தான் பாட்டுக்கு இயங்கிக் கொண்டிருந்ததே மும்பை பப்ளிக்... அவர்களுக்கல்லவோ சூட்ட வேண்டும் கிரீடத்தை?

கிரீடத்தை எப்படியாவது தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கவலையில் பெங்களூருக்குக் கடத்தப்பட்டார்களே ஜனநாயக முன்னணியினர்... அவர்கள் உல்லாசப் பயணிகளாக மட்டுமில்லாது, விசுவாசப் பயணிகளாகவும் இருந்திருப்பது ஆச்சர்யம். பெனடிக்ட் பால்ராஜ் என்ற ஒரு வயதுக் குழந்தையின் பெற்றோரை, அதன் தாய் மாமன்களும் தாத்தாவுமே கொன்று அனாதையாக்கிய கொடூரத்தை தினசரிகளில் படித்துவிட்டு, தலா ரூ.500 வீதம், உடனடியாக ரூ.31,000/- திரட்டி, அந்தக் குழந்தைக்காக கர்நாடக அரசிடம் சேர்ப்பித்திருக்கிறார்கள்.



• தோல்வியின் வெறியாட்டம்

மராத்திய அரசிடமிருந்து இன்னொரு ரூ.20,000 வாங்கி, ரூ.51,000 ஆக சேமிப்பு நிதியைக் கூட்ட திட்டமிட்டிருக்கிறார்கள். என்ன...? கடைத் தேங்காயை வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதைதானே என்கிறீர்களா? கடைத் தேங்காயை அனாயாசமாகத் தூக்கிப் பையில் போட்டுக் கொண்டு போகும் அரசியல்வாதிகள் மத்தியில், அதை வழிப் பிள்ளையாருக்காவது உடைத்தவர்கள் உத்தமர்கள்தானே?

'உத்தம எம்.எல்.ஏ.' பட்டத்துக்குப் பொருத்தமானவர், நாந்தர்பார் காங்கிரஸ் எம்.எல்.ஏ.வான பதம்கர் வால்வி. ஹாஸ்டலுக்குப் போய்க் கொண்டிருந்தவரை வழிமறித்து, நைசாக மாதோஸ்ரீ ஹெல்த் கிளப்புக்குக் கடத்திவிட்டாராம்

* உபன்யாசத் தம்பி





* தாயிடம் திரும்பிய சேய்

ஒரு பி.ஜே.பி.காரர். வற்புறுத்தி, ஜனநாயக முன்னணியிலிருந்து விலகுவதாகக் கையெழுத்திடச் சொன்னார்களாம். இவர் 'அல்வா' கொடுக்க நினைத்து, ஆட்டோவில் 'எஸ்கேப்'பான போது, துரத்திப் பிடித்து விட்டார்களாம். போலீஸ் ரெய்டின் போதும், நான் இங்கே சந்தோஷமாக இருக்கிறேன்'' என்று சொல்லும்படி நிர்பந்திக்கப்பட்டாராம். கடைசியில், விதான் சபா வந்த அன்று தான், "பாத்ரூம் போகிறேன்" என்று நழுவி, ஸ்பீக்கர் குஜராத்தியிடம் தஞ்சம் புகுந்து ஒரு வழியாக ஜனநாயக முன்னணியில் மீண்டும் சேர்ந்து விட்டாராம்! இவர் 'ட்ரைபல்' என்பதால், கடத்தப்பட்டது நிரு



* பால்ராஜ்



* வெற்றிக் களியாட்டம்

பிக்கப்பட்டால், எதிராளி கம்பி எண்ண வேண்டிவரும். கொதிக்கும் தாக்கரே சொல்வது இதுதான் - "க்ளப்பில் நன்றாகக் கூத்தடித்துவிட்டு, சிரித்து ஃபோட்டோவெல்லாம் எடுத்துவிட்டு, இப்படிப் புளுகுகிறானே பாவி! இவனை யார் நம்புவார்கள்?"

யார் நம்புவார்கள்? 'தமல் டார்லிங்' என்ற பட்டப் பெயர் வைத்திருப்பது ஓர் உபன்யாசகர் என்றால் யார் நம்புவார்கள்? ஆனால், அண்மையில், முலுண்டு குருவாயூரப்பன் கோயிலில், 'வேதரட்சண நிதி ட்ரஸ்ட்'காரர்கள் நடத்திய புத்தக வெளியீட்டு விழாவில் வாமன அவதாரத்தைச் சுவைபடச் சொன்ன உபன்யாசகர் ராமகிருஷ்ணன், கூட்டத்தின் 'டார்லிங்' ஆகிவிட்டார். ''உங்கள் கிரகத்திலிருந்து வந்திருக்கிறீர்கள். இங்கே கர்பக்கிரஹத்தில் அமர்ந்திருக்கிறான் இறைவன். திரும்பும் போது அவன் அனுக்கிரஹத்தை எடுத்துச் செல்லுங்கள்'' என்று முத்தாய்ப்பு வைத்ததும், பக்திப் பழமாகப் பக்கத்தில் அமர்ந்திருந்த பந்தமடை வாத்தியாரே, மெய் சிலிர்த்து விட்டார். இந்த ராமகிருஷ்ணனை எங்கோ பார்த்தார் போலிருக்கிறதே... அட, நம்ம டி.வி. நியூஸ் வரதராஜனின் தம்பியாமே? ரொம்ப 'ட்ரமாடிக்'காக இல்லை?

இல்லை.... நிச்சயமாக இல்லைதான். மறைந்த பெரிய மனிதர்களின் நினைவாக, அன்னதானம், வஸ்த்ரதானம், வித்யா தானம், ஔஷததானம்... இப்படி எவ்வளவோ கேட்டிருக்கிறோம். ஆனால் கலாதானம்? கேட்டதில்லைதானே? 16 டிகிரிகள் வாங்கிய மாமேதையும் (அட படிச்சதாங்க..), தமது குருவுமான பொம்ம காந்தி கிருஷ்ணமூர்த்தியின் நினைவு நாளில், ஒரு கலா நிகழ்ச்சியை முழுதுமாக ஸ்பான்சர் செய்து, நூதன முறையில் அஞ்சலி செலுத்தியிருக்கிறார் பாண்டூப் ஃபைன் ஆர்ட்ஸ் சபாவின் செயலரான சேஷாத்ரி. இவர் ஏற்பாடு செய்திருந்த சிரி கதா காலட்சேப நிகழ்ச்சியால் கலைஞர்கள், ரசிகர்கள் எல்லோர் மனத்தையும் நிரப்பி, ஹாலையும் நிரப்பிவிட்டாரே?

— ஜெயஸ்ரீ ராஜ்

பாமா வரலாமா?

இப்போது கல்யாணக் களை கட்டி நிற்கும் வீட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் சந்தோஷத்தின் அலைகள் முழு வீச்சில் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

அப்படி இயங்குவதுதானே இயல்பு?

ஆனால், உண்மை அப்படி இல்லை.

தேக்கம் தேக்கமாய் மனோ பாவங்களில் உளைச்சல்.

கல்யாணப் பெண்ணான கௌரியின் மனத்தில்கூட.

"என்னங்க...!"

இது போன்று ஒரு நூறு முறையாவது மீனா கணவனை அழைத்திருப்பாள், இந்த இரண்டு மூன்று நாட்களாக.

அவள் சொல்ல வருகிற செய்தி அந்த நூறு முறையிலும் 'அந்த ஒன்றேதான்' என்பதை சுந்தரேசனும் உணர்ந்தே அவளை ஏறிட்டுப் பார்த்திருக்கிறார் ஒவ்வொரு அழைப்பின் போதும்.

சுந்தரேசனின் பார்வையில் தெரியும் காத்திரத்தால் மீனாவின் நாவும் மேலே எழாமல் அடங்கிக்கொண்டு விடுகிறது.

அப்புறம் சொல்வதற்கு ஏதுமில்லை என்பது போல் நகரத்தான் வேண்டியதாயிருக்கிறது மீனாவுக்கு. எனினும் கணவனிடம் கூறிவிட வேண்டும் என்று அத்தனைப் பரபரப்பான வேலைகளின் ஊடேயும் மனம் கிடந்து தவிக்கிறது.

சொல்வதற்கான வேளையும், தைரியமும் தான் ஒன்றுகூட மறுக்கிறது.

ஏழு வருடங்கள் ஓடிவிட்டன.

பாமாவின் கையில் ஒரு குழந்தைகூட இருக்கிறதாம்.

பிறர் சொல்லித்தான் தெரியும்.

எல்லாவித வசதிகளும் கொண்ட வீடுதான் இது.

ஆனால், சீர்செனத்தி என்று ஒரு துரும்பு கூட இதுவரை பாமாவுக்குப் போனதில்லை.

'ஓடிப்போனவள்' சீர், செனத்தியை எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டா ஓடிப் போயிருப்பாள். இத்தனைக்கும் மூத்தவளை விடவும் நான்கு வயது சின்னவள்தான். கல்லூரியில் படிப்பதை விடவும் காதல் பாடம் படிப்பதில் முன்னணியில் நின்றிருக்கிறாள்.

மீனாவுக்குச் செய்தி தெரிய வந்தபோது, பாமா முற்றிலுமாக மாற்றப்பட்டிருந்தாள். எவனோ உடன் படித்தவனாம். வலை விரித்ததில் மாட்டிக் கொண்டு விட்டாள்.

பதறிப் போன மீனா, மகளிடம் இதமும் பதமுமாக எவ்வளவோ கூறிப் பார்த்தாள்.

காதல் மயக்கத்தில் மற்ற அனைவரையுமே புழுவாக்கித்தான் பார்க்கத் தோன்றியது பாமாவுக்கு.

பெற்றவர் புத்திமதி கூறியபோது, கடுமையாய் இறுகிப் போயிருந்தாள்.

சரி, மெள்ள மாற்றிவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறபோதே, ஒருநாள் அதிகாலை வேளையில் அவனுடன் ஓடியே போய் விட்டிருந்தாள்.

அன்று குனிந்து போன தலைதான், அப்புறம் நிமிரவே இல்லை.

மனக்காயம் சுலபமாய் ஆறிவிடவில்லை.

ஆண்டுகள் சுசப்பாய் நகர்ந்தன.

புறம் பேசும் கூட்டத்தால் புண்பட்டு நொந்து சிதைந்து போனார்கள்.

ஆறுதல் கூறுகிறேன் என்று கூறிக்கொண்டு வந்தவர்கள் எல்லாம், மனத்தின் வேதனையைத் தான் அதிகப்படுத்தி விட்டுப் போனார்கள்.

காலம் ஓர் இயற்கை மருத்துவன் ஆயிற்று!

ஏழாண்டுகளில் ஓரளவு இழப்பை மறக்க





உமா கல்யாணி

முடிந்தது.

ஓடிப் போன சின்னவளால், பெரியவளைப் பெண் கேட்டு வரவே தயங்கினார்கள்.

கடைசியில் புரோக்கர் மூலமாய் ஓர் இடம் வந்தது.

பேசி முடித்தார்கள்.

உண்மையை மறைக்காமல் பேசியதில், பெரிய பெண்ணுக்கு நிறையவே ஈடு கொடுக்கும்படி நேர்ந்திருந்தது.

தவறாக நடப்பவர்களுக்கு, எப்போதுமே தண்டனையும் தவறாமல் உண்டு அல்லவா!

ஆனால் இந்த 'ஓடிப் போதல்' கொடுமையில் தண்டனையைப் பலரும் அனுபவிக்கும்படியாய்த்தான் ஆகும்.

பாமா மட்டுமா, அவளைக் கூட்டிக் கொண்டு ஓடியவன், அவனைப் பெற்றவர்கள், அவனுக்கு வேண்டியவர்கள், அவளைப் பெற்றவர்கள், அவளுக்கு வேண்டியவர்கள் என்று நிறைய பேருக்குத் துன்பம்தான்.

மீதிப் பேருக்கு எள்ளலும் இளக்காரச் சீண்டல்களும்தான் தீனி ஆகின.

ஆரம்பக் கட்டத்தில் பட்டு வந்த துன்பங்கள், நாட்களின் ஓட்டத்தில் கொஞ்சம் மறைவது போல் பாவனை காட்டின.

பாவனைதாம்!

உண்மையில் இல்லை.

உள்ளேயிருந்து கொண்டு இம்சை பண்ணத்தான் பண்ணின.

எவரோ எதற்கோ சிரித்துக்கொண்டு போனாலும்கூட, அது தங்களைப் பற்றியும், ஓடிப் போன பாமாவைப் பற்றியும்தான் என்கிற மாதிரிதான் எண்ண வேண்டியதாய்ப் போயிற்று.

எப்படியோ தள்ளித் தள்ளிப் போய்க் கொண்டே வந்த கல்யாணம் கூடி வந்திருக்கிறது. நல்லபடியாக நடந்து முடிய வேண்டும் என்று தவம் இருப்பதுபோல் வேண்டிக் கொண்டார்கள்.

பாமா குறித்த பேச்சே இல்லை.



"டாக்டர்! என் இரண்டு கைகளும் எப்பவுமே நடுங்கிக் கிட்டே இருக்குது. என்ன செய் யறது?"

"அடிக்கடி உண்டியல் குலுக்கறத நிறுத்துங்க, சரியாயிடும்!"

- மதுரை. என். உஷாதேவி,

இப்போதுதான் பெற்றவள் துவக்கியிருக்கிறாள். பெற்ற மனம் பித்து அல்லவா! பிள்ளைகள் எவ்வளவு தவறுகள் செய்தாலும், பெற்ற மனங்களில் தளும்பி நிற்கின்ற வாஞ்சை, அவற்றைப் புறம் தள்ளி விட்டு, பெற்ற குழந்தைகளின் நலனை மட்டும்தான் நினைக்கும்.

அதிலும் இப்போது சுற்றமும் உறவும் வேறு வந்து வந்து நின்ற பாமா குறித்த நினைவுகளைக் கிளறியபடியே இருக்கின்றன.

"மீனா, நீ பெத்ததே இரண்டுதான். அதுல ஒண்ணு தப்புச் செஞ்சிருச்சுன்னு ஒதுக்கி வைச்சிட்டு, இன்னொண்ணுக்கு நல்ல காரியம் பண்ணினால் நல்லாவா இருக்கும்? என்னவோ, சின்ன வயசிலே தப்புப் பண்ணிட்டா. மன்னிச்சு விட்ருங்க. அவளையும் மதிச்சு, கல்யாணத்துக்கு அழைச்சு சபையிலே மதிப்புக் குடுங்க. அவளும் ஆளோட வந்து நின்னு பேர் சொல்லட்டும்..." என்று பெரியம்மாதான், தங்கை மகள் மீனாவிடம் முதலில் ஆலோசனை கூறினாள்.

இதே பெரியம்மாதான் பாமா ஓடிப் போனபோது, குடியே முழுகி விட்டது போல் ஊரையே கூட்டி வைத்து ஒப்பாரி வைத்தவள்.

இப்போது கூப்பிடச் சொல்லி வற்புறுத்துகிறாள். பெரியம்மா மட்டுமில்லை, நிறைய பேர் வந்து மீனாவிடம் வற்புறுத்திக் கூறுகிறார்கள்.

ஏற்கெனவே சபலத்தில் ஆடிக் கொண்டிருந்த மனம், இப்போது இவர்களின் சிபாரிசுகளால் மேலும் வலுவாக எண்ணமிடத் துவங்கிவிட்டது.

அதனால்தான், "என்னங்க...என்னங்க..." என்று கணவனைச் சுற்றுகிறாள்.

அவரும் புரிந்துகொண்டு நழுவி நழுவி ஓடி விடுகிறார். இல்லையெனில் அனல் மிகுந்த பார்வையை வீசி வீசி நெருங்க விடாமல் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

இனிமேல் முடியாது என்கிற முடிவுக்கு வந்துவிட்ட மீனா, மனத்தைத் தேற்றிக்கொண்டு இயங்கத் துவங்கிவிட்டாள்.

கௌரியின் கல்யாணம், பாமா அழைக்கப்படாமலேயே நடந்து முடிந்தது.

இப்போது கௌரியும் மணமகன் வீடு போன பின், வீடே 'வெறிச்'சோடிப் போயிருந்தது.

எதிரும் புதிருமாய் மீனாவும் சுந்தரேசனும் தான்.

"ஆனாலும் உங்களுக்கு இரும்பு மனசு தாங்க. என்னவோ அறியாத வயசுலே தப்புப் பண்ணிட்டாள்ன்னா, அப்படியே விட்டுடறதா? மன்னிச்சு ஏற்றுக்கொண்டு விட்டால் ஆகாதா? இப்படிப் பண்ணிட்டீங்களே!" என்று புலம்பினாள் மீனா.

அவரோ இதமாகச் சிரித்துவிட்டு, "மீனா பெற்றவள் மனசு எப்பவும் கரும்புதான்; இரும்பு இல்லே. எனக்கு அவ மேலே வெறுப்பில்லே" என்று கூறினார்.

"பின்னே?" என்று வியப்புடன் கேட்டாள் மீனா.

"உன் பெரியம்மாவோட ஆலோசனைப் படி நான் மட்டும் பாமாவைக் கல்யாணத்தப்ப இங்கே வரவழைச்சிருந்தேன்னா, "அதோ அவ தான் ஓடிப் போன பாமா. பொண்ணுன்னா அடக்கம் வேணும். வளர்ப்பு சரியில்லே, ஓடிப் போயிட்டா. இப்ப மினுக்கிக்கிட்டு அலையறா, வெட்கம் கெட்டுப் போயி"ன்னு நாக் கூசாமல், கல்யாணத்துக்கு வந்திருந்த ஒவ்வொருத்தர்ட்டயும் போயி கேவலப் படுத்துவா. அவ மட்டுமா, மத்தவங்களும் அவளைத் தீண்டத்தகாதவளைப் பார்க்கிறது போலப் பார்ப்பாங்க. வெளியே காட்டிக்காம, இரகசியமாய்க் கிண்டல் பண்ணுவாங்க. கௌரி கல்யாணத்தை விடவும், பாமா திரும்பி வந்து சேர்ந்துட்டாங்கிற விஷயம் தான் பெரிசாகிப் போய்டும் இங்கே. இப்போ கௌரியோட கல்யாணம் முடிஞ்சு போச்சே! இனிமேல் பிரச்னை இல்லை. நீ உன் சின்ன மகளை அழைச்சுட்டு வந்து கொஞ்சலாம், போதுமா?" என்று கேட்டார் சுந்தரேசன்.

குபு குபுவென்று பவளமல்லி மலர்களைச் சொரிந்து குளிர்ச்சியாக்கி விட்டது போல் பூரித்துப் போனாள் மீனா.



அன்னமே பிரம்மா! அன்னமே விஷ்ணு! அன்னமே சிவன்!

புண்ணியக்ஷேத்ரம் இராமேஸ்வரத்தில் மாதந்தோறும் அமாவாஸை திதியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!

அன்புடையீர், அனேக நமஸ்காரம். தலம், தீர்த்தம், மூர்த்தி இவற்றால் சிறப்புக்குரிய பல க்ஷேத்ரங்களில் இராமேஸ்வரம் பெருமைமிக்க புண்ணிய ஸ்தலமாகும். ராமஸேது என்றும், ஸேது ஸ்தலம் என்றும் போற்றப்படும் இராமேஸ்வரம் புகழ்மிக்க புண்ணிய க்ஷேத்ரமாகும். இராமேஸ்வரத்தில் அன்னதானம் செய்வதும் ஜபம், ஹோமம், தானம் செய்வதும் அழியாத புண்ணியப் பலன் கிடைக்கும்.

இராமேஸ்வரத்தில் அமாவாஸை தினத்தில் அன்னதானம் செய்தால் மனித குலம் மாபெரும் புண்ணியத்தை பெறும். புத்திரப்பேறு உண்டாகும். நாகதோஷம் முதலியன நீங்கும். அனைவரும் நலம் பெறுவர். இராமேஸ்வரத்தில் அமாவாஸை அன்று அன்னமளிப்பவன் ப்ராணனளிப்பவன் ஆகிறான். அன்னமளிப்பது அமிர்தமளிப்பதற்கு சமம். இந்த புண்ணிய பூமியில் அன்னமளிப்பவன் மிக்க செல்வந்தராய் பிறப்பான். வறுமை நீங்கி, பெரும் பணக்காரனாவான். அன்னதானம் செய்பவனுக்கு போகமும், ஆயுளும், அழகும் பெருகும். பலம், புகழ், கீர்த்தி இவை உண்டாகும்.

★ தடைபட்ட திருமணம், புத்திர பாக்யம் இவை உண்டாகும் ★ வறுமை அகல ★ கொடிய நோய்கள் நீங்க ★ தொழில் மந்தம் நீங்கி முன்னேற்றம் காண ★ பிரிந்தவர்கள் ஒன்றுசேர ★ நீண்ட ஆயுள், கடன் தொல்லையிலிருந்து விடுதலை ★ மனநிம்மதி பெற ★ பெற்றோர், மூதாதையர் நினைவு நாளில் ★ ஆக நீங்கள் நினைத்த காரியம் நிறைவேற நாங்கள் உங்கள் சார்பாக அன்னதானமளித்து, பிரஸாதம் அனுப்பி வைக்கிறோம்.

★ சிறியதொகை மற்றும் அரிசி போன்ற உணவு பொருட்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு கோபுர தரிசனம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
★ ரூ.10,000 அனுப்பும் அன்பர்களுக்கு ஆயுள்காலம் முழுவதும் கோபுர தரிசனம் மாத இதழ் அனுப்பி வைக்கப்படும்.

ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு கந்தபுராணம் அல்லது பகவத்கீதை புத்தகம் அனுப்பி வைக்கப்படும். ரூ. 5,000 மற்றும் ரூ. 10,000 அளிக்கும் அன்பர்களுக்கு கவி-ந்யாய-மீமாம்ஸ சிரோமணி ஸ்ரீமான் திருவெண்காடு டி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரிகளால் தயாரிக்கப்பட்டு பூஜையில் வைத்த யந்திரம் அன்பர்களின் விருப்பத்திற்கேற்ப எந்த யந்திரம் தேவையோ அந்த யந்திரம் இலவசமாக வழங்கப்படும். மேலும் பகவத்கீதை புத்தகம் அல்லது கந்தபுராணம் புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். ரூ. 10,000 அனுப்பும் அன்பர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மாதந்தோறும் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு அணில் செய்த ஸேவை போல் இந்த லோகக்ஷேமத்திற்கு நம்மால் இயன்றளவில் உபகாரம் செய்திடுவோம். நேரில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் **GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST, CHENNAI-41** என்ற பெயரில் CHEQUE/D.D./M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். என்றென்றும் புனித ஸேவையில் மனப்பூர்வமாக செயலாற்றும் எமது பணிக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை என்றென்றும் நாடுகிறோம்.

CHEQUE/D.D./M.O. அனுப்ப வேண்டிய முகவரி :

கோபுர தரிசனம் அன்னதான அறக்கட்டளை

GOPURA DHARISANAM ANNADHANA CHARITABLE TRUST

M-11/F-4, TNHB FLATS, I MAIN ROAD, THIRUVALLUVAR NAGAR,
THIRUVANMIYUR, CHENNAI - 600 041. SOUTH INDIA
☎: 4900303, 4900603 Fax: (044) 4916316 E-mail: gopuradarisanam@yahoo.com

★ நீங்கள் தேடும் மனநிம்மதி அன்னதானத்தில் கிடைக்கிறது ★ ஸர்வேஜனா: - ஸுகினோபவந்து

19.5.02 'கல்கி'யில் வெளியான 'கழிவிரக்கம்' கவிதைக்குப் பதிலாக ஊக்கக் கவிதைகள் வந்து குவிந்தன. எல்லாமே அருமையான கவிதைகளாக இருந்ததில், தேர்வாளர்கள் திணறிப் போனார்கள். ஒன்றுக்கு மூன்றாக முத்தான கவிதைகளைத் தேர்ந்தெடுத்துப் பிரசுரித்திருக்கிறோம். பங்கு பெற்ற அனைவருக்கும் நன்றி!

முடியும் என்னும் மந்திரம்!

(முதல் பரிசு ரூ. 150/- பெறும் கவிதை)

● உலகம் எதிராய் உருளும் பொழுதும்
உன்னை நம்பிடு திடமாக!
மலையைப் புரட்டி இழுக்கவும் முடியும்
மனதை முறுக்கு வடமாக!

● முடியா தென்னும் வார்த்தை உனது
அகரா தியிலே வரவேண்டாம்
'முடியும்' என்றொரு மந்திரம் எழுது
முன்னேறுவதில் பயம் வேண்டாம்!

● எல்லாம் விதிதான் என்று நினைத்தே
இருளில் கிடந்தது பழைய கதை
கல்லைத் துளைத்து முளைக்கும்
விதைபோல்
நெஞ்சினில் வேண்டும் எண்ண
விதை!

● முடியா தென்று பலபேர் சொன்னதை
முடித்தால் சாதனை உருவாகும்
'விடியல் இல்லை' எனப்புலம்பாமல்
விளக்கை ஏற்றுதல் நலமாகும்.

● உலகை ஆண்ட மன்னர்கள் எல்லாம்
உற்சாகத்தின் மறுபிறப்பு!
உலகம் போற்ற வாழ்ந்தவர்க் கெல்லாம்
உழைப்பு தானே தனிச்சிறப்பு!

● வாழ்க்கை என்னும் நதியில் என்றும்
மகிழ்ச்சி வெள்ளம் ஓடவிடு!
வாழ்க்கை என்பது வரலாறாக
வருத்தமின்றிப் பாடுபடு!

— குவளை. ம. பாலசுப்பிரமணியன்

நிமிர்ந்து நிற்கிறது மானுடம்!

(இரண்டாம் பரிசு ரூ. 100/- பெறும் கவிதை)

❖ *பென்சில் தயாரிக்கும்*
நிறுவனமே அழிப்பானையும்
தயாரிக்கிறது
பிழைகளை யாராலும்
தவிர்க்க முடியாது
என்ற அசாத்திய நம்பிக்கையில்.

❖ *தவறு புரிவது*
தவறில்லை நண்பனே!
தவறு எனப்புரிந்தும் அதை
தொடர்வதுதான் தவறு!


❖ *மனக்குழப்பங்களின்*
மறு கோணத்தைப் பார்! அப்போதுதான்
அவை ஆழ்ந்த அலசலின்
சாயலிலிருப்பது தெரியும்!

❖ *நீ நினைப்பது நடப்பதில்லை*
என்பதற்காக வருந்தாதே
நடைமுறையின்
எதார்த்தத்திற்கு ஏற்றவாறு
நினைக்குமளவுக்கு நீ இன்னும்
பக்குவப்படவில்லை என
ஒப்புக்கொள்!

❖ *முடிந்ததை நினைத்து*
கலங்குவதால்
இருப்பதை இழக்கும்
அபாயமுண்டு. எச்சரிக்கை!

❖ *நீ கண்காணிக்கும் ஒவ்வொன்றும்*
சரியாய் நடந்து விடவேண்டுமென
எதிர்பார்க்காதே
நிகழ்வு பொம்மைகளின்
கயிறுகள்
விதியின் விரல் வசமே உண்டு!





❖ *சம்பவங்கள் சப்பைக்கட்டுக்*
கட்டுவதற்காகச்
சம்பவிப்பதில்லை
நீ தான் உன் தவறுகளை
அவற்றோடு கட்டிவிட்டுத்
தப்பிப் போகப் பார்க்கிறாய்!

❖ *பிரச்னைகள் நாயைப் போன்றது*
ஓடினால் விரட்டும்
தைரியமாகத் திரும்பிப்பார்
வாலைச் சுருட்டிக் கொள்ளும்!

❖ *பள்ளங்களும் குழிகளும்*
பாதைகளில் சகஜமே
அவற்றில் விழுந்து விழுந்து
எழுந்துதான்
விண்ணை முட்டிக் கொண்டு
நிமிர்ந்து நிற்கிறது கம்பீரமாய்
மானுடம்!

❖ *பள்ளங்களின்*
உள்நோக்கம்
உன்னை விழ வைப்பதல்ல
எழ வைக்கும் சூட்சுமத்தை
கற்பிப்பதே!

— வீ. விஷ்ணுகுமார்

மானுடம் வெல்லும்

(மூன்றாம் பரிசு ரூ. 50/-
பெறும் கவிதை)

தவறுகள் பிழைகள் புரியா ததுவாய்த்
தரணியின் மீதொரு பிறப்பில்லை!
அவரவர் பிழையை அறிந்தே
திருந்திடின்
அதனினும் மேலொரு
சிறப்பில்லை!


கணத்தில் மாறும் உணர்வுக்
குதிரையைக்
கடிவா ளத்தின் துணை கொண்டு
நினைக்கும் பாதையில் திரும்பும்
வலிமையும்
நெஞ்சில் உறுதியும் நமக்குண்டு!


நடந்ததை நினைத்தே பொழுதினைப்
போக்குதல்
நாளைய வாழ்வின்
தடைக்கல்லாம்!
நடப்பவை இனிமேல் நல்லவை ஆகிட
நம்பிக்கை ஒன்றே படிக்கல்லாம்!

எப்படி, எதனால் இப்படி நிகழ்ந்தது
என்பதன் காரணம் தனைக் கண்டு
அப்படி நிகழா வழியினில்
தொடர்ந்திடில்
அஞ்சிடும் தோல்விகள்
நமைக்கண்டு!

பள்ளம் விழுந்து எழுந்தபின் சாதனை
படைத்திட்ட வல்லவர் பலருண்டு!
உள்ளம் தளரா துழைத்திடின் மானுடம்
உலகத்தை வெல்லுதல் அரிதன்று!

— தளவை இளங்குமரன்






• நந்திதேவன்

'திரைலோக்கியார்', 'திரை லோக்கியமா தேவி' என்றெல்லாம் வழங்கப்பெற்ற பெருமாட்டி, தஞ்சைப் பெரிய கோவிலை எடுப்பித்துப் புகழ் கொண்ட முதலாம் இராசராசனின் மனைவி. இவர் பெயரால் உருவான அழகான ஊர்தான் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 'திரைலோக்கிய மாதேவி சதுர் வேதி மங்கலம்.' இப்போது இவ்வளவு நீளமான பெயர்

திருப்பணியில்

இல்லை; சுருக்கமாகத் 'திருலோக்கி' என்று வழங்கப்படுகிறது.

திருப்பனந்தாளுக்குத் தென் கிழக்கே ஐந்து கி.மீ. தொலைவில் உள்ளது. இறைவனின் திருநாமம் சுந்தரேசுவரர், தேவியின் திருநாமம் அகிலாண்டேசுவரி. அடுத்த ஆண்டு கும்பாபிஷேகம் காணவிருக்கிறார்கள் இருவரும்!



• குருபகவான்

சிறிய கட்டுமானம்தான். குருபகவானுக்கும் பாவங்கள் சேர்ந்தபோது, அவற்றைப் போக்கிக் கொள்ள வந்த இடம் 'திருலோக்கி' என்பது புராண வரலாறு.



• தட்சிணாமூர்த்தி

மூலவர் சுந்தரேசப் பெருமானின் சந்நிதிக்கு வலப்புறத்தில் ஆளுயரத் துக்கு நிற்கும் ரதிமன்மதன் சிற்பம் கொள்ளை அழகு. இங்கே இந்த அமர காதலர்களுக்குப் பூஜைகளும் உண்டு. 'ஆலிங்கன மூர்த்தி' என்று திருநாமம்.

ரதிமன்மதனுக்கு எதிரில், வடக்குப் பார்த்தவாறு உள்ள ரிஷப ஆருடர் திருமேனியின் வடிவழகு பிரமிப்பின் உச்சம். நந்திதேவரின் மீது திருவாசியோடு கூடிய மகேசுவரன் – உமாதேவி சிற்பம் வைத்த கண் வாங்காமல் பார்க்க வேண்டிய அதிசயம். அதிலும், திருவாசி முழுவதும் விதவிதமான நடன இசைக் கலைஞர்களின் தோற்றம் வெகு நுட்பமாய்ச் செதுக் கப்பட்டிருக்கிறது.

குருபகவானுக்குப் பாவம் போக்கிய பரமேசுவரன் தம்பதி நம் எல்லோருக்கும்தான் அருள் புரிகிறார்கள். நீண்ட நாட்களாகத் திருமணம் நடைபெறாதிருப்பவருக்கு, ரிஷபாரூடர் தரிசனம் கைமேல் பலன் தரும். திருமணம், பிள்ளைப் பேறு எல்லாம் நிகழும். எதிரேதான் மன்மதன் நின்று கொண்டிருக்கிறாரே, தன் தேவியோடு! வேறென்ன குறை இருக்கப் போகிறது.

• சூர்யகோடீஸ்வரர்
பவழக்கொடி அம்மை



சரக்கொன்றை இங்கே தல விருட்சப் பெருமை பெற்றிருக்கிறது. 'மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவன் அல்லவா!

சிவனைச் சொல்லி விட்டுப் பெருமாளைக் கவனிக்காமல் போய்விட முடியுமா?

தென்புறத்தில் பெருமாளின் பள்ளி


திருக்கோயில்கள்!

கொண்ட திருக்கோலம். தரிசிக்க வருகிறவர்களை அப்படியே பிடித்து இழுத்து நிறுத்தி விடும். சுதைச் சிற்பம் தான். நல்ல ஆகிருதியோடு கூடிய திருமேனி.

க்ஷீராப்திசயன நாராயணப் பெருமாள் என்பது திருநாமம். பூவுலகத்துக்கு மூவிலை வில்வத்தைக் கொண்டு வந்து லட்சுமி தேவி பூஜித்த தலம் என்கிறார்கள்.



• சிதிலமடைந்த லட்சுமி நாராயண பெருமாள்



• திருப்பணி நடைபெறுகிறது...

தாயாரின் திருநாமம் க்ஷீரநாயகி. சந்நிதிக்கு எதிரேயுள்ள திருக்குளம் க்ஷீரதீர்த்தம் என்று எல்லாமே பாற்கடல் நினைவுகளைத் தூண்டுகிற வைணவத் திருத் தலமாகவும் திகழ்கிறது திரை லோக்கி.

இந்த ஆலயத்தில் விஷ்ணுதுர்கை தெற்குப் பார்த்து அருள்பாலித்துக் கொண்டிருப்பது விசேஷமானது என்றார் பட்டாச்சாரியார். இவரை தரிசித்தால் 'எடுத்த காரியம் யாவிலும் வெற்றி கிட்டும்' என்பது ஒரு நம்பிக்கை.

மேலேயுள்ள மண்டப விதானம் தான் எப்போது விழுந்து விடுமோ என்று அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

விஷ்ணுபதி புண்யகால சேவை என்பது இங்கே விசேஷமானது. அன்றைக்குப் பெருமாளுக்கும், தாயாருக்கும் வழிபாடு செய்தால் ஆரோக்கியமான திருமண வாழ்வு கிட்டும் என்கிறார்கள். வழக்கு வியாஜ்ஜியங்களில் அகப்பட்டுக் கொண்டவர்கள் கூட மனம் ஒன்றி மீண்டும் கூடி வாழ இந்தப் பெருமாள் அருள்பாலிக்கிறார்.

மூலவர் சுதைத் திருமேனி என்பதால் அபிஷேகம் கிடையாது. சாம்பிராணித் தைலம் மட்டுமே சார்த்துகிறார்கள். சந்நிதிக்கு வடப்புறம் உள்ள வரதராஜப் பெருமாள்தான் அபிஷேக மூர்த்தியாக விளங்குகிறார்.

கும்பகோணம், மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதிகள் உள்ள ஊர். திரைலோக்கி.

ஆனந்தமாக இரண்டு தம்பதிகளையும் சேவித்து நம்முடைய வாழ்வில் வளம் பெற லாம்!

தெய்வீகமும் சாந்நித்யமும் கோலோச்சும் இன்னொரு ஈசன் கோயிலுக்கும் கும்பாபிஷேகப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அது இலுப்பைக் காட்டு சூர்ய கோடீஸ்வரர் கோயில். தஞ்சாவூர் திருவிடைமருதூர் வட்டாரத்தில் இருக்கும் சிவஸ்தலம். அங்கே போவோமா?

"இத்தனை அழகான சிற்பங்களை எப்படித் திருடு போகாமல் காப்பாற்ற முடிந்தது?" என்று வியப்பு மேலிடக் கேட்டோம்.

"காப்பாத்தறதா? நாங்களா? எல்லாம் பகவானே பார்த்துண்டார். இடிஞ்சு போய்க் கிடந்த கோவிலிலே ஒண்ணொண்ணும் எத்தனை பெரிசு தெரியுமோ? நாக ராஜா! அவர்தான் காவல் காத்திருக்கார்" என்கிறார் கிழச்சூரிய மூலை ஆலயத் திருப்பணி வேலைகளைக் கவனித்து மேற்பார்வையிட்டு வருகிற கணேச அய்யர்.

சுவாமியின் திருநாமம் சூர்ய கோடீசுவரர். அம்பிகையின் பெயர் பவழக் கொடி அம்மை.


• ரதிமன்மதன்

கிழக்குச் சூரிய மூலை. காவிரியின் வடபுறத்தில் ஓடுகிறது பவழ நதி என்கிற சிற்றாறு. இதன் தென் கரையில் உள்ள சிவஸ்தலம்தான் திரைலோக்கி. இதன் அருகேயுள்ளது சூரிய மூலை கிராமம். மயிலாடு துறையிலிருந்து குத்தாலம் வழியாகத் துகிலி என்கிற ஊருக்குப் பேருந்தில் சுலபமாய் வந்து விடலாம். அப்புறம் கிழக்குச் சூரிய மூலைக்குக் காரில், ஸ்கூட்டரில் வந்தால்தான் உண்டு. பேருந்துகளை நம்பிப் பயனில்லை.

சுவாமி சந்நிதி, அம்மன் சந்நிதி, விநாயகர் சன்னிதி என்று மூன்று கட்டுமானங்கள். ஏறக் குறைய வேலை நிறைவடையும் நிலையில் உள்ளன.

விநாயகர், வள்ளி தெய்வயானி சமேத ராய் சுப்ரமண்யர், ஆனந்த தக்ஷிணாமூர்த்தி, சூர்ய கோடீசுவரர் பவழக் கொடி அம்மை, சூர்ய பகவான், சண்டிகேசுவரர், பைரவர், நாகர் – என்று ஒவ்வொன்றும் அழகொழுகும் அற்புதத்திருமேனிகள்! பைரவரின் கழுத்துப் பகுதியில் சிவப்பு நிறம் ஒளிர்கிறது. சூர்ய கோடீசுவரரின் லிங்கத் திருமேனியில் முன்பக்கம் மையத்தில் செங்குத்தாய் ஒரு கோடு புடைப்பாகக் காணப்படுகிறது. கீழே இருபுறமும் வளைந்த மாதிரியும் தெரிகிறது. இந்த அமைப்பின் தாத்பரியம் தெரியவில்லை.

'கோடி சூர்யப் பிரகாசம்' என்று ஒரு சொல் வழக்கு உண்டு. இந்தக் கிழக்குச் சூர்ய மூலையில் அதற்கு விளக்கம் இருந்திருக்கிறது. சிதிலமாகிப் போன செங்கல் கட்டுமானத் திருக்கோவில் கிழக்கே பார்த்த சந்நிதியை உடையது. எதிரே நிற்கும் இலுப்பை மரத்தின் இலைகளில் சூரிய ஒளிபட்டு தகதகவெனப் பளபளத்துப் பிரதிபலிக்குமாம்.

இப்போதும் பத்துப் பதினைந்து இலுப்பை மரங்கள் ஆலயப் பகுதியில் கம்பீரமாய் நிற்கின்றன. தலவிருட்சம் இலுப்பை மரம்தான்! இந்த மரங்களின் காய்களே போதுமான எண்ணெய் தந்து, கோவிலின் தேவையை நிறைவு செய்யுமாம்.

கோவில் வளாகத்தை விட்டு வெளியே நடந்து ஊருக்குள் வந்தால் இன்னும் ஒரு திருக்கோவில் ஒரே சந்நிதியோடு சிதிலப்பட்டுத் தலையில் செடிகொடிகளை வளர்த்துக் கொண்டு நிற்கிறது. இது பெருமாள் கோவில். இங்கேயும் அழகான திருமேனிகள். மூலவர் லட்சுமிநாராயணப் பெருமாள். 'சூர்ய கோடீசுவரர் ஆலயமும் இப்படித்தான் கிடந்தது' என்று பெருமாள் சொல்கிற மாதிரி ஒரு பிரமை. யார் கண்டது? லட்சுமி நாராயணப் பெருமாளுக்கும் ஒரு புது ஆலயம் கிடைக்கலாம்.

கட்டுரை, படங்கள் : சுப்ர.பாலன்

நம்பிக்கை டாக்டர்!

டாக்டர் பரமேஸ்வரன் பார்வை இழந்தவர். பார்வையிழந்த பின்னும் மருத்துவப் படிப்பில் தேர்ச்சி பெற்ற முதல் மருத்துவர், ஆசியாவைப் பொறுத்தவரை இவர்தான். இதற்காக அவர் பட்ட கஷ்டங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல.

"மருத்துவக் கல்லூரியில் நான் சேரும் போது நார்மலாகத்தான் இருந்தேன். கடைசி வருடம் வந்த போதுதான் சோதனை ஆரம்பித்தது. 'ரெடினல் ஹெமரேஜ்' என்று சொல்லப்படும் கண் விழி நோய் என்னைத் தாக்கியது. என்னைப் பரிசோதித்த மருத்துவர்கள், ஈல்ஸ் நோயால் (Eall's disease) பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இது இளம் வயதினரை குறிப்பாக இருபது - முப்பது வயதுக்குட்பட்டவரை அதிகமாகத் தாக்குவதாகவும் தெரிவித்தனர். லக்னோ அருகே இருக்கும் 'சீதாபுரா' என்ற ஊரிலிருக்கும் மருத்துவமனையில் சேரும்படி ஆலோசனை சொல்லவே, அங்கு போய் இரண்டு மாதங்கள் தங்கி சிகிச்சைகளை மேற்கொண்டேன். ரத்தம் கசிவதை நிறுத்த சிறப்பு லேசர் சிகிச்சை கொடுத்தும் பலனில்லாமல் அடிக்கடி ஹெமரேஜ் ஆகிக்கொண்டேயிருந்தது. பார்வை மங்கலானது. அடுத்து வந்த நாட்களில் பார்க்கும் திறன் இல்லாமலே போய்விட, காரிருளுக்குள் தள்ளப்பட்டடேன். இம்மாதிரி நோய்க்கு இன்றுவரை எந்த சிகிச்சையுமில்லை. இந்தியா பூராவும் பல டாக்டர்களைச் சந்தித்தேன். வெளிநாட்டிலிருக்கும் பல நிபுணர்களையும் ஆலோசனை கேட்டேன். அதற்கும் பலனில்லை" என்று ஆரம்ப நாட்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பிக்கிறார் பரமேஸ்வரன்.





கர்நாடகாவிலிருக்கும் சிக்மகளூரைச் சேர்ந்த பரமேஸ்வரன் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். ஏழைமையும் எளிமையும் கலந்த பின்னணியிலிருந்து, ஒரு கிராமத்து மாணவன் பெல்காமல் ஜவஹர்லால் மெடிகல் காலேஜில் மருத்துவம் படிக்கச் சென்ற போது பூரித்துப் போனார்கள் பெற்றோர். ஆனால் இறுதி வருட படிப்பை முடிக்க முடியாமல் மகன் ஊர் திரும்பியபோது ரத்தக் கண்ணீர் வடித்தனர்.

"ஒரு சில வருடங்களுக்கு வீட்டிலேயே அடைந்துகிடந்தேன். உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் மெள்ள மெள்ள விலகிப் போனார்கள். தனித்து விடப்பட்டேன். 'தண்டபிண்டா' என்று என் காதுபடவே திட்டியபோது உடைந்துபோனேன். பிறகு ஆன்மிக வழியில் மனம் செலுத்தினேன். கோயில்களுக்குச் சென்றேன். துணையுடன்தான்! ஒருமுறை அப்படிச் சென்றுவிட்டு வீடு திரும்பியபோது ஒரு விதத் தெளிவு ஏற்பட்டிருந்தது. நான் மருத்துவ படிப்பை முடிக்கப் போகிறேன் என்று சொன்னபோது எல்லோரும் கேலியாகச் சிரித்தனர்.

"கிட்டத்தட்ட ஆறு வருட இடைவெளி. என்னுடைய பிரின்ஸிபால் டாக்டர் எஸ்.ஜி.



"அவரோட மனைவி பேர் நாராயணியா?"

"ஆமா... எப்படித் தெரியும், உங்களுக்கு?"

"அவர்தான் அடிக்கடி, 'நடக்கிறது நாராயணி செயல்'னு சொல்றாரே!"

- சீர்காழி ரேவதி

தேசாய் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். எனக்கு முற்றிலும் பக்கபலமாக இருந்து உதவியது அவரே. பரீட்சை எழுத வேண்டுமென்றால் இந்தியன் மெடிகல் கவுன்ஸிலின் அனுமதி வேண்டும். பார்வையிழந்த ஒருவன் மருத்துவனாகத் தேர்ச்சி பெறுவது சுலபமான காரியமல்ல. பல கடினமான சோதனைகள், கேள்விக்கணைகளைக் கடந்தேன். எக்ஸ்பர்ட் கமிட்டியின் முன் நிறுத்தப்பட்டேன்.

"உனக்குப் பார்வையில்லை என்பதற்காக எந்த விதியையும் தளர்த்த மாட்டோம். நார்மல் மாணவனுக்கு என்ன ரூலோ, கட்டுப்பாடோ அதுதான் உனக்கும்" என்றனர். பிராக்டிகலில் நல்ல மதிப்பெண்களுடன் தேறினேன். ஹவுஸ் சர்ஜன்ஷிப் முடித்தேன். மருத்துவராக வேண்டும், மருத்துவத் துறையில் பணி புரிய வேண்டும் என்ற என் ஆசை நிறைவேறிய பொன்னாள் அது" பெருமையுடன் விவரிக்கிறார் பரமேஸ்வரன்.

இவருடைய ஞாபக சக்தியைப் போற்றிப் புகழ்கின்றனர், இவருடைய நண்பர்கள்.

"முதலில் சாதாரணமாகத்தானிருந்தேன். பார்வை போன பிறகுதான் இந்த அதிசயிக்கத்தக்க நினைவாற்றல். எனக்காக மற்றவர்கள் படித்துக் காண்பிக்கும்போது அதை அப்படியே நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். என் நண்பர்கள்கூட, 'பரமா, நீ ஒரு கம்ப்யூட்டர். இப்படி எல்லாத்தையும் ஸ்டோர் பண்ணி வைச்சுண்டிருக்கியே' என்பார்கள். கண்ணை எடுத்துக்கிட்டாலும் கடவுள் எனக்கருளிய ஆறுதல் பரிசு இந்த மெமரி" என்கிறார் நெக்குருக!

முன்னாள் குடியரசுத் தலைவர் கியானி ஜெயில்சிங்கிடமிருந்து சிறந்த ஆசிரியருக்கான விருது பெற்றுள்ள இவர் கடந்த இருபத்திரண்டு வருட காலமாகப் பணியாற்றி வருகிறார்.

"ஹெலன் கெல்லர் மற்றும் ஜான் மில்டன்தான் என்னுடைய ஆதர்ச மனிதர்கள். அவர்கள் எட்டிய சிகரங்களைக் கவனித்து எப்போதுமே வியந்தது உண்டு" என்கிறார்.

"சமீபத்தில் பீகாரைச் சேர்ந்த அங்கடோப் என்ற பார்வையிழந்த மாணவர் மருத்துவக் கல்லூரியில் சேர விருப்பம் தெரிவித்தபோது மெடிகல் கவுன்சிலைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்தனர். பிறகு அவருக்கு அனுமதி கொடுத்தார்களா என்பது பற்றித் தெரியவில்லை" என்கிறார் நிஜமான அக்கறையுடன்.

பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் மக்களிடம் விழிகளைப் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க பாடுபடப் போவதாகச் சொல்கிறார்.

"பார்வை போய்விட்டது என்றாலே சமூகத்திலிருந்து ஒருவன் ஒதுக்கி வைக்கப்படுகிறான். இது வருந்தத்தக்கது. கண்ணில் ஏதேனும் பிரச்னை என்றால் உடனே மருத்துவரை அணுக வேண்டும். கை வைத்தியம் பண்ணுகிறேன் என்று கண்ட சாறுகளையும் எண்ணெயையும் கண்ணில் விடக்கூடாது..." என்று எடுத்துச்சொல்கிறார்.

உலகிலேயே, டாக்டர் பரமேஸ்வரன்தான் இரண்டாவது பார்வையற்ற டாக்டர். முதல் நபர் என்ற பெருமையைத் தட்டிச் செல்பவர் டாக்டர் டேவிட் ஹார்ட்மேன். இவர் பிலடெல்பியாவில் பணிபுரிகிறார்.

"சோதனைகள், கஷ்டங்கள் வரும். நானும் நிறைய அழுதிருக்கிறேன். சோர்வுற்றிருக்கிறேன். ஆனால் துணிந்து நின்று போராடினேன். படித்த பிறகும் வேலை கொடுக்க பலர் தயங்கினர். பார்வையற்றவனால் எப்படி வைத்தியம் பார்க்க முடியும் என என் காது படவே சொல்லி நிராகரித்தனர். என்னையும் என் சேவையையும் ஏற்றுக் கொண்ட இந்தச் சமூகத்திற்கு நன்றி..." என கண்கள் பனிக்கச் சொல்கிறார் பெங்களூர் மருத்துவக் கல்லூரி விரிவுரையாளரான டாக்டர் பரமேஸ்வரன்.

- லதா சேகர்


GOKULAM

The monthly magazine for children

TURNS 15

JULY 2002

5 new features begin



CARTOONS MADE EASY

Lalitha aunty teaches you to draw cartoons. Have fun!



Rs.6/- ONLY

Get your child a copy today

COUNTRIES AND THEIR CHILDREN

- a twelve part coverage on the way of life of people from different lands!

FASCINATING FLORA

- taking you on an intriguing journey through the kingdom of plants.





THE PARENT PAGE

Welcoming contributions from parents of our young readers!


Write to :
The Circulation Manager,
47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097

THE STRANGE CREATURES

- a colourful and exciting picture story serial!

Story : **Aparna Vishwanathan**

Illustration : **Jayaraj**



அவன்தான் முதல் ஆள்.

அவனுக்கே கூச்சமாகயிருந்தது. சந்தேகத்தோடு சுற்றும் முற்றும் பார்த்தான்.

சீப்பு காணாத தலைமுடி; தூக்கத்திற்காக ஏங்கும் கண்களுடன் மைக்செட் பையன் ஒருத்தன் அப்போதுதான் ஆம்ப்ளிஃபையர், பாக்ஸ்... டேப்ரிகார்டர்... சகிதம் உள்ளே வந்து கொண்டிருந்தான்.

"கூட்டம் ஆறு மணிக்குத்தானே?"

"அதெல்லாம் தெரியாது சார். எங்க ஓனர் ஏழுமணிக்குள்ளாற செட்டை ரெடி பண்ணிடுன்னு சொல்லியிருந்தாரு... வந்துட்டேன்" பையன் சொன்னான்.

"இல்லே... ஏன் கேட்டேன்னா..?" இவன் இழுத்தான்...

கையில் சுற்றிய கறுப்பு வயருடன் பையன் வாசலுக்குச் சென்றுவிட்டான்.

பாராட்டுக் கூட்ட அழைப்பிதழை எடுத்துப் பார்த்தான்.

நல்லவேளை. விழா இன்று மாலை ஆறு மணிக்குத்தான்.

இங்கும் அங்குமாக அலைந்து... கோணம் பார்த்து.. மின் விசிறி பார்த்து ஒரு நாற்காலியைத் தேர்ந்தெடுத்து உட்காரப் போனான்.

நாற்காலி தூசி படிந்து கிடந்தது.

அவன் தன் கையிலிருந்த துணிப்பையிலிருந்து லெதர் ஹேண்ட் பேக்கை எடுத்து இடது கை கக்கத்துள் திணித்துக் கொண்டான். பிறகு அந்தப் பையினால் தூசியைத் துடைத்துச் சுத்தம் செய்தான்.

நட

பையை உதறியபோது மனைவி நினைவுக்கு வந்தாள்.

அவன் மனைவி திறமையான குடும்ப நிர்வாகி. அவன் தாம்தூம் பேர்வழி. அஞ்சு ரூபாய்க்கு மல்லிகைப்பூ வாங்கிவர பதினைஞ்சு ரூபாய் ஆட்டோ வாடகை கொடுப்பான்.

அவளது சிக்கனத்தில்தான் அவர்கள் குடும்ப வண்டியே ஓடுகிறது.

இந்தப் பை அவள் தைத்தது. பழசாகிப் போன அவன் பேன்ட்தான் பையாக மாறியிருந்தது.

"உங்களுக்கு எத்தனை பை தைத்தாலும் போதாது. போற இடத்துல எல்லாம் தொலைச்சுட்டு வந்து நிப்பீங்க. இந்தப் பையையாவது... பத்திரமா... வீடு கொண்டு வந்து சேருங்க.." மனைவி சொல்லியனுப்பியிருந்தாள்;

பையை நாற்காலிமீது விரித்தான். உட்கார்ந்தான்.

"சார்..."

திரும்பினான் அவன்.

அவனைப் போல் ஓர் அப்பாவி.

"சார்... மீட்டிங் ஆறு மணிக்குத்தானே?"

"ஆமாம்..."

"இல்லே யாரையும் காணுமே. அதுதான் எனக்கு சந்தேகமாப் போச்சு."

இவன் அதற்கு ஏதும் பதில் சொல்லவில்லை.

"சார்... என் பேரு ரங்கசாமி. அச்சுதராயன்ற பேர்ல கதை... கவிதையெல்லாம் எழுதறேன்."

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்..." அவன் அத்தோடு நிறுத்திக் கொண்டான். இப்படித்தான் பல சமயங்களில் உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொள்வான்.

"சார்... நீங்க?..." அச்சுதராயன் விடுவதாயில்லை.

"நான் நரஹரி..."

"அடடே... உங்க கதைகள்ளாம் நிறையப் படிச்சிருக்கேன். உங்க நடையே அலாதி சார். ஆமாம் நீங்க ஏன் புனை பெயர் வைச்சுக்கலே."

"நரஹரிங்கறதே ரொம்ப 'ரேர்' தானே."

"சார், இந்த மாதிரி... பாராட்டு விழாவுலதான்... நம்ப மாதிரி எழுத்தாளர்களையெல்லாம் சந்திச்சுப் பேச முடியும். ஒரு விஷயம் தெரியுமா... எல்லாப் பாராட்டு

கமலவேலன்

விழாவுக்குப் பின்னாடியும் ஒரு சுவாரஸ்ய மான கதையிருக்கும். இப்ப இந்தப் பாராட்டு விழாவும் அப்படித்தான். இவரு... அந்த சமூகத்தைச் சேர்ந்தவரு... அதுதான்... அவங்க இலக்கிய அமைப்பு இவரைச் சிறந்த "படைப்பாளியாத் தேர்ந் தெடுத்திருக்கு!"

அச்சுதராயன் முதுகுக்குப் பின்னால் இடது கையை மறைத்துக் கொண்டு, வலது கை ஆள்காட்டி விரலை அவனுக்கு முன்பு... விறைப்பாக நீட்டி... தமது உடம்பைச் சற்று



முன்னால் வளைத்துக் கொண்டு அவர் பேசிய தோரணையை அவன் வெகுவாக ரசித்துக் கொண்டிருந்தான்.

"என்ன சார்... நான் எதுவும் தப்பா பேசிட்டேனா?" அவர் கண்களைச் சிமிட்டினார். முதுகுக்குப் பின்னால் மறைத்து வைத்திருந்த இடது கையால்... ஏகதேசம் வழுக்கையான தமது தலையைத் தடவிக் கொண்டார். சின்னவாய், அதற்கு ஏற்றார் போல் பென்சிலால் கோடுபோட்ட 'மை' தீட்டிய மீசை....

அவன் அவரை தன் மனத்திற்குள் வரைந்து கொண்டிருந்தான்.

"சார்... ஒரு நிமிஷம் இந்தப் பையைப் பார்த்துக்குங்க. நான் 'பாத்ரூம்' போயிட்டு வந்துடறேன்."

அப்பொழுதுதான் அவன் அந்த இரண்டு பைகளைப் பார்த்தான். ஒன்று பாலிதீன் பை. ஏதோ ஒரு ஜவுளிக்கடை பை. இன்னொன்று... டிராவல்பேக். கர்ப்பிணிப் பெண்ணின் வயிறு போல அந்த டிராவல் பேக் வயிற்றுப் பகுதி பிதுங்கிக் காணப்பட்டது.

அவர் டிராவல்ஸ் பேக்கை அவனுக்குப் பக்கத்து சீட்டில் வைத்தார். பாலிதீன் பையைக் கையோடு எடுத்துக் கொண்டார். அதில் ஒரு வேளை விலையுயர்ந்த பொன்னாடையிருக்கலாம். விழா நாயகருக்குப் போர்த்தி கௌரவிப்பதற்காக வாங்கி வந்திருக்கலாம்.

அவர் அந்தப் பையை மார்போடு அணைத்துக் கொண்டு பாத்ரூம் நோக்கிச் சென்றார்.

நாமும் 'துண்டு' ஒன்று வாங்கி வந்திருக்கலாம் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

பாத்ரூம் சென்றவர் வெகு நேரம் கழித்துத் திரும்பி வந்தார்.

போகும்போது பிஸ்கட் கலர் சட்டையும், கிரே கலர் பேன்ட்டும் அணிந்திருந்தார். திரும்பி வரும்போது கறுப்புக் கட்டம் போட்ட சட்டையை பேன்ட்டினுள் திணித்து 'டிரிம்மாக' வந்தார். இந்த சட்டைக்கு அவர் முதலில் அணிந்திருந்த சட்டையே டீசன்ட்டாகப் பட்டது.

அவன் பக்கத்தில் உட்கார்ந்தார்.

முகம் கழுவி பவுடர் போட்டிருந்தார்.

"சார்... நாம் எல்லோரும் ஒண்ணு சேர்ந்து ஒரு பொதுவான இலக்கிய அமைப்பை உருவாக்கணும்."

இப்போது அவர் டிராவல் பேக்கை எடுத்து மடியில் வைத்துக் கொண்டார். அதற்குமேலே அந்தப் பாலிதீன் பை. அதில் அவர் சட்டையைத் திணித்திருந்தார்.

பொன்னாடை எதுவும் கொண்டுவரவில்லை என்பது அவனுக்குத் திருப்தியாக இருந்தது. அவர் இலக்கியவாதிகள் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

வெளியே நின்றிருந்த சிலர்... ஒவ்வொருவராக... உள்ளே வரத் தொடங்கினார்கள்.

"சார்... நான் சொன்னதை நீங்க... சிந்திச்சுப் பாருங்க. இது என்னோட விசிட்டிங் கார்டு." அவர் மெல்லிய தகடு போன்ற அட்டையை நீட்டினார்.

இவன் பணிவாக வாங்கிக் கொண்டான்.

"உங்க கார்டு."

"சாரி...சார்... எனக்கு கார்டு அடிக்கற பழக்கம் இல்லே..."

துண்டுச் சீட்டில் முகவரியை எழுதிக் கொடுத்தான். ஒருவழியாக ஏழரைமணிக்கு விழா தொடங்கிவிட்டது. விழா நாயகர் ஏற்புரை சொல்ல மேடைக்கு வந்தார். திடீரென பத்துப் பதினைந்து பேர் பொன்னாடை, வாழ்த்து மடல், மலர் மாலை, சகிதம் மேடையை முற்றுகையிட்டார்கள். இவர்கள் இவ்வளவு நேரம் எங்கேயிருந்தார்கள்?

"ஹலோ...நரஹரி..."

பின்வரிசையில் அவனது நெருங்கிய நண்பர் ஒருவர் கை நீட்டி அழைத்தார்.

"வியாதி குணமாகியும் கஞ்சி தான் குடிக்கிறேன் டாக்டர்..."

"ஏன்!"

"பணமெல்லாம் வைத்தியத்துக்கே செலவாயிட்டுது!"

— பர்வதவர்த்தினி



"சார்... ப்ளீஸ்.."

"அச்சுதராயர் கால்களை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டார். இவன் அவரைக் கடந்து சென்றான்.

அவன் அவரைக் கடக்கும்போது, "சார்... அமைப்பைப் பற்றி யோசிக்கணும்." மீண்டும் அவர் நினைவு படுத்தினார்.

விழா முடிந்து கூட்டம் கலையத் தொடங்கியது.

நரஹரி நண்பருடன் பேசிக் கொண்டு நின்றான்.

"சார்... பார்ப்போம்..." அச்சுதராயர் அவரைத் தாண்டிச் சென்று விட்டார்.

மண்டபத்தின் வெளியே வந்தபிறகுதான் நரஹரி கையில் பை இல்லை என்பதை உணர்ந்தான். ஹான்ட்பேக் மட்டும்தான் வைத்திருந்தான்.

'ஐய்யய்யோ... பையை மறந்து விட்டோமே' பதறிப்போனான் அவன்.

வேகமாக மண்டபத்திற்குள் ஓடினான்.

அவன் உட்கார்ந்த நாற்காலியைப் பார்த்தான்.

பையைக் காணவில்லை!

ஐயோ! அவன் மனைவி ஆசை ஆசையாய் தைத்துத் தந்த பையாச்சே!

"என்ன சார் தேடறீங்க?.." மைக் செட் பையன் கேட்டான்.

இதற்கு அப்புறமும் பையைத் தேடுவது சரியாகப் படவில்லை அவனுக்கு. பதில் சொல்லாமல் கிளம்பிவிட்டான்.

மண்டபம் விட்டுக் கிளம்பினான்.

"இந்தப் பையையாவது பத்திரமா.... வீடு கொண்டு வந்து சேருங்க.." மனைவி கூறியது இப்போதும் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

'அவளுக்கு என்ன சமாதானம் சொல்வது?' பிரச்னையின் தீவிரத்தை எண்ணியவாறே பஸ் ஸ்டாப்பை அடைந்தான்.

"சார் இப்பத்தான் வர்றீங்களா? ஏன் இவ்வளவு நேரம்! உங்க நண்பரைக் காணோமே. அவர் கவிஞரா? கதாசிரியரா?" பஸ்டாப்பில் நின்றிருந்த அச்சுதராயன் கேள்விமேல் கேள்வியாய்... துளைத்து எடுத்து விட்டார்.

"கூட்டமெல்லாம் கலையட்டும்னு பார்த்தேன்."

"சார்... நாம ஒரு பொது அமைப்பை உருவாக்குகிறோம். மறந்துடாதீங்க. உங்களை மாதிரி இளைஞர்கள்தான் அதைச் செய்ய முடியும்."



"நம்ம டாக்டர் சண்டை போட்டாவது பீஸைக் கறந்திடுவார்..."

"அதான் காது, மூக்கு, 'சண்டை' நிபுணர்ன்னு போர்டில் எழுதியிருக்காரா?"

— ஜோஸப் காமராஜ்

அவன் கண்கள் அவரை ஊடுருவிப் பார்த்தன.

'டிராவல்ஸ் பேக்கை' இப்போது தோளில் தொங்க விட்டிருந்தார்.

'தானும் இப்படி ஒரு பை கொண்டு வந்திருந்தால் மறக்காமல் இருந்திருப்போமோ' என்று அவன் எண்ணினான்.

அவன் அச்சுதராயனை மீண்டும் தீர்க்கமாய்ப் பார்த்தான். எவ்வளவு கம்பீரமாக பையுடன் நிற்கிறார்! கொண்டு வந்தைத் தொலைக்கவில்லை என்ற கர்வம் அவர் முகத்தில் தெரிந்தது.

"சரி சார். பஸ் வந்துடுச்சு. நான் தொடர்பு கொள்கிறேன்" என்று விருட்டென்று மின்னல் பாய்ச்சலில் பஸ்ஸில் ஏறியவர் கையில்...அட.....

'ஐயோ... அது அவனுடைய பை அல்லவா!' பஸ் போயே விட்டது.

"என்ன சார்... இன்னும் பஸ் வரலையா?" மைக் செட் பையன் இவனை நோக்கி வந்தான். நினைவெல்லாம் பையின் மீதே இருந்ததால், பதில் வரவில்லை.

"சார்... நீங்க தேடினது இதுதானா பாருங்க" என்று சொல்லி ஒரு துண்டுச் சீட்டை அவனிடம் நீட்டினான்.

அது அச்சுதராயனுக்கு அவன் எழுதிக் கொடுத்த முகவரிச் சீட்டு! ○

ஐம்பது கோடிகளில் ஒரு காதல் கதை!

ரீல் லைஃபில் தானென்றில்லை; ரியல் லைஃபிலும் 'அம்மா சென்டிமெண்ட்' 'ஒர்க்-அவுட்' ஆகும்! அம்மாவின் பெயரான 'லீலா'வை, சஞ்சய் பன்சாலி என்ற தன் பெயரில் இடைச் செருகினாரோ இல்லையோ, திரை உலகில் லீலைகள் புரிய ஆரம்பித்து விட்டார் சஞ்சய் லீலா பன்சாலி!

முதல் படமான 'காமோஷி' - செவிட்டுமைப் பெற்றோரிடம் பாசத்தைப் பொழியும் பாடகி கதை - அவார்டுகளைக் குவித்தது; அடுத்து, 'தில் தே சுகே சனம்' - மனைவியை அவன் காதலனிடம் ஒப்படைக்க முயற்சிக்கும் ஹீரோவின் கதை - மெட்ரோக்களில் வசூலைக் கொட்டியது; இப்போது மூன்றாவதாக 'தேவதாஸ்' வரலாறு காணாத ஐம்பது கோடி பட்ஜெட்டில், இதற்கு முந்தைய 'கபி குஷி கபி கம்'மை (40 கோடி) தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விடக் கூடிய பிரம்மாண்டத்தில்!

நூறு வருடங்களுக்கு முன் சரத் சந்திரர் எழுதிய முக்கோணக் காதல் கதையைத் தூசு தட்டியதற்கு முக்கியக் காரணம், அப்பா சென்டிமெண்ட்! ஆமாங்க... இவருடைய அப்பாவுக்கு அசல் தேவதாஸின் குணங்களாம்... அதாவது மென்மையான முரட்டுத்தனம்!

இதுவரை இருமுறை இந்தியிலும், ஒருமுறை தமிழிலும், ஐந்து முறை வேறு மொழிகளிலும் படமாக்கப்பட்ட இந்தக் கதையை, ஒன்பதாவது முறையாக பன்சாலி படமாக்கியுள்ளார் என்றால் அதில் ஏதோ இருக்கிறதென்றுதானே அர்த்தம்? (ஒன்பது சென்டிமெண்ட்...?)

இந்திய சென்டிமெண்டை 'டச்' பண்ணுமுகமாக, இதில் ராதா_கிருஷ்ண- மீரா கதை இருக்கிறதாம்; ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒரு தேவதாஸ் இருக்கிறானாம். அதெல்லாம் இருக்கிறதோ இல்லையோ, மாதுரியும், ஷாருக்கும், ஐஸ்வர்யாவும் இருக்கிறார்கள்; அவர்களை நம்பித்தான் பன்சாலி வாரி இறைத்திருக்கிறார். அவர்களுக்காகத்தான் கதையையும் இஷ்டப்படி மாற்றியிருக்கிறார்; ஒரிஜினலில் பாருவும் சந்திரமதியும் சந்தித்துக் கொள்வதில்லை. ஆனால் உலக அழகியையும் நடன மோகினியையும் அந்த ரோல்களில் வைத்துக் கொண்டு, மோதவிடாமலிருப்பதா? அதனால், ஐஸ்ஸும் மாதுரியும் சந்தித்து, தேவதாஸைப் பற்றி விவாதித்து, நாட்டியமெல்லாம் ஆடுகிறார்கள்.





மூலக்கதையில் தேவதாஸ் மேற்படிப்புக்கு கோல்கத்தா

போவார்; ஷாருக்கை அங்கே அனுப்ப முடியுமா? அதனால் ஆக்ஸ்போர்டு போகிறார். அங்கே போகும் ஹீரோவின் கதையை இங்கே முதலில் திரையிட்டால் நன்றாயிருக்குமா? அதனால் கேன்ஸ் திரைப்பட விழாவில், (போட்டியில் கலந்து கொள்ளாமல்) திரையிட்டிருக்கிறார்கள்.

திரையிடப்பட்ட ஃபிரெஞ்சு ரிவெய்ராவுக்கு, நான்கு குதிரைகள் பூட்டிய அழகு ரதத்தில், மஞ்சள் புடைவையும் மங்கல நகைகளுமாய் ஐஸ்வர்யாவும், கறுப்பு ஸூட்டில் ஷாருக்கும் ஜோடியாக வந்திறங்கிய போது, கூட்டம் ஜவிடம் மோகித்து உருகியதாம். இந்திப் படங்களில் ஏன் முத்தக் காட்சிகள் இடம்பெறுவதில்லை என்று ஷாருக்கை உலுக்கியதாம்!

கேன்ஸுக்கு தம்மை அழைக்கவில்லை என்று, கன்னிலால் பாத்திரத்தில் நடித்த ஜாக்கி ஷ்ராஃபுக்கு வருத்தமென்றால், மாதுரியைக் கூப்பிடாததில் எம்.எஃப். ஹுசைனுக்கு ஏகக் கோபம்!

சந்திரமுகி பாத்திரத்தை மாதுரிக்கென்றே சரத் சந்திரர் படைத்திருப்பதாக இம்மியும் சந்தேகமின்றி நம்பும் ஹுசைன், ஆத்திரம் தீர, சந்திரமுகியை,

சித்திரப்பாவையாக்கிக் கொண்டிருக்கிறார். (இந்த தேவதாஸ் தன் சந்திரமுகியின் ஓவியக் கண்காட்சியை எட்டு மெட்ரோக்களுக்கு எடுத்துப் போகிறாராம்... சென்னையிலுமா?)


ஆனால் தன் சந்திரமுகிக்காக இயக்குனர் பன்சாலி செலவழித்திருப்பது கொஞ்சநஞ்சமல்ல; 'தில்வாரா' கோயில்கள் அமைப்பில் இவருக்கு

●●

ஆறு செட்டுகளுக்கு இருபது கோடிகள் என்றால் ஆறவேயில்லை! இரண்டாயிரத்து ஐந்நூறு லைட்டுகள், எழுநூறு லைட்மென், நாற்பத்து இரண்டு ஜெனரேட்டர்கள் (சாதாரணமாக இரண்டே ஜாஸ்தி! இதனால் மும்பைத் திருமணங்களெல்லாம் ஜெனரேட்டரில்லாமல் கஷ்டப்பட்டனவாம்), இருநூற்று அறுபது ஷூட்டிங் ஷிஃப்ட்டுகள், இரண்டரை வருட ஷூட்டிங்... ஹம்ம ஹம்ம ஹம்மா தான்!

●●





• பதினாறு கிலோ ஆடை

உருவாக்கியிருக்கும் குடியிருப்புக்கு பன்னிரண்டு கோடி செலவிட்டிருக்கிறார்! சுற்றி செயற்கை ஏரி - அதில் தண்ணீர் அவ்வப்போது காய்ந்து உயிரை எடுத்ததாம்; ஏரிக்கு நடுவே தொங்கு பாலம் - அது ஆடி ஆடி பயமுறுத்தும் போதெல்லாம், "லண்டன் பிரிட்ஜ் ஈஸ் பாலிங் டவுன்" பாடுவார்களாம்! வனவிலங்குகளின் திடீர்ப் பிரவேசம், உபரி திரில்லர்!

"இந்த செட்டை கலைக்காமல் அப்படியே வைத்திருந்து டூரிஸ்டுகளுக்குக் காட்டுங்கள்" என்றிருக்கிறார் இதன் கலை நயத்தில் மயங்கிய கவர்னர் அலெக்சாந்தர். (நிதின்தேசாய்க்கு ஜே!)

பாரு மட்டும் மட்டமா? அவருடைய 'ஹவேலி'க்கு (பெரிய வீடு) மூன்று கோடிகள் என்றால், பாருவின் பிரத்யேக கண்ணாடி அறைக்கென்றே, 1.22 லட்சம் கலர் கண்ணாடித் துண்டுகள் உபயோகிக்கப்பட்டன. செட் போடப்பட்டது மழையில்லாத நவம்பர் - மார்ச் மாதங்களில்; ஆனால் இருமுறை அடித்த திடீர் மழையில் கலர் கண்ணாடியெல்லாம் நிறம் மாற, மறுபடியும் பெயிண்ட்டடித்ததில் இரட்டிப்பு செலவு!

ஆறு செட்டுகளுக்கு இருபது கோடிகள் என்றால் ஆறவேயில்லை! இரண்டாயிரத்து ஐந்நூறு லைட்டுகள், எழுநூறு லைட்மென், நாற்பத்து இரண்டு ஜெனரேட்டர்கள் (சாதாரணமாக இரண்டே ஜாஸ்தி! இதனால் மும்பைத் திருமணங்களெல்லாம் ஜெனரேட்டரில்லாமல் கஷ்டப்பட்டனவாம்), இருநூற்று அறுபது ஷூட்டிங் ஷிஃப்டுகள், இரண்டரை வருட ஷூட்டிங்... ஹம்ம ஹம்ம ஹம்மா தான்!

சோதனைகளோ... அம்மம்மா! செட்டுகள் மூன்று முறை தீப்பிடித்தன. ஒரு லைட்மேனும், டெக்னீஷியனும் மரணித்தனர்; இப்படத்தின் ப்ரொட்யூசரும் ஃபிலிம் ஃபைனான்சியருமான பரத்ஷா பதினாறு மாதங்கள் ஜெயிலிலும் ஆசுபத்திரியிலுமாக பரிதவித்தார். இவரிடமிருந்து ஏதாவது பணம் கிடைக்குமா என்று பன்சாலி பல நாட்கள் ஆஸ்பத்திரி வாயிலில் தவம் கிடந்திருக்கிறார். பணம் கொடுக்காவிட்டால் வேலை செய்ய மாட்டோம் என்று தொழில்நுட்பக் கலைஞர்கள் ஸ்ட்ரைக் செய்ய, நட்சத்திரங்களோ செய்வதறியாது விழித்திருக்கின்றனர்.

ஒன்பது பாடல்களுக்கு இசையமைத்திருக்கும் இஸ்மாயில் தர்பாருடன் இயக்குனருக்கு அடிக்கடி தகராறு வர, ஐந்து முறை வெளிநடப்பு செய்தவர். ஆறாவது முறை திரும்பவில்லை. இளைஞர் மாண்ட்டியை வைத்துக் கொண்டு சமாளித்திருக்கிறார்கள். "போலோரே..." பாட்டில், கவிஞர் நுஸ்ரத் ஃபாதேர், "ரங் பிரங்கி சுனரியா" என்று எழுதி விட்டார். படத்தில் உபயோகித்ததோ சிவப்பு துப்பட்டா. (ரங்பிரங்கி - கலர் கலரான.) ஒரு வருடத்திற்கு, மாற்று வரிகளைத் தேடிக் கஷ்டப்பட்டவர், கடைசியில் மிக்ஸிங் எல்லாம் முடியும் தருவாயில் புதிய வரிகள் உதயமாக, மறுபடியும் அத்தனையையும் மாற்றி 'ஷூட்' பண்ணியதில் சில லட்சங்கள் ஸ்வாஹா!

இத்தனை சோதனைகளிலும் துவண்டு விடாமல் நிமிர்ந்து நின்ற இயக்குனரின் உறுதியைக் கண்டு, படத்தின் நாயக நாயகியரும், அவருக்கு முழுத் திருப்தி வரும் வரை முகம் சுளிக்காது ஒத்துழைத்திருக்கின்றனர்.

ஷாருக் முதலிலேயே முந்தைய தேவதாஸான திலீப்குமாரிடம் ஆசிபெற்றதுடன், பாத்திரத்தின் அணுகுமுறையையும கற்று வந்திருக்கிறார். தலையில் ஒரு குடம், இடுப்பில் மற்றொன்று, குடேறிக் கொண்டிருக்கும் எண்ணெய் விளக்கு கையிலேந்தி, ஒற்றைக் காலில், முள் குத்துவது போன்ற வலியைப் பாராட்டாமல் பல மணி நேரம் நின்றிருக்கிறார் ஐஸ்வர்யா; புயலின் நடுவே, அணையா விளக்கை ஏந்தி நிற்கும் அபூர்வக் காட்சி மற்றொரு அற்புதம்.

முப்பத்தாறு கிலோ எடையுள்ள காக்ராவைப் போட்டுக் கொண்டு, ஆட முடியாமல் தடுமாறியிருக்கிறார் மாதுரி; இவர் சுற்றுவது நின்றாலும் அது சுழன்று கொண்டேயிருக்குமாம்; நடன ஆசிரியர் வேறு பண்டிட் பிர்ஜு மகராஜ்! கடைசியில் பதினாறு கிலோவில் வேறு காக்ரா தைத்து, படமாக்கியிருக்கிறார்கள். லட்சங்களை விழுங்கிய

"என்ன... லாட்டரிச் சீட்டு வெடியா?"

"ஆமா... அதிர்ஷ்டம் இருந்தா வெடிக்கும்."

— வெ. செயப்பிரகாசர்



முதல் காக்ரா இனி மியூசியம் பொருள்தான்; இந்தப் படத்தின் ஷூட்டிங் ஆரம்பிப்பதற்குள், மாதுரிக்கு திருமணமாகி விட்டதால், சற்று கவலைப்பட்டிருக்கிறார் பன்சாலி! ஆனால் மாதுரி, சந்திரமுகியாகவே மாறி விட்டதில் பூரணதிருப்தியாம்.

ஆடை விஷயத்திலும் படம் சோடை போகலாகாதென்று உலகப் புகழ்பெற்ற இந்திய டிசைனர்கள் அபுஜானியும் சந்தீப் கோஸ்லாவும் இராப்பகலாக உழைத்து, உடைகளை வடிவமைத்திருக்கின்றனர். அந்தக் காலத்தில், ஆக்ஸ்ஃபர்டில் படித்தவர்கள் என்ன உடை அணிந்திருப்பார்கள் என்பதையறிய லண்டனை முற்றுகையிட்டிருக்கிறார்கள். சொந்த மண்ணில் அணிய சிக்கன் குர்தாவும், வேட்டியும் (பஞ்சக்கச்சம்) உயர்ரக பருத்தியில்!

மாதுரியின் உடைகளின் குறைந்தபட்ச விலை பதினைந்து லட்சம்; பனாரஸ் பட்டு, ஜர்தோஸி என்ற பளபளப்பு ரகங்கள் ஒரு புறம், பெருமைமிக்க பெங்கால் காட்டன்கள் மறுபுறம்!

டிசைனர் நீதா லல்லா, பன்சாலியுடன் சென்று கொல்கத்தாவிலிருந்து அறுநூறு புடைவைகள் வாங்கி வந்து, ஐஸ்வர்யாவுக்காக 'மிக்ஸ் அண்ட் மாட்ச்' செய்து, அவரை அழகும் கம்பீரமுமிக்க வங்காளிப் பெண்ணாகவே மாற்றியிருக்கிறார். ஒவ்வொரு புடைவையும், பொம்மைக்கு சுற்றவே மூன்று மணி நேரம் பிடிக்குமாம். ரேஜா ஷரீஃபியும் ஐஸ்வர்யாவுக்கும், சுன்னிலாலுக்கும் உடைகளைத் தயாரித்திருக்கிறார். சுன்னிலாலுக்கு பளபள பொத்தான்கள் கூடிய கலர் ஷெர்வானி!

ஆயிரம் பிரிண்ட் போட்டிருக்கிறார்கள்; இசை உரிமைகளை பன்னிரண்டரை கோடிகளுக்கும்; ஸாட்டிலைட் உரிமைகளை ஏழு கோடிகளுக்கும், ஓவர்சீஸ் உரிமைகளைப் பத்து கோடிகளுக்கும் விற்றிருக்கிறார்கள்.

எல்லாம் சரி... படம் இங்கே எடுபடுமா? 'டைம்' இதழின் சினிமா விமர்சகரான ரிச்சர்ட் காலிஸ், இண்டர்நேஷனல் திரைப்பட கிரிட்டிக்குகளை தேவதாஸால் அசைக்க முடியவில்லை என்கிறாரே? கடைசிவரை உட்கார்ந்து படம் பார்த்தவர் தாம் ஒருவர்தான் என்றிருக்கிறாரே...? அதனாலென்ன? அங்கே படுத்தாலும் இங்கே நிமிர்ந்து நின்று விட்டுப் போகட்டும்... இன்னொரு ஃப்ளாப்பை பாலிவுட்டால் தாங்கமுடியாதுங்க!

— ஜே.ஆர்.

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

லல்லுவின் லொள்ளு

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுவில் கையெழுத்து போடும் முன்பு, "5...4...3...2...1... இதோ புறப்பட்டு விட்டேன்" என்று ராக்கெட் விண்ணில் ஏவப்படும் பாணியில் கூறிவிட்டு கையெழுதிட்டார் அப்துல்கலாம். நம்ம பீகார் லாலு பிரசாத் யாதவுக்கு இப்படியொரு வாய்ப்பு கிடைத்திருந்தால் அவர் என்ன சொல்லி கையெழுத்திட்டிருப்பார்.

தலைசிறந்த இரண்டு தமாஷ் கற்பனை பேச்சுக்குத் தலா நாலு கிராம் தங்கம். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

புன்னகைப் போட்டி - 20 என்று குறிப்பிட்டு தமாஷ் பேச்சை எழுதி, முகவரியைக் குறிப்பிடுங்கள். தபால் உறை அல்லது தபால் கார்டில், கீழே உள்ள கூப்பனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள்.

கடைசி தேதி : 8.7.2002

ஆசிரியர், கல்கி,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

பாலகுமாரன்



இன்னும் நான்கு வருடங்கள் போயின. தந்தை வாழ்ந்த இடத்திலேயே ராதாகிருஷ்ணன் ரேவதியைத் திருமணம் செய்து குடித்தனம் வைத்துக் கொஞ்சிக் குலாவி குழந்தைகள் பெற்று நல்ல நிலையில் உயர்ந்தார். தேக்கு மரத்தில் செய்யப்பட்ட அந்த நிலைப்படியிலிருந்த மகாலட்சுமிக்கு அவர் இடைவிடாது பூஜை செய்தார். கீழே அந்த இடத்தை கந்தசாமியின் பிள்ளை வேறு ஒருவருக்கு லீஸ் விட, அந்த இடத்தின் ஆளுமையும் அவர்களுக்கு இல்லாது போயிற்று.

ராதாகிருஷ்ணன் மிகப் பெரிய எத்தனாக இருந்தார். இது எனக்குத்தான் சொந்தம். இதைக் காலி செய்யவே முடியாது என்று தீர்மானமாக பதில் சொன்னார்.

மேலே இருக்கிற ராதாகிருஷ்ணனை மட்டுமல்ல. கீழே இருக்கிற ஷண்முகக்கனி நாடாரையும், கந்தசாமி முதலியாரின் பேரன் யுத்தத்திற்கு அழைத்து உலுக்க வேண்டியிருந்தது.

அந்த யுத்தத்தின் முதல் படியாய் அவன் நாலு அடியாட்களைக் கொண்டு வந்து வீடு காண்பித்தான். அந்த அடி ஆட்கள் அந்த வேலையைச் செய்வதற்காக அவனிடம் பணம் பெற்றார்கள்.

"அவசரப்படாத. யாரு, என்னா, அவங்க எங்கெங்க போவாங்க. என்னென்ன தொடுப்பு அப்படியெல்லாம் பார்த்துதான் செய்ய முடியும். வெறுமனே போய் கத்தியைக் காட்டி மிரட்டினா, ஐயரு வேணா பயப்படுவாரு. ஷண்முகக்கனி நாடார் பளிச்சுனு சுட்டு கொன்னுடுவாரு. அதனால ரெண்டு பேரையும் ஒரு மாதிரி சமாளிக்கணும். ரெண்டு பேரையும் ஒரே மாதிரி கவுக்கணும். கொஞ்ச நாளாகும். ஒரு வருஷம் ஆகும். எங்களை வுட்டுடு அந்த வேலைக்கு என்று சொன்னார்கள். மிச்ச காசை வேலை முடிச்சு வாங்கிக்கறோம்" என்று கம்பீரமாய்ப் பேசினார்கள்.

கந்தசாமியின் முதலியாரின் பேரன் காத்துக் கிடந்தான்.

அந்த அடி ஆட்கள் ராதாகிருஷ்ணனிடம் பகடி பேச ஒரு நாள் மாலை போய் உட்கார்ந்தார்கள்.

"ஆறு லட்ச ரூபா பகடி கொடு.

6



சொந்த வீடு வாங்க வேண்டும் என்று சொன்னது அழுத்தமாய்ப் பதிந்தது.

சொந்த வீடு எங்கே வாங்கலாம் என்று யோசித்தார்.

அலுவலகத்தில் உள்ள மற்ற உதவியாளர்களோடு பேசினார்.

"ஜார்ஜ் டவுன்லயே புதுசா பிளாட்டெல்லாம் கட்டறாங்க ஸார்"

"நோ, ஜார்ஜ் டவுன் இனிமே வாழறதுக்கு வசதியான இடமே இல்லை. இன்னும் கும்பலா ஆகப் போகுது. இப்பவே சாக்கடையெல்லாம் அடிக்கடி அடைச்சுக்குது. எல்லா இடமும் கெட்டுப் போச்சு. மறுபடியும்

மனம் உருகுதே...

நான் போறேன்'' என்று ராதாகிருஷ்ணன் பேசினார்.

அது மிக அதிகம் என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

கீழே ஷண்முகக்கனி நாடார் "பகடியாவது மகுடியாவது. இது எனக்குச் சொந்தமான இடம். வெளியே போங்கடா'' என்று உரக்கக் கத்தினார்.

ராதாகிருஷ்ணனை நோக்கி, "இனி எங்கயும் போகாதிங்க. அந்த இடம் உங்களுக்குச் சொந்தம்" என்று சொன்னார்.

ராதாகிருஷ்ணனுக்கு ஷண்முகக்கனி நாடாரோடு நல்ல ஸ்நேகம் ஏற்பட்டது. ஆனாலும் தொடர்ந்து எவ்வளவு நாள் போராட முடியும் என்கிற எண்ணமும் இருந்தது. அதற்கேற்றாற்போல் மைத்துனி இரு மணம் முடிந்து திரும்பி வந்ததும் மனைவி

நோண்டி சாக்கடை போடணும்னா பல கோடி ரூபாய் செலவாகும். அரசாங்கம் பண்ணும்னு நம்பிக்கையில்லை. வீடுன்னா இனிமே தெற்குப் பக்கம்தான் போகணும்."

"பெரம்பூர் போயிடுங்க ஸார்."

"இல்லை. பெரம்பூர் பிடிக்கலை. சிம்ஸன் கம்பெனி வந்துடுச்சு ஸார். அதனால தான். ஒர்க்கர்ஸ் ஏரியாவா இருக்கு. இன்னும் பாஷ் ஏரியாவா வேணும்."

"ஸார்... அடையார் பக்கம் போயிட்டா?"

"அநியாயமா விலை சொல்றாங்க ஸார்."

"அடையார்லேர்ந்து பெசன்ட் நகர்னு ஒண்ணு போறது ஸார். புதுசு புதுசா வீடு

கட்றாங்க."

"ரொம்ப கடல் மணல்யா. உப்பு கரிக்குது கடல் காத்து. ஜன்னலெல்லாம் அரிச்சுப் போறது. கொஞ்சம் தோப்பும் தொறவுமா இருக்கற வீடு, ரிடையர்ட் ஆயிட்டா நன்னா இருக்கற வீடா பார்க்கணும்னு நினைச்சுண்டிருக்கேன்."

"தாம்பரம் போயிட்டீங்கன்னா."

"போயிட்டு வர வேணாமாய்யா. தினம் தாம்பரத்துலேர்ந்து இங்க வரது என்ன அரை நாள் ஆகுமே."

"எலக்ட்ரிக் டிரெயின் இருக்கு ஸார்."

"நாப்பத்தஞ்சு நிமிஷம், அம்பது நிமிஷம் ஆறது. வேண்டாம்."

"கோடம்பாக்கம்தாண்டி விருகம்பாக்கம்னு ஒரு இடம்."

"இல்லை ஸார். அது நம்ம இடமில்லை. அந்த ஒரேயொரு பிரிட்ஜ் 'எப்போ பார்த்தாலும் டிராஃபிக் ஜாம். கோடம்பாக்கம் மழை பெஞ்சா ரொம்ப சேறாயிடறது."

"ஸார், படப்பை பக்கத்துல ஒரு இடம் இருக்கு. ரயில்வே ஸ்டேஷன்லேர்ந்து உள்ளடங்க. அதைப் பார்க்கறீங்களா?"

"உள்ளன்னா எவ்ளோ தூரம்?"

"நாலு கிலோமீட்டர்."

"அங்கேருந்து எப்படியா டிரெயினுக்கு வரது?"

"சைக்கிள்ல வரலாம். ஸ்கூட்டர்ல வரலாம். ஸ்கூட்டரை ஸ்டாண்டுல வச்சுட்டு டிரெயின் ஏறி ஆபீஸுக்கு வந்துடலாம். பெருங்களத்தூர் இறங்கி ஸ்டேஷன்ல வண்டி எடுத்துப் போயிடலாம். ஒரு மாசத்துக்கு அம்பது ரூபாதான் ஸார் சார்ஜ். கூட பத்து ரூபா வைச்சா அழகா துடைச்சே வைச்சிருப்பான்!"

"எவ்ளோ இடம் இருக்கு?"

"ஏகப்பட்ட இடம் இருக்கு ஸார்."

"அங்க மழை சேறு வராதா?"

"இல்லை ஸார். தண்ணி நல்லாயிருக்கும். அத்தனை சேறு வராது. நீங்க சொன்னா மாதிரி நல்ல நெல்வயல் பூமி. என்னா செடி வச்சாலும் குப்புனு வளருது. பார்த்துட்டு வருவோமா."

இரண்டு நண்பர்களை அழைத்துக்கொண்டு ஸ்டேஷன் இறங்கி அங்கிருந்து ஆட்டோ ரிக்ஷா பிடித்து உள்ளுக்குள் போய் நிலங்களைப் பார்வையிட்டார்.

பல புல் மேடுகளுக்கு எல்லைக் கற்கள் நடப்பட்டு சர்வே எண் தரப்பட்டிருந்தது. ஒரு கிரவுண்ட் பத்தாயிரம் என்று சொல்லப்பட்டது.

அவர் பத்து கிரவுண்ட் வாங்குகிறேன் என்று சொன்னதும் தரகர்கள் போட்டி போட்டுக்கொண்டு அவருக்கு இடங்கள் காண்பித்தார்கள்.

ஒன்பது கிரவுண்ட் இருக்கின்ற ஓர் இடத்தை அவர் பார்த்தார். அதிலிருந்த ஒரு கட்டடம் இடிக்கப்பட்டு, அந்த வீட்டின் தொன்னோலைக் கீற்றுகளைத் தடுப்பாக மாற்றி ஓரிடத்தில் சாய்த்து வைத்திருந்தனர்.

"என்ன அது?" என்று கேட்டார்.

"சும்மா இடம் பார்த்துக்கடான்னு சொன்னாக்க வீடு கட்டிக்கிட்டு கூரை போட்டுக்கிட்டான். புடிச்சு வெளிய தள்ளி வீட்டை இடிச்சுட்டேன். செலவாகிப் போச்சு ஸார்."

நிலத்தின் சொந்தக்காரன் வேட்டியை மடித்துக்கொண்டு பேசினான்.

ராதாகிருஷ்ணன் ரேவதியை அழைத்துக் கொண்டு போய் நிலம் காண்பித்த பின், தான் பேசிய ஒரே மாதத்தில் தன் புருஷன் வேலையில் இறங்குவதைப் பார்த்து ரேவதி சந்தோஷமானாள்.

"இவ்ளோ நிலம் வேணுமா?"

"உனக்குப் புரியலை. வாங்கிப் போட்டுட்டு மூணு வருஷம் சும்மா விட்டுருவோம். சுத்தி வேலி போட்டுருவோம். பேர் பாதிய வித்துட்டு அந்த வித்த காசுல வீடு கட்டுவோம்."

"உங்களுக்குப் போயிட்டு வரதுல சிரமமில்லை?"

"கொஞ்சம் சிரமம்தான். அதைப் பார்த்தா நடக்காது."

"குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் இந்தப் பக்கம். சின்ன சின்னதா பள்ளிக்கூடம் வந்

"பணியாளர் நலனை உத்தேசித்து எங்க ஆபீஸ்ல புதுமையா நிறைய செய்யறாங்க..."

"என்ன, சலவை சலுகையா, டீ சப்ளையா...?"

"சே, அதுலல்லாம் என்ன புதுமை? நாங்க காண்ற கனவுகளுக்கு உடனுக்குடன் பலன் சொல்ல ஆபீஸ்லே ஜோசியரையே நியமிச்சிருக்காங்கன்னா பார்த்துக்க!"

- சீர்காழி வி. ரேவதி


துடுத்து. பசங்களுக்கு நன்னா சொல்லித் தரா."

"இந்த வருஷமே வீடு மாத்திடுவேளா...?"

"இல்லை. எவ்வளவு தூரம் இந்த ஜார்ஜ் டவுன்லயே தாக்கு பிடிக்க முடியுமோ தாக்குப் பிடிப்போம். முடியவே முடியாது. காலி பண்ணித்தான் ஆகணும்கறபோது படப்பை போற யோசனை பண்ணுவோம். மயிலாப்பூர்லயே ஒரு வாடகை வீடு பார்த்துண்டா முடியாதா?"

"பார்ப்போம். பிரச்னை வர நேரத்துல அதைப் பத்தி யோசனை பண்ணுவோம்."

"அந்த ஐயரை சட்டரீதியா அசைக்க முடியாது; மிரட்டி அனுப்பலாம். மிரட்டி அனுப்பி நீ போய் மாடியில உட்கார்ந்துட்டா ஷண்முகக்கனி நாடாரை எதுனா பண்ணி துரத்திடலாம். மாடியில ஓட்டை போட்டு உள்ளுக்குள்ள இறங்கி மொத்த சமாசாரத்தையும் கலைச்சுப் போட்டோம்னா அவன் துண்டைக் காணோம், துணியைக் காணோம்னு ஓடிப் போயிடுவான்."



"ஐயரை மிரட்டிப் பணிய வைக்க முடியும்னு நினைக்கற? பதிலுக்கு ஐயரு மிரட்டினா? அந்தாள் பெரிய ரவுஸ் பார்ட்டிப்பா."

"எடுத்தவுடனேயே மிரட்டிட மாட்டேன். அவரு எங்க வேலை செய்யாருன்னு பார்த்து வைச்சிகிட்டிருக்கேன். அங்கே சில பேருக்கு துட்டு கொடுத்து அவரைக் கவுக்கற வழியைப் பார்க்கலாம்னு எனக்குத் தோணுது. அப்படி கவுக்கறதுக்கு ரெண்டு மூணு பேரைப் பார்த்து வைச்சிருக்கேன்."

"எப்போதான் முடிப்ப?"

"அதான் சொன்னேனே. அவசரப்பட்டா நடக்காது. மொள்ளதான் ஆவும்."

- வீட்டைக் காலி செய்ய வைக்கும் கட்டப் பஞ்சாயத்து பேசிற்று.

"நீ செய்வியா செய்ய மாட்டியான்னே எனக்குத் தெரியலையே."

"சரி. விடு. நீயே செய்துக்கோ."

கட்டப் பஞ்சாயத்து வேகமாய்ப் பின் வாங்கியது.

கந்தசாமி முதலியாரின் பேரன் வேறு வழியின்றி அவனைத் துரிதமாகச் செய்யச் சொன்னான். கூடுதலாகக் காசு கொடுத்தான்.

ராதாகிருஷ்ணன் அலுவலகத்தில் அவருக்கு எதிராய் விஷம் தூவப்பட்டது.

ஏற்றுமதி என்பது மிக அற்புதமான விஷயம். அதே சமயம் மிக கவனமாகச் செய்ய வேண்டிய விஷயம். இது அரசாங்கச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செய்ய வேண்டிய விஷயம் மட்டுமல்ல. வெளிநாட்டின் எதிர்பார்ப்பு மிக அதிகமாக இருக்கும். அதையும் அவர்கள் எதிர்பார்ப்பைவிட மிக உத்தமமாகச் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டின் மருந்துக் கம்பெனிகள் இவர்களிடமிருந்து பீங்கான் ஜாடிகளை வாங்கின. சில பீங்கான் ஜாடிகள் இடுப்புயர அளவு கூட இருக்கும். கண்ணாடிப் பாத்திரங்களில் வெய்யில் படுவதால் வெளிச்சம் ஊடுறுவுவதால் வெளிச்சம் சற்றும் ஊடுறுவாத கனமான சீதோஷ்ணத்தைப் பாதுகாக்கக் கூடிய ஜாடிகள் அவர்களுக்குத் தேவைப் பட்டன. கலவையை, சில நாட்கள், சில மாதங்கள் ஆடாமல், அசையாமல் வைக்கும் நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. மிகப் பெரிய அளவில் மருந்துக் கலவையை ஏற்பாடு செய்துகொண்டு, பிறகு, சிறிது சிறிதாக வேறு மருந்தில் கலக்குகிற வித்தையை அவர்கள் செய்து வந்தார்கள். குறிப்பாக திராட்சை ரசம் போன்றவை - புளிக்கப் புளிக்க இருமல் மருந்தில் அவற்றைச் சேர்க்க வேண்டியிருந்தது. இந்த விவரத்தையெல்லாம் அந்த வெளிநாட்டு கம்பெனி சொல்லி, உயரமும், அகலமும் திண்மையும் கொண்ட ஜாடிகளைக் கேட்டிருந்தது. வாய் குறுகிய ஜாடிகளும் தேவைப்பட்டன.

ஜாடிகள் செய்வதும், அவற்றின் தரத்தை நிர்ணயிப்பதும் பெரிய வேலையில்லை. அப்படி தரம் பார்த்துப் பிரித்த ஜாடிகளைக் கப்பலில் ஏற்றுவதற்கு முன்பு வைக்கோல் சுற்றி அட்டை வைத்து ஜாக்கிரதையாக ஏற்ற வேண்டியிருக்கிறதே அது ஒரு கலையாக இருந்தது.

கப்பலில் ஏற்றும்போது உள்ளே அடுக்கப்பட்ட ஜாடிகள் பெட்டிக்குள் சாயும் சப்தம் கேட்டால் வயிறு குலுங்கியது. இரண்டு பெட்டி இறங்கும்போது பெரும் வேதனை வந்தது. மறுபடியும் பெட்டியை உடைத்துப் பார்த்து உடைந்த ஜாடிகளை வைக்க வேண்டியிருந்தது. தனித்தனியாக ஒவ்வொரு ஜாடியாக உள்ளே ஏற்றலாம் என்றால்

நிறைய பேர் வேலை செய்து மூன்று நாட்கள் உழைத்தால்தான் ஓரளவு ஏற்றலாம். அப்படி ஏற்றுகிறபொழுது ராதாகிருஷ்ணன் நேரே போய்விடுவார். ஹார்பருக்குப் போவதற்கு முன்பு கிரேன் ஆபரேட்டரைப் பார்ப்பார்.

"இந்தா இருநூறு ரூபா வைச்சுக்கோ. எண்ணூறு ரூபா இறக்கி முடிச்சவுடனே தரேன்" என்று பேரம் பேசுவார்.


அவன் பூ இறக்குவது போல கிரேன் இழுக்கும் பெட்டியைக் கப்பலில் இறக்குவதற்கும் மிக நிதானமாகத் தூக்குவதற்கும் பெட்டியை ஆட்டாமல் அசையாமல் உயர எழுப்புவதற்கும் அவனுக்குச் சன்மானங்கள் தருவார்.

"உடைஞ்சிடுச்சு ஸார்!" என்று அவன் சொன்னால் எதுவும் செய்ய முடியாது.

ஜாடிகள் கப்பலுக்குள் போய் உட்காரும் வரை இன்ஷூரன்ஸ் கம்பெனி உத்தரவாதம் எடுத்துக் கொள்ளாது. கப்பல் நகர்ந்த பிறகே அது இன்ஷூரன்ஸ் கம்பெனியினுடைய வட்டத்திற்குள் வரும்.

"என்னால் லாபம்தான்!"

தற்போது நியூயார்க்கில் வசிக்கும் பிரபல எழுத்தாளரான சல்மான் ருஷ்டிக்கு, பிரிட்டனிலுள்ள பத்திரிகையாளர்களின் மீது கடுங் கோபமாம். இஸ்லாமிய பிற்போக்காளர்களால் சல்மானுக்கு ஏதும் ஆபத்து ஏற்படக் கூடாதென்பதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் அவருடைய பாதுகாப்புக்காக வருடத்துக்கு பதினோரு மில்லியன் பவுண்டுகள் செலவழிக்கிறதாம். பல பத்திரிகைகள் இந்தச் செலவு மிகக் கூடுதலானது என்று எதிர்ப்பு தெரிவிக்கவே, சல்மான் தாம் செலுத்தும் வருமான வரியைக் காட்டிலும் பிரிட்டிஷ் அரசு தன் பாதுகாப்பிற்காகச் செலவிடும் தொகை குறைவுதான் என்கிறார்.



'சண்டே எக்ஸ்பிரஸிலிருந்து'

- என். பங்கஜம்

ஒருமுறை மிகப் பெரிய பெட்டிகள் இங்கிலாந்துக்குப் பயணமாயின. ஜாடிக்கு நாலு பங்கு காசு அதிகம் இங்கிலாந்தில் கிடைத்தது. ஆறுமடங்கு காசு அமெரிக்காவில் கிடைத்தது. அமெரிக்கர்கள் சீனாவிலிருந்து ஜாடிகளை வாங்கினார்கள். ஆனால், இங்கிலாந்தில் மட்டும்தான் இந்திய ஜாடிகளை விரும்பிக் கேட்டார்கள்.

பெரிய சரக்கு முழுவதையும் ஏற்றி முடித்துவிட்டு மாதிரிக்கு இரண்டு பெட்டிகளைத் திறந்து பார்க்க ஒரு ஜாடிகூட உடையாமல் இருந்தது. ஒன்றுகூட உடையவில்லை என்று இன்ஷூரன்ஸ் கம்பெனி சான்றிதழ் கொடுக்க, அதையும் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்துவிட்டு முதலாளியிடம் போய் நெஞ்சு நிமிர்த்திக் கொண்டார்.

"நானா நேரா போய் நிக்கறேன். கிரேன் ஆப்ரேட்டருக்குக் காசு கொடுக்கறேன். அந்தக் காசு கொடுக்கலைன்னா சரியா வராது."

"எவ்ளோ கொடுக்கறீங்க?"

"இரண்டாயிரம் ரூபா." ராதாகிருஷ்ணன் சட்டென்று ஒரு பொய் சொன்னார்.

"அவ்ளோதானுங்களா? போறும் போங்க இவ்ளோ சரக்கு போகுது ரெண்டாயிரம் ரூபா ஒரு விஷயமா...!"

முதலாளிகள் அவரைப் பாராட்டினார்கள். ஆனால் வீடு காலி செய்யாதது எரிச்சலாய்த்தான் இருந்தது.

இரண்டாயிரம் ரூபாய் வவுச்சர் போட்டுக்கொண்டு ஆயிரம் ரூபாயை கிரேன் ஆப்பரேட்டருக்குக் கொடுத்து, ஆயிரம் ரூபாயைச் சுருட்டி பையில் வைத்துக் கொண்டார்.

"உனக்கு என்ன வேணும்" என்று மனைவியிடம் கொஞ்சினார்.

ரேவதி அவரை ஆதரிக்கவும் இல்லை. விலக்கவும் இல்லை.

"ஜாக்கிரதைப் பார்த்து, எங்கேயாவது ஏடாகூடம் ஆயிடப் போறது" என்று மெல்ல எச்சரித்தாள். பிறகு அவருடைய கொஞ்சலில் தன்னை மறந்து போனாள்.

(தொடரும்)


• வெற்றி விளக்கம்!

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை - 94.

? பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் என்ற பகுதியை மீட்க மத்திய அரசு இதுவரை எடுத்த நடவடிக்கைகள் எவையெவை? இம்முயற்சி தோல்வியடைய காரணங்கள் என்ன...?

! மீட்க நடவடிக்கை என்பது போராகத்தான் இருக்க முடியும். அதை என்றோ செய்திருக்க வேண்டும். இன்று அணு ஆயுதப் போரில்தான் முடியும். நமது எல்லைக்குள் இருக்கும் காஷ்மீர் மற்றும் இதர பகுதிகள் குறித்துத்தான் நாம் அதிகக் கவலை கொள்ள வேண்டும். அந்த எல்லைக்குள்ளும் ஊடுருவல் நடக்கிறது என்பதே கவலைக்குரியது; பாக்குடன் பேச்சு வார்த்தைக்குரியது.


• கல்யாண வேட்டை!

● ஆர். ஜேஸ்மின் ரமேஷ், மதுரை - 20.

? 'வீரப்பனைப் பிடிப்பது எனக்கு வெறி' என்கிறாரே தேவாரம்...?

நீங்கள் கேட்டவை - தராசு

! வீரப்பனைப் பிடிக்காவிட்டாலும் வெறி பிடித்திருக்கிறதே என்று சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்!

● எஸ். பாலசந்தர், திருவாரூர்.

? வருமான வரி வழக்கு நிலுவையில் உள்ளபோது லாலுவின் இரண்டாவது மகள் திருமணம் ஆடம்பரமாக மும்பையில் நடந்தது குறித்து...?


• மதிக்கலாம்!

! பர்னிசர் கடையிலிருந்து சோஃபா செட்டுகள்; விவசாய விளை நிலங்களிலிருந்து தானியம்; தோட்டங்களிலிருந்து காய்கறி, பழம் என்று குண்டர்படை வேட்டையாடி வந்திருக்கிறது. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்க muscle power போதும். வருமான வரி வழக்காவது, மண்ணாவது.

● க. சிவமணி, வண்ணாமடை.

? இந்தியா - பாகிஸ்தானிடையே போர் மூளும் சூழ்நிலையில் ஓர் இஸ்லாமியர் இந்திய ஜனாதிபதி ஆவதை விரும்புகிறீரா...?

! அவருடைய மகத்தான சிறப்புகளை மதிக்கலாம்; மதக் கண்ணோட்டத்தை மிதிக்கலாம்.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? ரௌடிகள் 'வீடு கட்டி அடித்து விடுவேன்' என்று கூறுகிறார்களே, அப்படியென்றால் என்ன அர்த்தம்?

! அதுவா..., சிலம்பாட்டத்துல வீடு கட்டுறதுன்னு ஒரு முறை இருக்கு. அதாவது நாலு திசையிலேயும் மடங்கி உட்கார்ந்து கம்பைச் சுழற்றி சுழற்றி அடிக்கணும். சிலம்பாட்டம் தெரியாதவங்க கூட இந்த 'வீடு கட்டி அடிக்கற' வார்த்தையைப் பிரயோகிக்கறதை மறக்கலை.

● ஆர்.பி. ஜெயச்சந்திரன், திருவெள்ளரை.

? ரணில் விக்ரம சிங்கேவின் இந்தியப் பயணம் சாதித்தது என்ன...?

மீண்டும் மேயர் தேர்தல் வீண் செலவுதானே?



* 'வீர' வெறி



* பயணப் பயன்!

! சில பொருளாதார - வர்த்தக ஒப்பந்தங்கள்; இந்திய ராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் சிறப்புப் பயிற்சி அளிக்க ஒப்பந்தம்.

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? பள்ளிகளின் வேலை நேரத்தை அதிகரித்து அரசு ஆணை பிறப்பித்திருப்பது சரிதானா...?

! அதான் கடைசி பீரியட் கம்பல்ஸரி இல்லைன்னு சொல்லி ஜகா வாங்கிட்டாங்களே!

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? இந்த நூற்றாண்டின் தலை சிறந்த இந்திய கிரிக்கெட் வீரர் விருதை யாருக்குக் கொடுப்பது பொருத்தம்...?

! இந்த நூற்றாண்டு இப்போதுதானே ஆரம்பித்திருக்கிறது! இப்போதைக்கு, சந்தேகமின்றி சச்சினானந்தாதான்!

● டி.ஆர். ஹலீமா ஹாஜா, பொதக்குடி □

? நடந்து முடிந்த மூன்று சட்டசபை இடைத் தேர்தல்களிலும் கிடைத்த வெற்றி நியாயமானது என்கிறாரே ஜெயலலிதா...?

! அப்படியானால் தேர்தல் அதிகாரியை அவர் பணிமாற்றம் செய்ய அவசியம் என்ன? அதை தேர்தல் கமிஷன் கடுமையாய் ஆட்சேபித்து, அம்மாற்றத்தைத் தடை செய்திருக்கிறது. 'சிறாகச் செயல்பட்ட அதிகாரியை மாற்ற அவசியமென்ன?' என்று தட்டிக் கேட்டு, அவ்வாறு மாற்ற வேண்டிய தருணமும் காரணமும் ஏற்படும்போது நாங்களே அரசுக்கு அறிவித்து விட்டு மாற்றம் செய்வோம்' என்று ஓங்கி குட்டியுமிருக்கிறது!

● டி. சுப்ரமணியன், மேலையூர்.

? அரசு அலுவலகங்களுக்கு எம்.பி, எம்.எல்.ஏக்கள் வந்தால் அதிகாரிகள் எழுந்து நின்று வரவேற்க வேண்டும் என்ற அரசின் திடீர் உத்தரவு குறித்து...?

! 'கட்சிக்காரர்கள் அரசு அலுவலகங்களின் வராந்தா பக்கம்கூட உலவக் கூடாது' என்ற அறிவுரை அன்று;
'அதிகாரிகள் எழுந்து நின்று (சல்யூட் அடித்து) வரவேற்க வேண்டும் என்ற உத்தரவு இன்று... Quo vadis?

● ஏ. முத்து, பாஸ்டின் நகர் ✱

? எட்டு மாதத்துக்குள் மீண்டும் சென்னை மேயர் தேர்தலால் தமிழக அரசுக்குப் பத்து கோடி ரூபாய் வீண் செலவுதானே?

! அதானே! முதல்வர்தான் இனி மேயரை நியமிப்பார் என்று சட்டத்தை மாற்றி, செலவை மிச்சம் பிடிப்பதோடு சசிகலாவையும் சந்தோஷப்படுத்தினால் ஆச்சு!

● கே.வி. ராமன்,
சென்னை - 73.

? புதுமைப்பித்தன், கு.ப. சேது அம்மாள் ஆகியோரின் எழுத்துக்கள் நாட்டுடைமையாக்கப்பட்டது குறித்து...?

! ஒருவரது எழுத்து நாட்டுடைமையாக்கப்படும்போது அந்த எழுத்து இலக்கியத் தரமான, உயர்ந்த எழுத்து என்ற மதிப்பை, அங்கீகாரத்தைப் பெறுகிறது. அத்தகைய எழுத்துக்கள் மட்டுமே நாட்டுடைமையாக்கப்பட வேண்டும். வறுமையில் வாடும் எழுத்தாளர் எனில், அவர் எழுத்தை நாட்டுடைமையாக்காமலே அரசு ஓர் உதவித் தொகை அளிக்கலாம்.

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க தூதரகம் தாக்கப்பட்டது குறித்து...?

! இப்போதும் பாகிஸ்தானை அமெரிக்காக்கள் கனம் தடவி கொஞ்சுகிறதே என்பதுதான் ஆச்சர்யம்.

● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21.

? ஜனாதிபதி தேர்தலுக்கு மனு தாக்கல் செய்ய எந்த நேரமும் நல்ல நேரம்தான் என்று அப்துல் கலாம் கூறியுள்ளாரே?

! இது இந்தியாவைப் பிடித்த நல்ல நேரம், போங்கள்!

● எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்.

? கள்ள வோட்டு, தேர்தல் வன்முறை, தேர்தல் மையத்தைக் கைப்பற்றுதல், தேர்தல் முடிந்து குதிரை வியாபாரம் என பல பிரச்னைகள் இருந்தும் ஜனநாயகம் இன்னும் இந்தியாவில் தழைப்பதற்குக் காரணம் என்ன...?

! இங்கு ஜனநாயகம் இன்னும் நிலவுகிறது. தழைப்பதாகக் கூற முடியாது. காளான்களால் பசுமரம் சாகாவிட்டாலும் ஆரோக்கியம் கெடத்தான் செய்யும்.

□ ரூ 100 பரிசு பெறுபவர்
டி.ஆர். ஹலீமா ஹாஜா,
213, மெயின் ரோடு,
பொதக்குடி 614 103

✱ ரூ 50 பரிசு பெறுபவர்:
ஏ. முத்து,
ஜோ இல்லம், பாஸ்டின் நகர்,
மதுரை 625 016

அது மட்டும் முடியாது

சில நாட்களுக்கு முன் 'கல்கி' எடிட்டோரியலுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. பேசியவர்: நித்யா! பேரைச் சொன்னாலும் ஊரைச் சொல்லக் கூடாது என்பதால், ஸாரி.

"ஆ-ஏ- ஆதி தியரி- படிக்கிறேங்க... நீங்க என்னதான் எழுதினாலும், ஆண்களோட மனோபாவத்தை மாத்தவே முடியாது! ஏன்னா! இண்டியன் மென் கேன் நாட் லவ் விமன். தே கேன் ஒன்லி லஸ்ட் விமன். அவங்க திருந்தவே மாட்டாங்க. பை தி பை, ஐயாம் எ டிவோர்ஸி" என்று பட்டென்று ஃபோனை வைத்துவிட்டார்.

நொந்து போயிருக்கும் நித்யா போன்ற பெண்களை, இந்த ஆண்கள் கொஞ்சமாவது புரிந்து கொள்ளவும் அப்படிப் புரிந்து கொள்ள முயற்சி செய்யும் ஆண்களைப் பெண்கள் நியாயமாய்ப் புரிந்து கொள்ளவும் இந்தத் தொடர் அரை அங்குலமாவது உதவினால், கூட மகிழ்ச்சிதான். எனவே, முயற்சியில் சற்றும் மனந்தளராத, தமிழக வாக்காளர் வழியில்...

இந்த வாரம் ஒபனிங்கே கொஞ்சம் சீரியஸாகி விட்டதால், அலசிக் காயப் போடப் போகும் விஷயமும் சற்றே கண்ணீர் சொட்டும்...

இதே டெம்போவை மெயின்டைன் பண்ணிக்கிட்டீங்கன்னா, சீதா - ராகவன் வசிக்கும் ஃபிளாட்டில் நுழையலாம்.

நோகாமல் ஒரு நோட்டம் விட்டாலே, அந்த டீலக்ஸ் ஃபிளாட்டின் வளமை தெரியும். அப்படியே எட்டிப் பாருங்க... ஃபாரின் கார் தெரியுதா...!

சீதாதான் மேட்டரை ஓப்பன் செய்தாள்.

"அப்பா... எனக்கு இவரோட வெறுத்துப் போச்சுப்பா... நான் உங்கக் கூடவே ஊருக்கு வந்துடறேன்" எதிரே கிராமத்துப் பண்ணையார் கெட்டப்பில் உட்கார்ந்திருந்த அப்பாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"ஏந்தாயீ... என்ன வார்த்தை பேசுறே... மூளை கீளை கலங்கிடுச்சா! முனி கினி அடிச்சுடுச்சா...?"

"இல்லை. அவரு முன்னே மாதிரி இல்லை. ஆளே மாறிட்டாரு..." சீதா அழுகையோடு குறை சொல்ல... இப்போது தூக்கி வாரிப் போடப்படுவது ராகவன் டர்ன்...

"ஏய்... என்னாச்சு உனக்கு?"

"மாம்பலம் வீட்டுலே குடியிருந்தபோது எவ்வளவு சந்தோஷமா இருந்தோம்?"


ராகவனுக்கு 'பக்' என்று சிரிப்பு வந்தது.

சீதாவும் ராகவனும் குடியிருந்த மாம்பலம் வீடு. ஸாரி அது வீடே இல்லை. சிங்கிள் அறை, சிரமக் குடித்தனம்... கரி ஏறிய ஜன்னல். அதற்குக் கீழே எப்போதும் சிமெண்ணெய் பற்றாக்குறை கொண்ட நூதன் ஸ்டவ், பத்துப் பாத்திரங்கள் (எண்ணிக்கையே அவ்வளவுதான்), தேர்தல் அன்பளிப்பாகத் தரப்பட்ட பிளாஸ்டிக் குடம், ஒரு டேபிள் ஃபேன், ஒரு டிரங் பெட்டி, ஒரு பிள்ளையார் படம்.. உற்றுப் பார்த்தால் எல்லா பொருட்களின் மீதும் சிவப்பாக ஒரு கோடு தெரியும். வறுமையின் நிறம் சிவப்பு! சில சமயம் ராகவன் கையில் நூறு, இருநூறு என பணம் புரளும். அதை எப்படியெல்லாம் செலவு செய்யலாம் என்று முழு நீள பட்ஜெட் தயாரிப்பார்கள். மாம்பலம்

• பெண்களைப் போற்றுங்கள். நம் மண்ணுலக வாழ்வில் விண்ணுலக ரோஜா மலர்களைப் பின்னிப்பிணைப்பவர்கள் அவர்கள் தான்!

- யொஹன் ஃப்ரீட்ரிஷ்ஷில்லர்
தகவல் : பாற்கடல் வேந்தன்

ஆதாம், ஏவாள் - ஆதி தியரி - 7



முழுக்க ஏறி இறங்கி, மளிகை சாமான், ஜாக்கெட் பிட்டு, ராகவனுக்கு புது செருப்பு என வாங்கிக்கொண்டு, கணபதி விலாஸில் பாஸந்தி, ரவா தோசை சாப்பிட்டு, மிச்ச முள்ள ஐம்பது காசை, நாகாத்தம்மன் உண்டியலில் போட்டுவிட்டு வருவார்கள்.

"ஐமாய்ச்சாச்சே... நாளைக்கு பஸ்ஸுக்குக் காசு...?"

"ஐம்பது ரூபாயை வீட்டிலே வைச்சுட்டு தானே வந்தேன்?" என்று அவன் ஜம்ப மடிக்க, சங்க நிதி, பதும நிதி, எல்லாம் சேர்ந்து கிடைத்த மாதிரி குதூகலிப்பாள் கீதா!

"சுவாமி, என்னுடைய பக்தை மாம்பலம் கீதா, அன்புடன் சேர்த்த ஐம்பது காசைப் பெற்றுக் கொண்டு, ஐம்பது லட்சத்துக்கு ரசீது அனுப்பி வைக்கச் சொன்னேனே! அனுப்பியாயிற்றா?" என்று நாகாத்தம்மன், சர்வேஸ்வரனிடம் கேட்க, உசிலம்பட்டியிலிருந்து கனடாவுக்குக் கனவு காட்சி விரியுமே அது மாதிரி 'கட்' பண்ணினா, பளபளா டீலக்ஸ் ஃபிளாட்! ராகவன் தொழிலதிபராகியிருக்க, டிபியர்ஸ் வைரத்தோடு அணிந்திருக்கிறாள் கீதா.

ஆனால் இப்போதைய கீதாவின் வாக்கு மூலத்தின்படி, அவள் சந்தோஷமாக இல்லை என்ற விஷயமே ராகவனுக்கு அதிர்ச்சி தருகிறது.

"என்ன தாயி பேசறே? நல்ல வசதியா தானே இருக்கீங்க?"– பெருசுக்குக் கூட திகைப்புதான்!

"வசதி இருக்குப்பா... ஆனா சந்தோஷமில்லை. அவர் என்னைக் கண்டுக்கிறதேயில்லை... மாம்பலம் வீட்டுலே இருந்தப்ப, 'நீ சாப்பிட்டியா...?'னு பாசத்தோட கேட்பாரு... இப்ப என்னஏதுன்னு விசாரிக்கிறதே இல்லை!"

"டாமிட்! அப்போ பாதி நாள் பட்டினியா கிடப்போம். அதான் சாப்பிட்டாளான்னு கேட்டுப்பேன். இப்பதான் ஐயாயிரம் ரூபாய்க்கு மளிகை சாமானே வாங்கறோமே!"

"அப்பல்லாம் கையிலே நூறு ரூபாய்

அனுராதா சேகர்

ஈ மெயில், ஹீ மெயில், ஷீ மெயில்!

நடுத்தர வயது தம்பதி ஜெனட்டும் வில்சனும். இரவு உணவைச் சாப்பிட்ட பிறகு வில்சன் பால்கனிக்குச் சென்று ஆகாயத்தைப் பார்ப்பதில் தன் பொழுதைச் சற்று நேரம் செல விடுவது வழக்கம். லண் டனில் வசித்து வந்த ஜெனட் அமெரிக் காவில் வசித்து வந்த தமது பள்ளித் தோழனுடன் ஈ-மெயிலில் அடிக்கடி தொடர்பு கொண்டது அவருக்குத் தெரி யாது. ''இளவயது தோழன், இனி அவனை நேரடியாக சந்திக் கும் வாய்ப்பு என்பதே மிக அரி தாகத்தான் இருக்கப் போகிறது, அவன் ஒரு சரியான வாயாடி'' ஆகிய பல காரணங்களால் ஜெனட் அவனுடன் நடையில் லாமல் ஈ-மெயிலில் தொடர்பு



கொண்டாள். அவனும் உடனுக் குடன் அவளுக்கு பதில் எழுது வான். ஈ-மெயில் மூலமாகத் தான்.

ஒரு நாள் தனது சங்கேத வார்த்தையைக் கணவன் கேட் டதும் தயங்காமல் அதை வெளிப்படுத்தினாள். அதைப் பயன்படுத்திய கணவன் 'சமீ பத்தில் அழித்த ஈமெயில்கள்' (Recently Deleted E-Mails) என்ற பிரிவை க்ளிக் செய்ய, தன் மனைவி அன்று தன் பள்ளித் தோழனுக்கு அனுப்பிய கடிதம் அவர் பார்வைக்கு வந்தது.

இவ்வளவு சரளமாக, நகைச் சுவையாகத் தன் மனைவியால் பேச முடியுமா? தன்னிடம் ஏன் அவள் அப்படி கலகலப்பாகப் பேசியதில்லை? என்னிடம் பகிர்ந்து கொள்ளாத பல விஷ யங்களை இவள் எங்கோ இருக் கும் இவனுக்கு எழுதுகிறாளே'' — இப்படி விதவிதமாக யோசிக்க, அவர்கள் மண வாழ்வில் விரிசலும், முறிவும் ஏற்பட்டது.

அமெரிக்காவில் விவாகரத்து வழக்குகளில் ஈ-மெயில் கடிதங் களையும் கூடுதல் சாட்சியாக நீதிமன்றங்கள் அனுமதிக்கத் தொடங்கி விட்டன.

— குல்ஜா

இருந்தாலும், அதை எப்படிச் செலவு செய் யறதுன்னு இரண்டு பேரும் சேர்ந்துதான் முடிவெடுப்போம். இப்ப என்கிட்டே எதையும் டிஸ்கஸ் பண்றதில்லை."

''ஆமாண்டீ... அப்ப தரித்திரம் பிடுங்கிச்சு... எண்ணி எண்ணி செலவு பண்ணினேன். இப்ப என் இஷ்டத்துக்கு வாங்கறேன். தாராளமா செலவழிக்கிறேன். இது தப்பா...?"

"வீட்டை விட்டு வெளியே போனா, வந்து சேர்ற வரைக்கும் என்னென்லாம் நடந் ததுன்னு அவரும் சொல்வாரு. நானும் சொல் வேன். இப்ப, என்கூட பேசறதேயில்லை."

"ஏன் பொய் சொல்றே... இப்ப கூட பேசிக்கிட்டுதானே இருக்கேன்?"

இதாவின் பிரச்னை புரிந்துவிட்டதா...? பு...பு... அதாவது புருஷனின் புறக்கணிப்பு!

மாம்பலம் வீட்டில் இருந்தபோது, பணம் மட்டுமே பிரச்னையாக இருந்தது. பணம் வந்தால் சந்தோஷமாகவும், பணம் இல்லா விட்டால் அதைத் தேடும் முயற்சியில் ஒற்று மையாகவும், இணைந்தே செயல்பட்டனர்.

ஆனால் பணம் அளவுக்கு மீறி வந்ததும், அவர்களை இதுவரை இணைத்து வந்த அன்னியோன்யச் சரடு அவிழ்ந்து விட, மேலே... எப்படித் தொடருவது எனத் தெரி யாமல் தாம்பத்தியம் திகைத்து நின்றுவிட்டது.

ஆகவே மதிப்புக்குரிய ஆதாம்களே, கார், ஏ.ஸி, வசீகரமான பேங்க் பாலன்ஸ் போன்ற பம்பாய் மிட்டாய் சமாசாரங்கள் எல்லாம் ஓர் அளவுக்குத்தான். அதைவிட பெரும்பான்மையான ஏவாள்கள் பிரியப் படுவது 'கேரிங் அண்ட் ஷேரிங்' கணவ னைத்தான்!

"பணத் தேவையைவிட, மனத் தேவை, அதாவது இமோஷனல் சப்போர்ட் எந்தப் பொண்ணுக்கும் மிகவும் அவசியம். அடிச்சுப் புடிச்சு சண்டைப் போட்டால்கூட பெண்கள் தாங்கிக் கொள்வார்கள்... ஆனால் புறக்கணிக்கப்பட்டால்.... அந்த நிராகரிப்பு அவர்களை நிரந்தரமாகக் காயப்படுத்தி விடும்!'' என்று மாரேஜ் கவுன்செலர்கள் சொல்வதில் நூறு சதவிகிதம் உண்மை இருக் கத்தான் செய்கிறது.

"ஹலோ, எப்பவும் கல்யாணமானவங்க பற்றியே எழுதறீங்களே. எங்க லவ் மேட்டர் பற்றியும் எழுதுங்க... முக்கியமா ஏப்பர் பேண்ட் விஷயம்" என்று நினைவுபடுத்து கிறார் ராகுல்!

அதுவரைக்கும் உங்க பிரிய காதலி ரோகிணிக்கு 'ஸாரி..' கார்டு அனுப்பி சமா தான முயற்சியில் இறங்குங்க ராகுல்!



"கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில் விளம்பரம் செய்ய

ரூ. 1250/- மட்டுமே.

செய்து பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

சைனஸ், தும்மல், ஆஸ்த்மா

பலன் இல்லையேல் பணம் திரும்ப பெறும் சிகிச்சை

எந்த மருந்துக்கும் கட்டுப்படாத பல வருட ஆஸ்த்மா, தும்மல், தூசி அலர்ஜி, மூக்கில் சதை வளர்ச்சி போன்ற தொந்தரவுகளுக்கு உத்திரவாத சிகிச்சை முதல் 3 மூலிகை கேப்சூல் எடுத்தவுடன் நிவாரணம் கிடைக்கிறது.

வருடக்கணக்காக தும்மலுக்கான மாத்திரை போடுபவர்கள், மூக்கில் சதைவளர்ச்சிக்காக ஆபரேஷன் செய்ய காத்திருப்போர், மூச்சிரைப்புக்காக ஊசி மருந்து போட்டுக் கொள்வோர் நிரந்தர பலன் பெற உத்திரவாதம் தருகிறோம்.

சாம்பிள் மருந்து இலவசமாய் பெற நோயாளி நேரில் வரவும். வெளியூரில் உள்ள அன்பர்கள் கடிதம், போன் மூலம் Dr. ஜான் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

மற்றும் சர்க்கரை நோய், முடக்குவாதம், உடல் எடை கூட, குறைய, தாம்பத்ய ஆர்வக் குறைவு, சிறுநீரக பிரச்சனைகளுக்கு சிறப்பு சிகிச்சை தரப்படும்.

இயற்கை மூலிகை மையம்

178, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10
(அபிராமி தியேட்டர் அடுத்து
கோதண்டபாணி திருமண மண்டபம் அருகில்),
போன்: 6481971 செல்: 98401 35626.

S.S.MEDIAS

மாங்கல்யம் மேரேஜ் மேட்சிங் சென்டரில்

திருமண தகவல் புரட்சி!

உங்கள் வீட்டில் மேள, தாளத்தோடு கல்யாணம் காணும் கனவில் இருக்கும் கன்னியருக்கோ, காளையருக்கோ நல்லதொரு இல்லற ஜோடியை தேடித்தரும் பொறுப்பை உங்களின் 'மாங்கல்யம்' ஏற்றுக் கொள்கிறது.

உடனே வரன் தேடுபவர்கள், நீண்ட நாட்களாக திருமணம் ஆகாதவர்கள், தங்களுக்குப் பொருத்தமான வரனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமா ? உங்களுக்கு உதவ 'மாங்கல்யம்' தயாராக இருக்கிறது.

மதம், இனம், உட்பிரிவு, கோத்திரம், உயரம், கல்வித் தகுதி, வேலை, வேலை பார்க்குமிடம், வயது வரம்பு இவற்றுடன் தினம், கணம், மாகேந்திரம், ஸ்த்ரீ தீர்க்கம், யோனி, ராசி, ராசி அதிபதி, வசியம், ரஜ்ஜு, நாடி ஆகிய பத்து பொருத்தங்களும் உள்ளவாறு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஜாதகங்களிலிருந்து ஆராய்ந்து சிபாரிசு செய்கிறோம். அனைத்து சாதி, மத உட்பிரிவினரும் பதிவு செய்துகொள்ளலாம்.

கணிப்பொறிமயமாக்கப்பட்ட (இன்டர்நெட், வெப்சைட்) உலகளாவிய திருமண தகவல் மையம் மூலம், ஜோதிட பொருத்தங்கள் விவரங்களுடன் அனைத்து சமூகத்திலும் அவரவர் தகுதிக்கு மணமகள், மணமகன் புகைப்படத்துடன் விபரங்கள், விலாசங்கள் அறிய பதிவுக் கட்டணம் ரூ.500/- மட்டும். திருமணத்திற்கு பிறகு எந்த கட்டணமும் கிடையாது. பதிவுசெய்ய தொடர்பு கொள்ளுங்கள் :

கம்ப்யூட்டர் ஜாதகம் மிகமிகத் துல்லியமாக தமிழில் கணித்துத் தரப்படும்.

ஜோதிட வல்லுநர்களைக் கொண்டு கணிக்கப்பட்ட திருக்கணிதம் மற்றும் வாக்கிய பஞ்சாங்கங்களின் அடிப்படையில் மிகத் தெளிவாக கணித்துத் தரப்படுகிற ஜாதகத்தில் ராசி, பாவம், நவாம்ச குண்டலிகள், ஜன்ம நட்சத்திரத் தசையிருப்பு, ஸர்வாஷ்டக வர்க்க நிலை, சப்த வர்க்கம், கிரக சாரங்கள் (பாவகைகள் உட்பட) முதலான எல்லாம் அடங்கியிருக்கும். மிகக் குறைந்த கட்டணம் ரூ.100/- மட்டுமே.

ஒரு ஜாதகம் கணிக்கத் தேவையான விபரம், பெயர், பிறந்த ஊர் அல்லது அருகிலுள்ள நகரம், பிறந்த தேதி மற்றும் பிறந்த நேரம் இதுமட்டுமே போதுமானது.

நேரில் வருபவர்களுக்கு கட்டணம் ரூ.100 மட்டுமே. வெளியூர்களில் உள்ளவர்கள் (36 பக்கங்கள்) முழு ஜாதகம் அஞ்சல் மூலம் பெற ரூ.25/ஐ சேர்த்து ரூ.125/- (நூற்றி இருபத்தைந்து) "மாங்கல்யம்" என்ற பெயரில் M.O அல்லது D.D. எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.




மாங்கல்யம்

(உலகளாவிய கணிப்பொறிமயமாக்கப்பட்ட மேரேஜ் மேட்சிங் சென்டர்)

13, பொன்னம்பல வாத்தியார் தெரு, (கபாலீஸ்வரர் கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை - 600 004.

Tel : 4616466, Fax : 4616311 E- mail : sivasiva@vsnl.net




... பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வரன்கள் உள்ள ஒரே மேரேஜ் மேட்சிங் சென்டர்

ஷி.எஸ்.எஸ்.

3

முஸ்லிம்களுக்கு தனி நாடு வேண்டும் என்ற பிடிவாதத்தில் ஜின்னா ஜெயித்துவிட்டார். இந்தியாவிலிருந்து தனியாகப் பிரிந்த பகுதி பாகிஸ்தான் ஆனது. இரண்டுக்கும் இடையில் சிக்கிக்கொண்ட காஷ்மீருக்கு நெருக்கடி அதிகமானது. இரு தரப்பிலிருந்தும் மாறி மாறி அழைப்புகள், தங்களுடன் தான் காஷ்மீர் சேர வேண்டுமென்று.


வெளிப்படையாகப் பார்த்தால் இது பெரிய கௌரவம். ஆனால் இது ஒரு விதத்தில் பயமுறுத்தலும்கூட. அதுவும் ஜின்னா சாம, தான, பேத, தண்டம் என்ற அத்தனை வழிகளையும் கையாண்டார். ஜம்மு காஷ்மீரின் அப்போதைய மன்னரான ஹரி சிங்குடனும், மன்னருக்கு எதிராக ஜனநாயகப் போர்க்கொடி தூக்கிய ஷேக் அப்துல்லாவுடனும் தனித்தனியாகப் பேசினார். இருவருமே இதற்கு உடன்படவில்லை.



சேர ஒப்புக் கொள்ளவில்லை என்றாலும் பாகிஸ்தானை முழுக்க எதிர்த்துக் கொள்ளவும் முடியாத நிலையில் இருந்தது ஜம்மு காஷ்மீர். காரணம் பாகிஸ்தான் வழியாகத்தான் அவர்களுக்குத் தேவையான பல பொருள்கள் வந்து கொண்டிருந்தன. ஹரிசிங் பாகிஸ்தான் அரசுடன் ஓர் ஒப்பந்தம் போட்டுக் கொண்டார். 'ஸ்டாண்ட் ஸ்டில் ஒப்பந்தமான' இதன்படி பாகிஸ்தான் எக்காலத்திலும் தன் நாட்டின் வழியாக காஷ்மீரை வந்தடையும் பொருள்களுக்கு இடைஞ்சல் செய்யக் கூடாது.

பெருவாரியான காஷ்மீரிகள் முஸ்லிம்கள் தான். எனவே எப்படியும் காஷ்மீர்





நம்மிடம்தான் வரப் போகிறது'' என்ற நம்பிக்கையும் பாகிஸ்தான் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஒரு காரணம்.

காஷ்மீர்!

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தபோது, சிறிதும், பெரிதுமாக 565 ராஜ்ஜியங்கள் இருந்தன. மன்னர்களால் ஆளப்பட்டு வந்த இவை, மொத்த இந்தியாவின் பரப்பளவில் சுமார் ஐந்தில் இருபங்கு அளவு இருந்தன. இவற்றிற்கு ஓர் அறிக்கை அனுப்பப்பட்டது. இதன்படி அவர்கள் இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றுடன் சேர்ந்து கொள்ளலாம். இந்த இணைப்புப் பத்திரத்தை (Instrument of Accession) சம்பந்தப்பட்ட மன்னரே கையெழுத்திட்டு பிரிட்டிஷ் அரசுக்குக் கொடுத்துவிட வேண்டும்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டுமே குதிரை பேரங்களில் இறங்கின என்றாலும் இந்த விஷயத்தில் தாயைவிடக் குட்டி பல மடங்கு முன்னேறத் துடித்தது.

அதுவும் ஜுனாகத் பகுதியின் நவாபை பாகிஸ்தான் மிகவும் வற்புறுத்தியது. இந்தியாவின் தென்பகுதியில் ஆட்சி செய்த ஹைதராபாத் நிஜாமிடம் ''பாகிஸ்தானோடு சேருங்கள். இல்லாவிட்டால் குறைந்தது சுதந்திர நாடாகவாவது இருந்து விடுங்கள்'' என்றார் ஜின்னா கள்ளத்தனத்துடன். அவ்வளவு ஏன், ஜெய்ப்பூர், ஜோத்பூர் போன்ற பகுதிகளின் மன்னர்களுக்குக் கூட ஆசை வார்த்தை காட்டினார் (இந்த மன்னர்கள் இந்துக்கள்!) ஆனால் பாகிஸ்தானின் முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டன.

இந்தப் பதற்றச் சூழல் காஷ்மீரையும் தொற்றிக்கொண்டது. இந்தியாவோடு இணைய மன்னர் ஹரிசிங்கிற்கு ஆரம்பத்தில் ஒரு தயக்கம் இருந்தது. இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்பதால் அதில் மன்னராட்சியை நடத்த முடியாதே!

அதேசமயம் மன்னரே ஒரு இந்து என்பதோடு ஜம்மு காஷ்மீரிலும் கணிசமான இந்துக்கள் இருந்ததால் தமது நாட்டை பாகிஸ்தானோடு (தன்னை ஒரு முஸ்லிம் நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது பாகிஸ்தான்) இணைக்கவும் அவருக்குப் பிடிக்கவில்லை.

இரண்டுடனும் சேராமல் தனியாகவே இருந்தால் என்ன என்று யோசிக்கத் தொடங்கினார் ஹரிசிங்.




ஆனால் அதில் பலவித சிரமங்கள். காஷ்மீரின் மிகப் பெரும் கட்சியின் தலைவரான ஷேக் அப்துல்லா, தனி நாடாக இயங்க முடியாத பட்சத்தில் காஷ்மீர் இந்தியாவுடன் சேருவதே ஏற்றது என்ற கருத்தை வெளிப்படையாகக் கூறத் தொடங்கினார். பாகிஸ்தான் கோப வெறி கொண்டது.

"காஷ்மீர் மக்களே, நீங்களே தீர்ப்பு சொல்லுங்கள். யாரோடு இணைவது உங்களது விருப்பம்? எங்களுடனா? பாகிஸ்தானுடனா?" என்று ஜவஹர்லால் நேருவும் வல்லபாய் படேலும் நேரடியாகக் கேட்க, ஜின்னாவின் ஆத்திரம் உச்சத்தை எட்டியது. அதேசமயம் ஜுனாகத்தில் இதே போன்ற ஒரு கேள்வியை எழுப்பியபோது பாகிஸ்தானுக்கு ஆதரவாக 91 வாக்குகளும், இந்தியாவுக்கு ஆதரவாக சுமார் இரண்டு லட்சம் வாக்குகளும் கிடைக்க, பாகிஸ்தானுக்குக் கிலி ஏற்பட்டது.

காஷ்மீர் கை நழுவிப் போய்விடுமோ?

காஷ்மீர் மக்களிடம் இதுபோன்ற கருத்துக் கணிப்புகளை நடத்த பாகிஸ்தான் ஒப்புக் கொள்ளவில்லை. கோபவெறியில், தான் ஏற்கெனவே ஹரிசிங்கோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியது. பெட்ரோல், நோட்டு அச்சடிக்கத் தேவைப்படும் காகிதம் போன்ற பல அடிப்படைத் தேவைகள் காஷ்மீரை எட்ட முடியாத அளவுக்கு வழியில் தடை போட்டது.



"ரொம்பத்தான் அலுத்துக்கறீங்களே; உங்கம்மா சமையலுக்கும் என் சமையலுக்கும் என்ன வித்தியாசத்தைக் கண்டுட்டீங்க?"

"சாப்பிடுவதற்கும் சாப்பிட்டுத் தொலைப்பதற்கும் உள்ள வித்தியாசம் தான்!"

- உ. ராஜாஜி

'ஒருவேளை மக்களின் கருத்து மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்று உலக நாடுகள் கூறிவிட்டால் என்ன செய்வது?' இப்படியும் யோசித்த பாகிஸ்தான் குள்ளநரித்தனமாக தனது நாட்டைச் சேர்ந்தவர்களை முக்கியமாக பஷ்துன் இனத்தைச் சேர்ந்தவர்களை, கொஞ்சம் கொஞ்சமாக காஷ்மீரின் எல்லைக்குள் ஊடுருவவிட்டது. அப்படி ஊடுருவியர்கள் ஏதோ அப்பாவி மக்களல்ல, ஆயுதங்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள்.

1947 ஆண்டின் கடைசி மூன்று மாதங்கள் முக்கியமாக அக்டோபர் மாதம் - காஷ்மீரின் சரித்திரத்தைப் புரட்டிப் போட்டது. அந்த மாதம் இருபத்தி இரண்டாம் தேதி தான் பாகிஸ்தான் மேற்கூறிய வகையில் தனது ஒப்பந்தத்தை மீறியது.

இதோடு நிறுத்திக் கொள்ளாமல் நேரடியாகவே தனது இராணுவத்தை காஷ்மீருக்குள் அனுப்பியது பாகிஸ்தான். முஸாபராபாத் என்ற பகுதியைக் கிட்டத்தட்ட நிர்மூலமாக்கினார்கள் பாக் ராணுவத்தினர். ரஜோரி, பரமுல்லா போன்ற பகுதிகள் பெரிதும் சேதப்படுத்தப்பட்டன.

திகிலடைந்த ஹரிசிங் இந்தியாவின் உதவியைக் கோரினார். ஹரிசிங்கும் ஷேக் அப்துல்லாவும் ஓரணியில் இணைந்தனர். ஜம்மு காஷ்மீரின் நிர்வாகப் பொறுப்பை ஷேக் அப்துல்லாவிடம் ஒப்படைத்தார் ஹரிசிங். இப்போது ஷேக் அப்துல்லாவும் இந்தியாவின் உதவியை வேண்டினார்.

இந்தியா கொஞ்சம் தயங்கியது. தவிர, பிரிட்டிஷ் அரசின் கடைசி இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த மவுண்ட்பாட்டன் இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்டினார். சர்வதேச சட்டங்களின்படி இந்திய ராணுவம் காஷ்மீருக்குள் நுழைவது முறையல்ல என்பதுதான் அது.

மன்னர் ஹரிசிங் இந்தியாவுடன் இணைய ஒப்புக்கொண்டார். அக்டோபர் மாதம் 26ம் தேதி ஹரிசிங் இந்தியாவுடன் ஜம்மு காஷ்மீரை சேர்த்துக் கொள்வதற்கான இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். சுமார் ஐந்நூறு மன்னர்கள் தங்கள் பகுதிகளை இந்தியாவுடன் இணைக்குமாறு அளித்த அதே வார்த்தைகள் அடங்கிய ஒப்பந்தம்தான் இதுவும்.

ஆனால் மற்ற மாநிலங்களைப் போல அல்லாமல் காஷ்மீருக்கு, தனி அந்தஸ்து கொடுக்க வேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்பட்டது பெரும் விந்தை.

(தொடரும்)

விமானத்தில் பறந்து ஒரு வெட்டு!

கஸ்டம்ஸ் வரி ஏதும் கட்டாமல் இறக்குமதி செய்யப்பட்ட விஷயங்கள்:

● யோஷிரோ நகமஸ்டு. ஜப்பானியரான இவர் அண்மையில் ஒரு புதுமையான ஷூவைக் கண்டுபிடித்திருக்கிறார். குஷன் எஃபெக்ட்டில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஷூக்களை அணிந்துகொண்டு சாதாரணமாக நடந்து செல்ல முடியாது. ஜாலியாக குதித்து, குதித்துத் தான் செல்ல முடியும். இதன் விலை என்ன? நூற்று அறுபது டாலர். சுமார் எட்டாயிரம் ரூபாய்!

● அண்மையில் ஏதென்ஸ் நகரில் நடந்த விசித்திரமான சம்பவம் இது. குழந்தையுடன் பஸ்ஸில் ஏறினார் ஒரு பெண்மணி. பயணத்தின் போது, மொபைல் ஃபோனில் பேச ஆரம்பித்தார். தாம் இறங்க வேண்டிய ஸ்டாப் வந்தவுடன், பக்கத்து சீட்டில் படுக்க வைத்திருந்த குழந்தையை மறந்துவிட்டு, பஸ்ஸிலிருந்து இறங்கிப் போய் விட்டார்!

பஸ் டெப்போவை அடைந்தவுடன், குழந்தையின் அழுகுரல் கேட்ட டிரைவர், குழந்தையை பஸ் கம்பெனி வசம் ஒப்படைத்து விட்டார். அம்மா வந்து குழந்தையை இன்னமும் கேட்கவில்லையாம்!





● ஸ்பெயின் நாட்டில் அஸ்டோரியா பேலஸ் ஓட்டலில் சாப்பிடுகிறவர்கள் சமீபகாலமாக, அந்த ஊரில், வெயில் இல்லாமல் ஜில்லென்று இருந்தால் ஜாலி என்று நினைக்கிறார்கள். காரணம், அந்த ஓட்டலில் சாப்பாட்டின் விலை, அன்று எத்தனை டிகிரி வெயிலோ, அத்தனை டாலர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தினமும் பிற்பகல் மூணு மணிக்கு எத்தனை டிகிரி வெயில் என்று பார்க்கிறார்கள். அதன் பின் வருகிற கஸ்டமர்களிடம் வெயிலுக்கேற்ற கட்டணம் வசூலிக்கிறார்கள்!

சீதோஷ்ணம் மைனஸில் போய்விட்டால், சாப்பாடும் போட்டு, கையில் காசும் கொடுத்தனுப்புவார்களோ!

● நம் ஊரில் காளைச் சண்டை, சேவல் சண்டை என்று பார்த்திருக்கிறோம். இங்கே நீங்கள் பார்ப்பது சிலந்திச் சண்டை. ஆம்! பெண் சிலந்திகள் சண்டையிடும் போட்டியொன்று ஆண்டுதோறும் ஜப்பானில் கஜ்கி என்ற ஊரில் நடக்கிறது. படத்தில் சிலந்திச் சண்டையை உற்றுப் பார்க்கிறார் போட்டி நடுவர். இது எப்படி இருக்கு?

● அடி பெலன் என்பவர் சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து ஜப்பானுக்கு விமானத்தில் அவசரம் அவசரமாகப் பறந்து சென்றார். எதற்காக? இங்கிலாந்தின் பிரபல கால்பந்து வீரரான டேவிட் பேக்ஹாமுக்குத் தலைமுடி வெட்டி விடுவதற்காகத்தான்!

- மானஸா

ஆய்குடி காவலன்

குருஜி ஏ.எஸ். ராகவன்


அருணகிரிநாதர் எத்தனையோ பாவங்களில் முருகனைப் பாடியிருக்கிறார். பல பாடல்களில் – ஏன், அனைத்துப் பாடல்களிலும் என்று கூடச் சொல்லலாம்– அவன் திருப்பாதங்களை மறவாமல் பற்றுவதற்கு அவன் அருளையே வேண்டுகிறார். எப்படிப்பட்ட உறுதியுடன் பற்ற வேண்டும் என்பதற்கு ஒரு உதாரணத்தை ஆய்குடி திருப்புகழில் எடுத்துச் சொல்கிறார் அருணகிரிநாதர்:

சூரனை வென்றவனே! மார்க்கண்டேயனைக் காக்க யமனை உதைத்த திருவடியாளனான பரமேஸ்வரனுக்கே பிரணவத்தை உபதேசித்தவனே! பிரமனைச் சிறையிலிட்ட ஆய்குடிக் காவலா!

இல்லற பாச பந்தங்களிலிருந்து கரையேறும் அடியவர்களைப் போல் உறுதியான மனநிலையுடன் உன் திருவடிகளைப் பற்றிக் கொண்டு, வினைப்பயனால் ஏற்படும் பிறவிகளின் துன்பத்திலிருந்து விடுதலை பெறவேண்டும்!

துறவறம் கொள்ளுவோரின் வைராக்கியத்துடன் பற்ற வேண்டுமாம் அவன் திருவடிகளை!






தென்காசி நகருக்கு வட கிழக்கே ஆறு கி.மீ. தொலைவில் உள்ள ஆய்குடி ஸ்ரீ பால சுப்ரமண்ய சுவாமியைப் பார்த்தால், நமக்கு இந்த வைராக்கியம் வருகிறதோ இல்லையோ அவனிடத்தில் நிச்சயமாக பற்று ஏற்பட்டு விடும்! ஏனெனில் அவன் குழந்தை முருகன். பிள்ளை வரம் வேண்டி வரும் இல்லறத்தாரின் குறை தீர்ப்பவனாகப் பிரசித்தியும் பெற்று விட்டவன். சம்சாரத்தையும் ஆதரித்து சரணாகதியையும் ஏற்கும் அற்புதத் திருவிளையாடலில் களிக்கும் முகம் பூரிக்க நிற்கிறான் ஆய்குடி காவலன்!

ஊரைப் பாருங்கள்! இயற்கை எழிலும் பசுமையும் வளமும் மிகுந்த கிராமம். அனுமன் நதி. அதன் தென்கரையில் ஸ்ரீ பால சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில்.

அருணகிரி நாதர் ஆய்குடிக் காவலனைப் பாடியிருப்பதால் அவர் காலத்துக்கு முன்பே இக்கோயில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆய்குடி அந்தணர் அக்ரஹாரத்தில் வசித்து வந்த சிறந்த முருக பக்தரான ஒரு சுவாமிகளுடைய சமாதி அனுமன் நதிக்கரையில் இருந்தது. அவர் குலத்தினர் சமாதியில்



தவறாது வழிபட்டு வந்தனர். கிராமத்தின் கீழ்ப் பகுதியிலுள்ள மல்லபுரம் குளத்திலிருந்து ஒரு சிறிய முருகன் விக்ரகம் கண்டெடுக்கப்பட்டது. அதை முருக பக்தரான சுவாமிகளின் சமாதி யின் மேலேயே பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். சாதாரண ஓலைக் கீற்றுப் பந்தலின் கீழ் நடந்து வந்தது வழிபாடு. 1941ல் தான் இங்கே பெரிய ஆலயம் எழுந்தது என்று வரலாறுகள் கூறுகின்றன.

இக்கோயிலுக்குத் தெற்கே சிவன் கோயில் ஒன்று இருக்கிறது. அதில் காளகண்டேஸ்வரர், சௌந்தர்ய நாயகி என்ற அழகான திருப் பெயர்களுடன் இறைவனும் இறைவியும் அருள் புரிகிறார்கள்.

நதிக்கரை பால சுப்ரமண்யர் சிறு குழந்தை யாக ஒரு முகம், நான்கு திருக்கரங்களுடன் கிழக்கு நோக்கி நிற்கிறார். முன்னிரு கரங்கள் அபய – வரதமாகவும் பின்னிரு கரங்கள் வஜ்ரா யுதம், சக்திவேல் ஏந்தியும் காணப்படுகின்றன. கால்களில் தண்டையும் சதங்கையும் கொஞ்ச, மயில் மேவிய முருகனாக விளங்குகிறான்.

உத்ஸவ விக்ரஹம், இந்த மூலஸ்தான

முருகனை அச்சில் வார்த்தாற்போல் அமைந்திருப்பது தனிச் சிறப்பு. உத்ஸவர் பெயர் ஸ்ரீ முத்துக்குமார சுவாமி. அவர் அருகே வீரவாகுத் தேவர் துணையாக நிற்கிறார்.

ஆய்க்குடி பாலமுருகனை நினைத்து விரதமிருந்தால் குழந்தைப் பேறு உண்டாகும்; மணமாகாதவர்களுக்குத் திருமணம் ஆகும் என்று பிரசித்தமாய்ப் பேசப்படுகிறது.

படிப் பாயசப் பிரார்த்தனை பற்றி ஊர் உலகமெல்லாம் அறியும்:

அனுமன் நதியின் படித்துறையில் பாயசம் செய்து படியில் பரிமாறி உண்ணும்போது அங்குள்ள குழந்தைகளுடன் முருகனும் சேர்ந்து உண்கிறானாம்.

கோயிலில் ஆறு கால பூஜை அமோகமாக நடக்கிறது. மூலவருக்கு வைதீக முறைப்படியும், உத்ஸவருக்கு ஆகம முறைப்படியும் ஆராதனை.

இத்தலத்து விபூதி பிரசாதத்தை, தல விருக்ஷமான



அரச மரத்தின் இலையில் வைத்துத் தருவது மற்றுமொரு விசேஷம்.

முருக பக்தரான சித்தர் ஒருவர், இதே தலத்தில் உள்ள சிறு குன்றின் உச்சியில் விநாயகர் கோயிலில் தமது இஷ்ட தெய்வத்தை உபாசித்து வந்தார். அனுமன் நதிக்கரையில் ஜீவசமாதி அடைந்தார் சித்தர். குமரக் கடவுளுடன் இவர் ஐக்கியமாகிவிட்டதாகவும் கோயிலின் பின்னால் உள்ள பாம்புப் புற்றில் இவர் இன்னமும் சர்ப்ப ரூபத்தில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இச் சித்தர் வழிபட்ட பஞ்சாயதன பூஜை மூர்த்தங்களான கணபதி, அம்பிகை, சிவன், மகா விஷ்ணு, சூரியன் முதலியவை பாலசுப்ரமண்ய சுவாமியின் பின்புறம் உள்ளன. ஐந்து தெய்வங்களுக்குமான ஸ்தல விருக்ஷங்கள்_ அரசு, வேம்பு, கறிவேப்பிலை, மா, மாதுளை என ஐந்தும் இங்கே காணக்கிடைக்கின்றன.

கந்த சஷ்டி விழாவை ஆய்க்குடியில் கொண்டாடும் அழகே தனி. சூர சம்ஹாரத்தை ஒரு யுத்த களத்தில் நடக்கும் நிஜ நிகழ்ச்சி போலவே நடத்துகிறார்கள்.

காளகண்டேஸ்வரர் – சௌந்தர்ய நாயகி ஆலயத்தின் முன் பெரிய மைதானம். அங்கே அம்மையப்பர் சாட்சியாக நடைபெறுகிறது வைபவம்! யானைமுகன், சிங்க முகன், சூர பத்மன் முகங்கள் மரத்தால் செய்யப்படுகின்றன. மூன்று பக்தர்கள் விரதமிருந்து அவற்றை அணிகிறார்கள்.

வீரவாகு சின்ன மயில் வாகனத்தில் ஆரோகணிக்க, முத்துக்குமாரசுவாமி பெரிய மயில் வாகனத்தில் அமர, அங்கே இரண்டு படைகள் மோதுகிற காட்சி தத்ரூபமாக நடிக்கப்படுகிறது. இந்த வினோதத்தைப் பார்க்க அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து திரண்டு வருவர் மக்கள்.

ஆய்க்குடி என்ற பெயர் 'ஆயர்குடி' என்பதிலிருந்து மருவி வந்ததாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள். இடையர் குலத்தினர் அதிகமாக வாழ்ந்த இடம் என்பதால் அப்பெயர் வந்திருக்கலாம். கடையேழு வள்ளல்களுள் 'ஆய்' என்பவன் ஆண்ட ஊராதலால் இப்பெயர் என்றும் சொல்லப்படுகிறது. (பழனிக்கு கிழக்கே 6 கி.மீ. தூரத்தில் இருப்பது வேறு ஒரு ஆய்க்குடி)


இத்தலம் குறித்த பிள்ளைத் தமிழ் பாடல்களில் ஆய்க்குடி, ஆயர்குடி என்ற இரண்டு பெயர்களும் காணப்படுகின்றன.

சிவராமலிங்கம் பிள்ளை என்பவர் இயற்றிய பிள்ளைத் தமிழ்ப் பாடல் வரிகள் இவை:

"சிந்தா குலத்துக் கொருமருந்தே!
தேவர் புகழ்சே னாபதியே!
இத்திக் குஞ்செந் தமிழ்த்தேனே!
திகழ்பா வலருக் கருள்விருந்தே!
தந்தா யமுதந் தானருந்தச்
சத்தா யுதித்த தனிமுதலே!
சதுர்வே தத்தி னுண்மைதனைத்
தானாய்க் காட்டுஞ் சண்முகனே!
வந்தா தரிக்குந் துணையாக
மயில்வா கனத்தி லேறிமுனம்
வள்ளி தெய்வ யானையோடு
மகிழ வரும் வேலாயுதனே!
செந்தா மரைத் தேனெனத் தமிழைச்
செப்பும் வாயாய் தாலேலோ
தென்றல் வலங்கொள் ளாய்க்குடிவாழ்
செல்வா தாலோ தாலேலோ!"

'பேசும் பொற்சித்திரமே!' என்று பாரதியார் குழந்தை கண்ணம்மாவைப் பாடினார். இந்த ஆய்க்குடி பாலமுருகனோ 'செந்தாமரைத் தேனெனத் தமிழைச் செப்பும் வாயான்!'

பிள்ளையாகவும் தமிழாகவும் பிள்ளைத் தமிழாகவும் இருப்பவன் அவனேயல்லவா!









எங்கே? எதிலே?

மேலே தரப்பட்டுள்ள பிரபலங்களின் கையெழுத்துகள் அனைத்தும் ஒரே பதிவேட்டில் உள்ளன. அது எங்கே?

(கர்நாடக மாநிலம் கோலார் தங்கச் சுரங்க நிறுவனப் பதிவேட்டில் உள்ளன.)

தகவல் : மு.ரா.பாலாஜி



கல்லாப்பெட்டியை மனத்தில் வைத்துக் கதை பண்ணுகிற தமிழ் சினிமாவில் சமுதாய நலனுக்காக படமெடுப்பது பெரிய சவால். இதுவரை நடிகராக மட்டும் முகம் காட்டி வந்த அருண் பாண்டியன், தமது நூறாவது படத்தை சமூக உணர்வுடன் எழுதி, இயக்கி, தயாரித்திருக்கிறார்.

தானிய உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைந்தது உண்மையென்றால், ஒரிஸ்ஸா பட்டினிச் சாவுகள் ஏன்? ஏழை மக்களுக்குக்கிடைக்க வேண்டிய ரேஷன் அரிசி, கள்ளச்சந்தை மாஃபியாக்களுக்குக் கைமாறும் அவலத்தைத் தடுத்து நிறுத்த வேண்டியது யார்?

தேவன்

இதுதான் கதையின் மையப் புள்ளி. ஆனால் படம் தோற்றுவிடக் கூடாதே என்கிற காய்ச்சலில், ஃபார்முலா கஷாயம் குடித்து, விறுவிறுப்பான வியாபாரத் திரைக்கதை அமைத்திருக்கிறார் இயக்குனர். நல்ல வேளையாக காட்சி அமைப்புகள் புதிதாக இருப்பதால் பொறுமையோடு படம் பார்க்க முடிகிறது.

இயக்குனர், எடிட்டர், இசையமைப்பாளர் ஆகிய மூவர் கூட்டணியின் அபாரத் திறமைக்கு, கட்டியம் கூறுவது போல, ஹாலிவுட் டெரர் படங்களை நினைவுபடுத்துகின்றன தொடக்கக் காட்சிகள்.

மலையாளப் படங்களில் தமிழ் பேசும் பாத்திரங்களில் ஒன்றை டிபிகல் வில்லனாகச் சித்திரிக்கும் சமீபத்திய போக்கு, இயக்குனரின் கோபத்தைக் கிளறியிருக்க வேண்டும். இதில் 'சேட்டாரகு' என்ற பெயரோடு மாஃபியா வில்லன்.

மலையாளத்திலிருந்து வில்லனாக வருகை புரிந்திருக்கும் வர்மா வரும் காட்சிகளில் அடி வயிறு கலங்குவது உண்மையென்றால், ஒரிய நடிகர் அஸ்ருமோச்சன் மொகந்தி ஒரே ஒரு காட்சியில் தோன்றி நம் கண்களைக் குளமாக்குவதும் உண்மை.

சி.பி.ஐ. அதிகாரியாக மிடுக்கு குறையாத பாத்திரத்தில் தோன்றும் விஜய்காந்த், மரத்தைச் சுற்றி டூயட் பாடவில்லை. அவர் பின்னால் 'லோ லோ' என்று எந்த கதாநாயகியும் அலையவில்லை. இந்த ஆண்டின் தமிழ் சினிமா அதிசயம்!

வெளிநாட்டுக் கடைத் தெருக்கள், பூங்காங்கள், பனிமலை அடிவாரங்களில் நின்று கொண்டு மாங்கு மாங்கென்று ஆடி, தமிழ் சினிமாக்களை உலகத் தரத்துக்கு (!) எடுத்துப் போகும் பாடல்கள் இல்லாததும் பெரிய ஆறுதல்.

— விஷுவல்தாசன்

● ஆவரேஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



Modular Workstations

உங்களின் ஃபர்னிச்சர் கனவுகள் அனைத்தும் இங்கே நிறைவடைகின்றன.



ஃசோபாக்கள்



டைனிங் டேபிள் / சேர்



கட்டில் / மெத்தை


Sathya

ஃபர்னிச்சர் உலகம்

LIFETIME INVESTMENT

- SOFA SETS
- DINING SETS
- STUDY DESKS
- BOOKCASES
- BEDROOM FURNITURE
- RECLINER CHAIRS
- OFFICE FURNITURE

- STEEL ALMIRAHS
- WARDROBES
- KITCHEN CABINETS
- MOULDED FURNITURE
- ENTERTAINMENT SETS
- TEAKWOOD / ROSEWOOD FURNITURE
- COMPUTER FURNITURE




Almirahs



Filing Cabinets



Computer Tables



Cupboards



Mobile Racks

ESTABLISHED
1968

தரமான இந்திய
ஃபர்னிச்சர்களையே வாங்குவோம்!
இந்தியாவை வளமாக்குவோம்!

Major Credit Cards accepted

மாபெரும் ஃபர்னிச்சர் ஷோரூம்கள்

மைலாப்பூர் : சத்யா கார்ப்பரேஷன் (20,000 சதுர அடி) 69 & 70, இராயப்பேட்டை ஹைரோடு (வள்ளுவர் சிலை அருகில்) சென்னை - 4. ஃபோன் – 498 2930 / 31, 498 3929

அண்ணாநகர் மேற்கு - DABC Bldg., 6, M T H Rd, (TVS - பாடி எதிரில்), சென்னை - 50. ஃபோன் - 6544929/ 6545029

266, மேட்டுப்பாளையம் ரோடு, (சாயிபாபா கோவில் பஸ் ஸ்டாப்), கோயம்புத்தூர் – 43 ஃபோன் : 452929, 452930, 98422 42929

23, நந்தி கோவில் தெரு, தெப்பக்குளம், திருச்சி - 2, ஃபோன் - 704414

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka